சரசுவதி மகால் வெளியீடு எண் :- 284

# ஆலம் நபி கதைப் பாட்டு

வெளியீடு.

பன்மொழிப் புலவர், பேராசிரியர்,

மு. சதாசிவம்

சரசுவதி மகால் நூலகச் சங்கம்

தஞ்சாவூர்.

**1989** விலை ரூ. **15-00**

சரசுவதி மகால் நூலக வெளியீடு எண் ௨௮௪

# ஆலம் நபி கதைப் பாட்டு

பதிப்பாசிரியர்

**மீ. அமு. நாசீர் அலி**

தமிழ்ப்பேராசிரியர்

ஜமால் முகம்மது கல்லூரி

திருச்சி.

வெளியீடு.

பன்மொழிப்புலவர் பேராசிரியர்

**மு. சதாசிவம்**

இயக்குநர்

**சரசுவதி மகால் நூலகச் சங்கம்**

தஞ்சாவூர்

**1989** விலை ரூ. **15-00**

முதற்பதிப்பு :- அக்டோபர் 1989

வெளியீடு :- சரசுவதி மகால் நூலகச் சங்கம்

AALAM NABI KATAIP PAATTU

பதிப்பகம் :- லக்மி பிரிண்டர்ஸ்

# பதிப்புரை

ஆலம் நபிக் கதைப் பாட்டு என்ற நூல் சரசுவதி மகால் நூலகத்தின் 284-வது வெளியீடாகச் சிறப்புற வெளியிடப்படுகிறது. இந்நூலில் முகமது நபி அவர்களின் பேரனார் அசன் அவர்களின் மகன் அப்துல் காசிம் யசீது படையைக் கர்பலா வெட்ட வெளியில் சந்தித்துப் போரிட்ட வரலாறு காணப்படுகிறது. மக்களுக்கு எளிதில் சென்றடைய நாட்டுப்புறப் பாடல்களின் வடிவமான கண்ணிகளைப் புலவர்கள் பயன்படுத்தினர். இவ்வெளிமை ஆலம் நபிக் கதைப்பாட்டு நூலின் முழுமையும் தடையின்றிக் காணப்படுகிறது.

இந்நூலைத் திருச்சி ஜமால் முகமது கல்லூரியின் தமிழ்த்துறையைச் சார்ந்த முனைவர் மீ.அமு. நாசிர் அலி, சிறப்புறப் பதிப்பித்துள்ளார்கள். அன்னாருக்கு எனது மனம் நிறைந்த பாராட்டுக்கள். இந்நூல் விரைவில் வெளிவரச் செயலாற்றிய நூலக நிருவாக அலுவலர் திரு சீ. கிருஷ்ணன் அவர்களுக்கும், வெளியீட்டு மேலாளர் மற்றும் நூலகர் திரு அ. பஞ்சநாதன் அவர்களுக்கும், தமிழ்ப்புலவர் திருமதி ச. திலகம் அவர்களுக்கும், இந்நூலை நல்ல முறையில் விரைவில் அச்சிட்டுத் தந்துள்ள இலக்குமி அச்சகத்தாருக்கும் என் பாராட்டுக்கள். இந்நூல் வெளியிடுவதற்கு நிதியுதவி நல்கிய மத்திய அரசுக்கு நன்றி கூறி மகிழ்கிறேன்.

தஞ்சாவூர்
11. 10. 89

மு. சதாசிவம்
இயக்குநர்
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்

# முன்னுரை

இஸ்லாமியப் புலவர்கள் தமிழுக்கு ஆற்றியுள்ள தொண்டு அளப்பரியது. மரபு நிலையில் படைத்த இலக்கியங்களும், புதுவகை இலக்கிய வடிவங்களும் தமிழுக்குக் கிட்டின. தஞ்சை மகராஜா சரபோஜி சரசுவதி மகால் நூலகத்தில் பதிப்பிக்கப்படாத இலக்கியங்கள் பல ஓலைச் சுவடிகளில் பாதுகாப்பாக உள்ளன. அவற்றைப் பதிப்பித்து நூல் வடிவ மாக்க நூலக இயக்குநர் அரும்பணி ஆற்றி வருகின்றார். அதன் விளைவாக ஓலைச் சுவடியிலிருந்த ''ஆலம் நபி கதைப்பாட்டு'' எனும் இஸ்லாமியப் படைப் போரிலக்கிய வகையைச் சார்ந்த நூலைப் பதிப்பிக்கவும் அதற்குரிய உரையினை எழுதவும் எனக்கு வாய்ப்புக் கிட்டியது. இஸ்லாமிய நூல்களைப் பதிப்பிப்பதும் அறிந்து கொள்ள உரைகள் எழுதுவதும் எளிய பணியல்ல. இஸ்லாமிய வரலாறும், அரபுமொழி அறிவும், இஸ்லாமியத் தத்துவமும் அறிந்திருக்க வேண்டும். இவற்றின் அடிப்படையில் திறனாய் உரை எழுதியுள்ளேன்.

இத்தகு சிறப்பு வாய்ந்த பணியை எனக்கு நல்கிய தஞ்சை மகராஜா சரபோஜி சரசுவதி நூலகப் பொறுப் பாளர்கள் அனைவர்க்கும் எனது நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

இலக்கிய ஆர்வலர்கள் இந்நூல் வழி இஸ்லாமியக் கருத்துக்களை அறிந்து கொள்ள ஏதுவாக அமையும் எனப் பெரிதும் நம்புகிறேன். எளியேனுக்கு இவ் வாய்ப்பினை உருவாக்கித் தந்த வல்ல இறைவனை என்றும் நன்றியுடன் வாழ்த்தி வணங்குகிறேன்.

16 — 10 — 89
திருச்சி-21

மீ.அமு. நாசீர் அலி

# திறனாய்வுரை

பழமைக்கும் பழமையாய்ப் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் விளங்குவது தமிழ். உலக மொழிகளின் தொன்மைக்குரியதாய், இலக்கண இலக்கியங்களைப் பெற்றுச் சிறந்த மொழியாக இன்றும் நாளையும் நின்று நிலவும். லெமூரியாக் கண்டம் எனும் மிகப் பெரிய நிலப்பரப்பில் இம்மொழி வழக்கில் இருந்தது. கடல் நீரின் படையெடுப்பால் நிலங்கள் பிரிந்தன. தமிழகம் எல்லைக் கோடுகளை மிகச் சிறிய அளவில் பெற்றது. இருப்பினும் மொழி அனைத்து எல்லைகளையும் தாண்டி உலகில் வலம் வருகிறது. தன்னேரில்லா இலக்கியங்களைப் பெற்றதாலேயே தன்னிகரற்று விளங்குகிறது.

இலக்கியம் எனும் சொல் இலக்கு + இயம் எனப் பிரிக்கப் பட்டு, ஒரு குறிக்கோளை வெளிப்படுத்துவது எனும் பொருள் தந்து நிற்கும். மனித வாழ்விற்கு மகத்துவம் சேர்க்காத எந்த இலக்கியமும் நிலைத்து நிற்காது. "மனிதனின் மனமேடையில் வீசும் எண்ணங்கள் அவன் வாழ்க்கை நதியோரம் கிளைக்கும் சிந்தனைகள், அனுபவச் சுரங்கத்தின் வைரக் கருத்துக்கள், நெஞ்சலையின் முத்துச் சிதறல் தரும் கற்பனைக் கோலங்கள் - இவையே இலக்கியத்தைக் கவினுறு படைப்பாக ஆக்குகின்றன" என்பார் டாக்டர் ச.வே. சுப்பிரமணியம். தமிழ் இலக்கியங்கள் காலத்திற்கேற்ப, கருத்துக்களுக்கேற்ப வடிவங்களைப் பெற்று விளங்குகின்றன. ஒரே வகையான வடிவத்தைப் பெற்றிருக்குமே யானால் சீரிளமைத் திறம் வியந்திருக்க முடியாது. சொல், பொருள், சுவை புதியனவாக அமைகிறபோது இலக்கியம் காலத்தைத் தாண்டி நிற்கும்.

தமிழ் இலக்கியம் சங்க காலத்தில் அகவல், கலிப்பா, பரிபாடல் என்னும் செய்யுள் வடிவங்களைப் பெற்றிருந்தது. சங்க இலக்கியத்திற்குப்பின் கி. பி. முதல் இரண்டாம் நூற்றாண்டுகளில் வெண்பா செல்வாக்குப் பெற்றது. இதன்பிறகு கி. பி. ஏழாம் நூற்றாண்டு முதல் பக்திப் பாடல்கள் எழுந்த போது விருத்தம் என்னும் செய்யுள் வடிவம் உருவானது. கி. பி. மூன்றாம்

நூற்றாண்டிலிருந்து ஆறாம் நூற்றாண்டு வரை 'இருண்ட காலம்' என்பர். பதினேழாம் நூற்றாண்டில் செய்யுள் வடிவம் மாறி நாட்டுப் புறப்பாடல் வடிவங்களான சிந்து, கண்ணி, கும்மி முதலான வடிவங்கள் எழுந்தன. புலவன் கூறவேண்டியதை எளிமையாகவும், அதே காலத்தில் வாழும் மக்கள் புரிந்துகொள்ள ஏதுவாகவும் இவ்வடிவங்கள் அமைந்தன. காலத்திற்குக் காலம் அமைந்த செய்யுள் வடிவங்களின் மாற்றங்களைப் போலப் பாடு பொருளும் மாறிவந்தன. தனிமனிதப் புகழ்ச்சியிலிருந்து சமுதாய நிகழ்ச்சியைப் பாடும் நிலை உருவானது. மன்னனைப் பாடிய நிலை மாறி மகேசனைப் பாடி அதன்பின் மக்களைப் பாடும் நிலைஉருவானது. தமிழ்மொழியின் அகமும் புறமும் காலங்களுக்கேற்ப, மக்களின் மனநிலைகளுக்கேற்ப மாற்றம் பெற்று வந்தன. இன்னும் இம் மாற்றம் வசனகவிதை, புதுக்கவிதை, எதிர்கவிதை, ஹைக்கூ கவிதை என வடிவ மாற்றங்கள் பெற்று வருகிறது. ஒருமொழி சிறந்த மொழியாக உலக அரங்கில் விளங்க வேண்டுமானால் தன் தூய்மை கெடாது, தரங்குன்றாது, காலத்தை அதன் தன்மைக் கேற்ப உள்ளபடியே உண்மையாய்ப் பிரதிபலிக்க வேண்டும். ஒரு காலத்திற்குரிய நூலைப் படிக்கும் போது செய்யுள் வடிவமும், பாடு பொருளும், அக்கால மக்களின் மனநிலையை, கலைத்திறனை, உணர்ந்து கொள்ளும் ஆற்றலை வெளிப்படுத்த வேண்டும். இந் நோக்கில் தமிழ்மொழியின் இலக்கியங்கள் காலக்கண்ணாடியாக விளங்குகின்றன என்பது புகழ்ச்சியில்லை.

சிறந்து விளங்கும் மொழிக்குத் திறந்த உள்ளத்துடன் அனைத்து மார்க்கத்தைச் சேர்ந்தவரும் தொண்டு செய்துள்ளனர். சைவமும், வைணவமும், சமணமும், பௌத்தமும், கிறித்தவமும், இஸ்லாமும் ஆற்றியுள்ள தொண்டு மக்களை நெறிப்படுத்த, அதன் தன் எல்லைக்குட்பட்ட நிலையில் சிறப்புடன் விளங்குகிறது. மார்க்கங்கள் மனிதனைப் பக்குவப்படுத்துவதற்கே அன்றிப் பகைவனாக்க அல்ல. இஸ்லாமியர்களின் திருமறை அல்குர்ஆனில் இறைவன் "லகும் தீனுகும் வலிய தீன்" "உங்கள் மார்க்கம் உங்களுக்கு, அவர்கள் மார்க்கம் அவர்களுக்கு" என்று குறித்துள்ளான். கட்டுக்கடங்காது

வெட்ட வெளியில் திரியும் மனக்குரங்கைப் பிடித்து நிறுத்திப் பண்படவைக்கும் பணியாக சமய இலக்கியங்கள் விளங்குகின்றன. இப்பணியில் உயர்வு தாழ்வு இல்லை. தத்துவத்தில் குழப்பம் இல்லை. தத்துவத்தைச் செயலாக்கும் முறையிலேதான் மாற்றம் உள்ளது. மனிதன் தத்துவத்திற்குரியவனே ஒழிய சடங்கு, சம்பிரதாயங்களுக்குரியவன் அல்லன். இஸ்லாம் தமிழ் மண்ணில் தழைத்த போது, தன்னுடைய தத்துவங்களையும் மண்ணுக்குரிய மொழியில் மக்களுக்கேற்ற முறையில் நாளும் நிலைத்திருக்கக்கூடிய பாவடிவில் பாங்குற வடித்துக் கொடுத்தது.

தமிழ் மண், இஸ்லாம் கூறும் முதல் மனிதராக விளங்கிய ஆதம் நபியைத் தன் மடியிலே தவழவிட்ட பெருமைக்குரியது. அரபிவரலாற்றாசிரியர்கள் "சேரந்தீப்" என்று குறிப்பிடும் பண்டைத் தமிழகத்தின் ஒரு பகுதியாக விளங்கிய இன்றைய இலங்கையில்தான் ஆதம் நபி அடி எடுத்து வைத்தார். இன்னும் அங்கே 'ஆதம் பாவா மலை' இருந்து வருகிறது. ஆதம் அவர்களின் துணைவியார் 'ஹவ்வா' அரபு நாட்டின் தற்போதிருக்கும் துறைமுகப்பட்டினமான ஜித்தாவிலே அடியெடுத்து வைத்தனர். இருவரும் இருநூறு ஆண்டுகள் தங்களின் பாவம் கழியக் கண்ணீருடன் சுற்றித்திரிந்து இருவரும் மக்காவின் அருகிலுள்ள அரபாத் குன்றின்மீது ஒருவரை ஒருவர் சந்தித்தனர். பின்னர் இருவரும் இணைந்து தமிழகம் திரும்பி வாழ்வாங்கு வாழ்ந்து பிள்ளைச் செல்வங்களை ஈன்றனர். இதனை ஜார்ஜ் சேல் என்பவர் திருக்குர்ஆனுக்கு எழுதிய முகவுரையில் குறிப்பிடுகிறார். இவ்வரலாற்றை மெய்ப்பிக்கும் நிலையில் ஆதம் அவர்களின் மக்களான ஆபில், காபில் எனும் இருவரின் சமாதி இராமேஸ்வரம் புகைவண்டி நிலையத்திலிருந்து ஒரு நூறு மீட்டர் தொலைவில் இன்னும் இருந்து வருகிறது,

கி. மு. 178இல் நம் தமிழகத்திற்குப் போந்த அகதார் சைட்ஸ் என்ற கிரேக்கப் பிரயாணி ஒருவன் நம் தமிழகத்திலே ஸ்பேயியா (Sabaea) என்ற ஓர் ஊர் இருந்ததாகவும் அங்கு அரபிகளுக்கு மிகவும் செல்வாக்கு இருந்ததாகவும் குறிப்பிடுகின்றான் என்று இஸ்லாமிய வரலாற்று ஆசிரியர் அப்துற்றகீம் குறிப்பிடுகிறார்.

அரபிகளின் வருகை சங்க காலந்தொட்டே இருந்து வந்துள்ளது என்பது 'யவனர்' எனும் சொல்லாட்சியால் அறியலாம். இச் சொல்லிற்கு உரையெழுதிய நச்சினார்க்கினியர் 'சோனகர்' என்று குறித்துள்ளார். இலங்கையில் வாழ்ந்து வரும் முஸ்லீம்களை 'சோனகர்' என்றே இன்றும் அழைக்கின்றனர். திவாகர நிகண்டும் பிங்கலநிகண்டும் 'சோனகர்யவனர்' என்று குறிக்கும் போதும் 'சோனகர்' எனும் சொல்லை முன்னும் 'யவனர்' என்னும் சொல்லைப் பின்னும் குறிக்கின்றன. உரோமானியரும் கிரேக்கரும் தரைமார்க்கமாக வடஇந்தியாவிற்குள் நுழைந்தவர்கள். அரபியர்கள் செங்கடல் வழியாக இந்துமாக்கடல் நாடுகளுக்கும் மற்றைய கீழ்நாடுகளுக்கும் சென்றனர். அராபியர் கடல் மார்க்கமாகத் தமிழகத்திற்கு வியாபாரத்திற்காக வந்தனர் என்பதற்கு சங்க இலக்கியச் சான்றுகள் உள்ளன. பதிற்றுப்பத்திலே உள்ள 'பந்தர்' என்னும் சொல்லுக்குப் பண்டகசாலை என்று பொருள் குறித்துள்ளனர். 'பந்தர்' எனும் சொல் அரபுச்சொல். இதற்குப்பொருள் 'துறைமுகம் துறைபொருட் களஞ்சியம்' என்பனவாகும். பந்தர் என்னும் பெயரைக்கொண்ட துறைமுகப் பட்டினங்கள் இன்றும் உள்ளன. பரங்கிப் பேட்டை என்னும் ஊர் மஹ்மூது பந்தர் என்றும் கோவளத்துக்கருகில் 'சஹிது பந்தர்' என்றும் இடங்கள் உள்ளன. இக்குறிப்புக்கள் முகம்மது நபி தோற்றம் பெறுவதற்கு முன்பே அரபியர்கள் தமிழகத்தில் கொண்ட தொடர்பைச் சுட்டிக் காட்ட வல்லன.

கி.பி.7ஆம் நூற்றாண்டில் அரபு நாட்டில் ஏகத்துவ தீபத்தை உலகுக்குணர்த்திய முகம்மதுநபியவர்கள் தோன்றினார்கள். நபிகளாரின் சீடர்கள் இருவர் தமிழகம் வந்து இஸ்லாமியத் தத்துவத்தை உணர்த்தினார்கள். தமீம் அன்சாரி, உக்காஸா ஸஹாபி ஆகிய இருவரும் சஹீது பந்தரிலும், முஹம்மது பந்தரிலும் மறைந்தனர். அவர்களின் அடக்கவிடம் அங்குள்ளது. இந்நூற்றாண்டிலிருந்து இஸ்லாமியக் கோட்பாடுகளை மக்களுக்கு கூறி நெறிப்படுத்தச் சான்றோர் பலர் தொடர்ந்து வந்தனர். ஓர் இறைக்கொள்கையை இம்மண்ணில் வாழ்ந்தோர் மனமுவந்து ஏற்றனர்.

# அரபுத் தமிழ்

வணக்கத்திற்குரியவன் ஒருவனே! அவன் தனித்தவன், பேதம் அற்றவன், ஒளியே வடிவானவன் என்னும் இஸ்லாமியக் கருத்துக்களை வெளிப்படுத்த தமிழ் மொழியைப் பேச அறிந்த நிலையில், கவிதை வடிவம் தர இயலாதவர்களாக இருந்தனர். இருப்பினும் அரபு மொழியை அறிந்தவர்களாக இருந்தனர். முஸ்லீம்கள் அனைவரும் திருக்குர்ஆனை அரபு மொழி தெரிந்தாக வேண்டும். ஆதலால் தமிழ் ஒலியைஅரபு எழுத்துக்களில் ஒலிக்கச் செய்து இஸ்லாமியக் கருத்துக்களைக் கூறினார்கள். இதனால் அரபுத் தமிழ் என்னும் புதிய மொழியாக்கம் உருவானது. நாளடைவில் தாய்மொழியில் வல்லமை பெற்றதும் ஈடு இணையற்ற இலக்கியங்களை இஸ்லாமியப் புலவர்கள் தமிழ் அன்னைக்கு வழங்கி மகிழ்ந்தனர்.

# வரலாறு

இஸ்லாமிய இலக்கியங்களின் வரலாறு கி. பி. 12ஆம் நூற்றாண்டு முதல் தொடக்கம் பெறுவதாக அறிஞர் உவைஸ் 'பல்சந்தமாலை' எனும் நூலினைச் சுட்டிக் காட்டிக் குறிப்பிடுகிறார். களவியல் காரிகை உரையில் காணப்படும் எட்டுச் செய்யுட்களே இன்று இந்நூலுக்குரிய சான்றுகளாகும். இதற்குப்பின் இஸ்லாமிய இலக்கியம் தோன்றிய காலமாக 16-ஆம் நூற்றாண்டு காணப்படுகிறது. நான்கு நூற்றாண்டுகளில் இஸ்லாமிய இலக்கியங்கள் எழவில்லை என்று கருதமுடியாது. பாடப்பட்ட நூல்கள் அழிந்தோ சிதைந்தோ மறைந்தோ போயிருக்கவேண்டும். தமிழ் மண்ணில் தொன்று தொட்டு வரும் சாபக்கேடாக இது இருந்து வருகிறது. போற்றிப் பாதுகாக்க வேண்டிய இலக்கியங்கள் தலைமுறைகள் மாறும்போது மனநிலைகள் மாறி இருந்த இடம் தெரியாமல் போய் விடுகின்றன. இஸ்லாமிய இலக்கியங்கள் 16 ஆம் நூற்றாண்டு முதற்கொண்டு 20 ஆம் நூற்றாண்டு வரை செழித்தோங்கி வளர்ந்தன.

# நோக்கம்

இஸ்லாமியப் புலவர்கள் ஓர் இறைக்கோட்பாட்டை வெளிப்படுத்தும்போது உள்ளதை உள்ளவாறே உணர்த்தியுள்ளனர். இதனை ஒரு சமயப் பிரச்சாரக் கருவியாக்கிக் கொள்ளவில்லை. பிற மார்க்கங்களை, சமயக்கோட்பாடுகளை - ஏசுவதற்கோ குறைத்துக் கூறுவதற்கோ பயன்படுத்தவில்லை. உலகம் யாவையும் ஆக்கலும், அழித்தலும், காத்தலும் ஒருவனே அவன் ஒரு நாமம் ஓர் உருவம் இல்லாதவன் - எனும் கொள்கையை விளக்க அமைந்தவைகளாக இஸ்லாமிய இலக்கியங்கள் இன்றளவும் இருந்து வருகின்றன. ஓர் எழுத்திலும் மற்றவர்களைப் புண்படுத்தும் அசிங்கத்தனம் இல்லாத புனிதம் பெற்றவைகளாக இவ்விலக்கியங்கள் இம்மண்ணில் வேரிட்டு வளர்ந்தன. இஸ்லாமிய மக்களின் இதயத்தைப் பட்டை தீட்டவே இவ்விலக்கியங்கள் பிறந்தனவே அன்றிச் சமயப் பிரச்சாரத்திற்காக அல்ல என்பதைத் தெளிவுபட உணரவேண்டும்.

# செய்யுள் வடிவங்கள்

இஸ்லாமியப் புலவர்கள் மரபு நிலையில், இம்மண்ணில் இருந்து வந்த செய்யுள் வடிவங்களைக் கொண்டு இலக்கியங்களைப் படைத்தனர். புராணம், கலம்பகம், அந்தாதி, திருப்புகழ், மாலை, அம்மானை, சிந்து, தாலாட்டு, கும்மி, கோவை, ஏசல், திருப்பாடல், திரட்டு, பலபாடல்திரட்டு, நாடகம், ஞானப்பாடல்கள், தூது, சதகம், பள்ளு, வண்ணம், குறம் முதலிய இலக்கிய வடிவங்களை எண்ணங்களுக்கேற்ப நாமா, கிஸ்ஸா, படைப்போர், மசலா, முனாஜாத்து எனும் பெயர்களில் தமிழுக்கு வழங்கியுள்ளனர். இவை இஸ்லாம் தமிழ் மொழிக்கு வழங்கிய புதிய வடிவங்களாகும். இப்பெயர்களில் இஸ்லாமிய இலக்கியங்கள் மட்டுமே உள்ளன என்பது குறிக்கப்பட வேண்டியதாகும். இவ்விலக்கியங்களின் பாடுபொருள் இஸ்லாத்தின் ஏகத்துவத்தை விளக்கும், அல்லது இக்கோட்பாட்டிற்காக வாழ்ந்து மறைந்த சான்றோர்களின்

வாழ்வை விளக்கும். கிஸ்ஸா, மசலா, முனாஜாத்து அரபுப் பெயர்களாகவும் 'நாமா' பாரசீகப் பெயராகவும், படைப்போர் தூய தமிழ்ச் சொல்லாகவும் உள்ளன. கிஸ்ஸா என்பது கதை என்ற பொருளையும், மசலா 'கேள்வி' என்ற பொருளையும் முனாஜாத்து என்பது 'வேண்டல்' என்னும் பொருளையும், 'நாமா' என்பது கதை, வரலாறு என்னும் பொருளையும் குறிக்கும். இஸ்லாமியப் புலவர்கள் வழங்கிய இலக்கியங்களின் அரபுச் சொற்களும், பாரசீகச் சொற்களும், உர்தூசொற்களும் பரவலாகக் காணப்படும். காரணம் சில கருத்தை வெளிப்படுத்த உரிய சொல்லாலே சொன்னால் தான் இஸ்லாமிய மக்கள் அறிந்து கொள்வார்கள்.

## 'ஆலம் நபி' கதைப் பாட்டு

இந்நூல் தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரசுவதி மகால் நூல் நிலையத்தில் "ஓலைச்சுவடி" யில் உள்ளதாகும், ஓலையின் முதல் ஏட்டில் 'ஆலம் நபி கதைப் பாட்டு' என்று எழுதப் பட்டுள்ளது. நூலின் ஆசிரியர் பெயர் காணப்படவில்லை. நூல் எந்த ஆண்டில் இயற்றப்பட்டது என்றும் குறிப்பும் இல்லை, நூல் நுவல் பொருளை நூலை முழுவதும் படித்தறிந்து தெறிந்து கொள்ள வேண்டும்.

## பெயர்ப்பொருத்தம்

'ஆலம் நபி' எனும் சொற்றொடர் முஹம்மது நபி அவர்களைக் குறிக்கும். "ஆலநந்நபிதனை யடுத்து நோக்கினான்" (சீறாப்புராணம் 87 : 2) எனும் சீறாப்புராண வரியில் ஒரு காட்டரபி நபிகள் நாயகத்தைப் பார்த்தான் என்று குறிப்பிடுவார் உமறுப்புலவர். இந்நூலின் உள்ளே முழுமையாகப் பார்க்கும் போது முகம்மது நபி அவர்களின் பேரனார் ஹசன் அவர்களின் மகன் அப்துல்காசீம் யசீது படையைக் கர்பலா வெட்டவெளியில் சந்தித்துப் போரிட்ட வரலாறு காணப்படுகிறது. போரினைப் பாடும் நூல்களைப் "படைப்போரென்றும்", வரலாற்றைக் கதையாகக் கூறுமிடத்து, "கிஸ்ஸா" என்றும் இஸ்லாமிய இலக்கியங்களில் குறிப்பிடுவர். ஆனால் இவ்வோலைச் சுவடியில் 'கதைப்பாட்டு' என்று தூய தமிழில் எழுதியுள்ளார்.

படைப் போர்கள் பற்றிப் பதின்மூன்று நூல்கள் உள்ளன. இந்நாட்களில் சுக்கூன் படைப்போர் (1686) காலத்தால் முந்தியது. 'கிஸ்ஸா' எனும் சொல் குர்ஆனில் காணப்படவில்லையாயினும் 'கஸஸ்' என்னும் அடிப்படைச்சொல் காணப்படுகிறது. கிஸ்ஸா நூல்கள் 28 இருக்கின்றன.

'ஆலம் நபி கதைப்பாட்டு' எனும் தலைப்பில் வேறு நூல் இல்லை என்பது ஆய்வில் தெளிவானது. 'கதைப்பாட்டு' என்று மற்ற சான்றோர்கள் மீது பாடிய நூல்களும் காணப்படவில்லை.

# ஆலம் நபி கதைப் பாட்டும் இமாம் காசிம் படைப்போரும்

1978 இல் சென்னை ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸில் அச்சிடப்பட்ட நூலின் முகப்பில் "நபியுல்லா பேரில் முன்னோர்கள் பாடிய காஸீம் மாலையும் இமாம் காஸீம் படைப்போரும்" என்று குறிக்கப்பட்டுள்ளது. இதில் காயற்பட்டணம் கண்ணஹிமது மகுதூம் முகம்மதுப் புலவர் அவர்கள் பரிசோதித்து அச்சிட்ட பிரதிக்கிணங்க அச்சிடப்பட்டது என்றும் குறித்துள்ளனர். காஸிம் படைப்போரை இயற்றிய புலவர் அப்துல் காதிரு சாஹிபு என்று இஸ்லாமியக் கலைக்களஞ்சியம் இரண்டாவது தொகுப்பில் காணப்படுகிறது. (பக் 612)

"நபியுல்லா போரில் முன்னோர்கள் பாடியது" எனும் வரியால் அல்லாவுடைய நபியாகிய முஹம்மது நபியவர்கள் பேரில் முன்னோர்கள் பாடியது என்று பொருள் விளக்கம் பெறுகிறது. "மூப்படி நாளும் போற்றும் முத்திசேர் நபியுல்லாவும்" (சின்ன சீறா 4 : 45) எனும் வரியில் முஹம்மது நபி அவர்களைக் குறிக்க நபியுல்லா எனும் சொற்றொடர் பயன்படுத்தப்பட்டுள்ளது. (இந்நூலின் காலம் 1782 என அறிஞர் உவைஸ் குறித்துள்ளார்) ஆலம் நபி என்னும் சொல்லாட்சி அனைத்துலகிற்கும் நபியாக அருளப்பெற்றவர் எனும் பொருளைத் தந்து நிற்கிறது.

# பாடல்கள் அமைப்புமுறை

'ஆலம் நபி கதைப்பாட்டு' நூலில் முதல் பாடலில் இறைவனிடம் காத்தருள்வாய் என்று வேண்டுவதும், இரண்டாவது பாடலில் முகம்மது நபி, அலியார், அசேன், உசேன் இவர்களை வாழ்த்துவதும் காணப்படுகின்றன. கடவுள் வாழ்த்துப் பாடலுக்கு மேலே "ஆதியே துணை" என்று எழுதப்பட்டுள்ளது. மூன்றாவது பாடலிலிருந்து கதை தொடக்கம் பெற்று நூற்றி எண்பத் தெட்டாவது பாடலில் நிறைவு பெறுகிறது தொங்கல் எனும் தலைப்பில் நான்கு பாடல்கள் உள்ளன. இவ்வோலைச் சுவடியில் 192 பாடல்களே காணப்படுகின்றன. அனைத்துப் பாடல்களும் கண்ணிகளாகவும், தொங்கல் அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தமாகவும் உள்ளன.

'காசீம் படைப்போர்' எனும் நூலில் 218 பாடல்கள் உள்ளன. காப்பு என்னும் தலைப்பில் மூன்று பாடல்கள் அறுசீரடி ஆசிரியவிருத்தமாகவும், நான்காவது பாடல் இறைவனைக் காக்கவேண்டியும், ஐந்தாவது பாடல் முஹம்மது நபியையும் அவருக்குப்பின்வந்தகலீபாக்கள் நால்வரையும் வாழ்த்துவதாகவும் அமைந்துள்ளன. ஆறாவது பாடலிலிருந்து நூற்றித் தொன்னூற்றேழாவது பாடல் வரை கதை கூறப்பட்டு நிறைவு பெறுகிறது. தொங்கல் என்னும் தலைப்பில் பதினான்கு பாடல்கள் உள்ளன. அதன் பிறகு ஏழுபாடல்கள் கண்ணிகள் எனும் தலைப்பில் காணப்படுகின்றன. இந்நூல் முழுமையும் கண்ணிகளாகவே அமைந்துள்ளமை குறிக்கத்தக்கது. தொங்கல் அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தமாக அமையவேண்டும். இங்குக் கண்ணிகளாகவே அமைந்துள்ளது ஆய்வுக்குரியதாகும்.

# பாட்டும் பொருளும்

ஆலம் நபி கதைப்பாட்டில் உள்ள பாடல்களில் அப்துல்காசீம் மனைவி பெயர் குறிப்பிடப்படவில்லை. காசீம் படைப்போரில் 'கதிஜம்பு நாச்சியார்' (பக்.94) என்று காணப்படுகிறது.

காசிமின் மனைவி வயதை எட்டு என்று ஓலைச்சுவடியும் ஏழு என்று காசீம் படைப்போரும் குறிப்பிடுகின்றன.

ஒரே கதைக்குரிய பாடல்களாக இருந்தாலும் சொல்லமைப்பு முற்றிலும் மாறுபட்டுள்ளது. ஓலையில் இல்லாத பாடல்கள் காசிம் படைப்போரில் காணப்படுகின்றன.

## வரலாற்று முரண்

கதைத் தொடக்கம் ஹீசைனை யசீதுப்படை வளைத்துக் கொண்டதிலிருந்து ஓலையில் உள்ளபோது காசிம் படைப்போர் நூலில் அலியார் கர்பலாவில் உசைனுடன் வந்திருந்தார். யசீதுப்படை சுற்றி வளைத்தது என்று தொடங்குகிறது. இத்தொடக்கமே வரலாற்றுக்கு முரணாக அமைந்துள்ளது ஓலையில் குறிப்பிட்டுள்ள தொடக்கமே பொருத்தமானதாகும். முகம்மது நபி மருகரான அலியார் மறைவிற்குப் பின்தான் கர்பலாக்களமே அமைந்தது. அலியாரின் மறைவிற்குப் பின் முஆவியா அனைத்து மக்களுக்கும் தலைமைப் பொறுப்பேற்றார் இவரின் மறைவிற்குப் பின் இவர் மகன் எசீது ஆட்சிக்கு வந்தான். இவனுடைய ஆட்சியில்தான் கர்பலாக் களமே உருவானது. இவனை எதிர்த்துத்தான் ஹீசைன் கிளர்ந்தெழுந்தார். இவ்வரலாற்றுண்மை காசீம் படைப்போர். நூலில் தவறாகக் குறிக்கப்பட்டுள்ளது.

மக்களுக்கு எளிதில் சென்றடைய நாட்டுப்புறப் பாடல்களின் வடிவமான கண்ணிகளைப் புலவர்கள் பயன்படுத்தினர். இவ்வெளிமை ஆலம் நபி கதைப்பாட்டு நூலின் முழுமையும் தடையின்றிக் காணப்படுகிறது. காசீம் படைப்போர் நூலில் காப்புச் செய்யுட்களின் நடை அமைப்பு கண்ணிகளின் நடை அமைப்பிலும் காணப்படுகிறது. சிதிலமான நிலையில் கிடைத்த பாடல்களைப் புலவர் தம்முடைய கவித்திறனையும் சேர்த்துப் படைத்துள்ளார் என்பது பலவிடங்களில் வெளிப்படுகிறது. வார்த்தைகள், வரிகள், பாடல்கள் பல இடைச்செருகல்களாக உள்ளன. ஆலம்நபி கதைப் பாட்டில் காணப்படும் சொற்கள் பல உள்ளன. ஆனால் பிற சொற்கள் அறியப்படாத காரணத்தால்

காசீம் படைப்போர் நூலில் எழுதிய புலவர் கைத்திறனும் கலந்துவிட்டது. நாட்டுப்புறப் பாடலின் எளிமை வந்து கொண்டிருக்கும் போதே புலவரின் நடையமைப்பு நுழைந்து விடுகிறது. எளிமையில் உள்ள இலக்கியம் சுகம் புலவர் நடையில் அடித்துச் செல்லப்படுகிறது. எடுத்துக்காட்டாக இரு நூல்களிலும் அபுல்காசிமுக்கு நடைபெற்ற திருமணம் குறித்த வரிகளைச் சுட்டலாம்.

''ஆல் நபி சிபுரீல் அலியாரும் வந்திருந்து-அந்தப்
பாலனுக்கும் கன்னிக்கும் நிக்காஹ் பாங்காய்
முடித்தெழுந்தார்.
(ஆலம் நபிகதைப்பாட்டு) (பாடல் 15)

என்றங் ஹுசைனார் சொல்ல காசிமுக் கெல்லோரும்
தான்கூடி
அன்று மகிழ்வாய்க் கருபலாவில் அன்பாய்
மணமுடித்தார்.
(காசீம் படைப்போர்) (பாடல் 20)

நிக்காஹ் முடிந்த பின்பு அந்த நீதர் அப்துல் காசீம்
பாங்காய் எழுந்திருந்து ஹுசைனார் பாதம் பணிந்து
சொல்வார்.
(ஆலம் நபிகதைப்பாட்டு பாடல் 16)

நிக்காஹ் அதிர் கடனும் சடங்கும் நிறைவேறி
யானதின்பின்
தக்க வெழுந்துஸைனார் வண்ணத் தாமரைத் தாள்
பணிந்தார்
(காசீம் படைப்போர். பாடல் 21)

ஆலம்நபி கதைப்பாட்டில் முதல் பாட்டிற்கும் இரண்டாம் பாட்டிற்கும் உரிய தொடர்பு இஸ்லாமியச் சொல்லான 'நிக்காஹ்' என்பதால் பெறப்படுகிறது. பெரியோர்கள் நல்ஆசியுடன் நடைபெற்றதாகக் குறிக்க விரும்பும்போது முகம்மதுநபி அவர்களும், ஜிப்ரயீல் அவர்களும், அலியார் அவர்களுக்கும் வந்திருந்து வாழ்த்தியதாகக் குறிப்பிடுகிறார். இதில் இஸ்லாமிய உணர்வு உள்ளபடியே நாட்டுப்புற நம்பிக்கையோடு இணைந்து செல்கிறது. இரண்டு பாடல்களிலும் கதையின் ஓட்டம்

வேகமாக அமைந்திருப்பதைப் புலவர் நயம்படப் புலப்படுத்துகிறார். காசீம் படைப்போர் நூலில் 'மணமுடித்தார்' என்று முதல் பாட்டில் இறுதியாக முடித்து அடுத்த பாட்டில் 'நிக்காஹ்' என்று தொடங்கியிருப்பது இடைச்செருகலாகவே உள்ளது. புலவர் வலிந்து வார்த்தைகளின் அணிவகுப்பை உருவாக்கியுள்ளார் என்பதும் இவ்விரு பாடல்கள் வழி புலப்படுகிறது.

காசீம் படைப்போர் காப்புச் செய்யுட்களில் இரண்டாவது செய்யுளில் ஷெய்கு மீரான் மகன், வள்ளல் செய்கு இபுராகீம் கூறியதாகவும், மூன்றாவது பாடலில் உலகோர் அறியவேண்டிக் "காசீம் போர்" என்று பெயர் சூட்டிப் பாடலாக இருந்ததால் விரும்பினேன் என்று புலவர் குறிப்பிடுகிறார். பாடிய புலவர் பெயர் குறிப்பிடப்படவில்லை, "காஸீம் போர் என்றிதற்கு ஒருபெயர் கொடுத்து" எனும் வரி ஆய்வுக்குரியது. இதனைப்பிறர் வாயிலாக அறிந்தபின் கொடுக்கப்பட்ட பெயர் "காசீம்போர்", ஆனால் அச்சில் வந்து மக்கள் கரங்களுக்குக் கிட்டும் போது "இமாம் காசீம் படைப்போர்" என்று மாறியுள்ளது. இதன்வழி இரண்டு செய்திகள் புலனாகின்றன. காசீம் போர் என்பது நூலின் பெயரல்ல. அதனைக் கேட்டவர் வைத்த பெயர். இமாம் காசீம் படைப்போர் என்பது அச்சுக்கு வரும்முன் மேலும் மாற்றப்பட்ட பெயர். மூலநூலை அறிந்திருந்த ஷெய்கு இபுராஹீம் தாம் அறிந்த மட்டிலும் உள்ள பாவடிவிலேயே கதையைக் கூறியுள்ளார் அதனைக் கேட்டவர் புலவராதலால் கேட்டவற்றைச் செப்பம் செய்து நிறைவுபடுத்தியுள்ளார். இதனைக் கண்ணகுமது மருதூர் முகம்மதுப் புலவர் அச்சேற்றும் போது பரிசோதித்துள்ளார். காசிம் போர் கதைப்பாடலுக்குக் காப்புச் செய்யுளைப் புலவர் வடித்துத் தந்துள்ளார். எந்த ஒரு செய்தியையும் பாவடிவிலேயே எழுதியும் அதனை மனதில் நிறுத்தியும் கொள்ளுகிற பழக்கம் தமிழ் மண்ணில் பண்டு தொட்டு இருந்து வருவதாகும். அச்சில் வந்த நூலில் 'முன்னோர்கள் பாடிய' என்னும் அடை காணப்படுகிறது. இதனையும் கருத்தில் கொண்டால் காசீம் படைப்போரை இயற்றியவர் பெயர் தெரியவில்லை என்பது வெள்ளிடைமலை. வாய்மொழியாக வழங்கப்பட்டு வந்த

கதைப்பாடலைத் தலைமுறைகள் கேட்டு நினைவு வழி செப்பம் செய்துள்ளனர் என்பது தெளிவாக அறிய வருகிறது. மூல ஓலைச்சுவடியை எவரும் பார்க்கவில்லையோ எனும் ஐயம் எழுகிறது. காப்புச் செய்யுள் உணர்த்தும் செய்தியாலும், கண்ணிகளில் உள்ள நடைஅமைப்பாலும், பாடல்களின் எண்ணிக்கையாலும், கதைத்தொடக்கத்தில் காணப்பெறும் வரலாற்று முரணாலும், தொங்கலில் காணப்படும் யாப்பு மாற்றத்தாலும் காசீம் படைப்போர்' மூல நூல் அல்ல என்று துணிந்து கூறலாம். இந்நூலுக்கு முன்னோர்கள் இட்ட பெயர் 'ஆலம் நபி கதைப்பாட்டு'' என்பது ஓலைச்சுவடி வழி உறுதி செய்யப்படுகிறது. "நபியுல்லா பேரில்'' முன்னோர்கள் பாடியதாகக் குறிப்பிடும் செய்தியும் இதற்கு அரணாக அமைகிறது.

# ஆலம் நபி கதைப்பாட்டு ஓலைச் சுவடி

ஓலைச் சுவடியில் உள்ள பெயர் "ஆலம்நபி கதைப்பாட்டு'' என்பதாகும். 'ஆதியே துணை' என்று முதல் ஏட்டில் எழுதப்பட்டுள்ளது. அதன்கீழே பாடல் தொடக்கம் பெறுகிறது. இவ்வோலையில் உள்ள பாடல்களில் எழுத்துப் பிழைகள் மலிந்துள்ளன. தமிழ் எண்களால் எண்ணிக்கை இடப்பட்டுள்ளது. ஓலை சிறியதாக இருப்பதால் பாடலை மடக்கி மடக்கி எழுதியுள்ளனர். புலவரின் மூலஓலை அல்ல என்பது ஓலையில் உள்ள எழுத்துக்களில் காணப்படும் வல்லெழுத்து இடையின எழுத்துக்களின் தடுமாற்றங்கள் பறைசாற்றுகின்றன. ஆலம்நபி கதைப்பாட்டை நன்கு அறிந்தவர் அதன் இயல்பான நடை கெடாது எழுதியுள்ளார் என்பது சிறப்பிற்குரிய நிலையாகும். எழுதியவரின் சொந்த நடையை எங்குமே காண இயலாது. எழுதியவர் நிரம்பப் படித்தவரல்லர் என்பதும் புலனாகின்றது. ஓலையில் எழுதி வைக்கும் பழக்கம் ஒரு நூற்றாண்டிற்கு முன்பே அருகிவிட்டது. தமிழகத்தில் முதன்முதலாக 1578 இல் அச்சகம் ஏற்பட்டது. 1881-இல் 'தமிழ்ப்பத்திரிக்கை' என்ற பெயரில் மாதபத்திரிக்கை

தொடக்கம் பெற்றது 1850-லிருந்து கண்ணகுமது மகுதூம் முகம்மதுப் புலவர் ஏறத்தாழ ஐம்பது இஸ்லாமிய நூல்களை அச்சேற்றினார். இக்குறிப்புக்களிலிருந்து 'ஆலம்நபி கதைப்பாட்டு'க்குரிய சுவடி உறுதியாக 1850க்கு முன்னாலே எழுதப்பட்டிருக்கவேண்டும் எனக் கொள்ளலாம்.

ஓலைச்சுவடியிலிருந்து 19.7.68 அன்று S. கிருஷ்ணானந்தம் என்பவர் படியெடுத்துக் கொடுத்துள்ளார். 30. 8. 68 வீ. சொக்கலிங்கம் ஒப்பிட்டுப் பார்த்துள்ளார். (Recorded Copy) பதிவு செய்யப்பட்ட படியின் எண் 1969. புதிது 88/510, M. No. 922, பக்கங்கள் 55, இப்பதிவு செய்யப்பட்ட படியில் பக்கம் 10 இல் பாடல் 33க்குப் பிறகு 35 உள்ளது. பாடல் 34 காணவில்லை. 193 வது பாடலில் இறுதி அடி காணவில்லை. தொங்கலில் உள்ள மற்ற மூன்று பாடல்களின் இறுதி அடிகள் இறைவனிடம் வினவுவதாகவே உள்ளன. இதனை ஆழ்ந்து பார்த்து நான்காவது பாடலின் இறுதி அடியாக "தனக்கிது பொருத்தம் தானோ" என்று பொருள் மாற்றம் பெறாது ஆய்வாளர் சேர்த்துள்ளார்.

## ஆலம் நபி கதைப் பாட்டு நூலின் கதைச் சுருக்கம்

ஆலம் நபி கதைப்பாட்டு வீரர் அலியாருடைய பேரரும் ஹசனாரின் மகனாருமான அபுல்காசீம் கர்பலாக்களத்தில் நிகழ்த்திய போரைக் குறித்துப் பாடப்பட்டுள்ளது.

கர்பலா போர்க்களத்தில் ஹீசைனாரின் மகனார் அலீஅக்பர். இருபது பேருக்கு மேல், தம் வாளால் பகைவர்களைக் கொன்றார். இந்நிலையில் தாகமெடுத்துத் தண்ணீர் வேண்டிய போது தந்தை தன் நாவின் நீரையே தண்ணீராகக் கொடுத்தார். போர்க் களத்தில் போர் புரிந்து வந்த போது பின்னே வந்து ஸினான் கிப்னு அனஸ் என்பவன் ஈட்டியால் குத்தினான். மற்றவர்களுடைய ஈட்டிகளும் பாயக் கீழே விழுந்து மடிந்தார். இந்தச் செய்தியைக் கேள்வியுற்றதும் இருபது வயது நிறைந்த காசிம் போருக்குப் புறப்பட அனுமதி வேண்டினார். இவர்

ஹசனாருடைய மகனாவார். காசிமைப் போருக்கு அனுப்ப ஹுசைனாருக்கு அச்சமாக இருந்தது. காசீம் வற்புறுத்தவே, தங்களது தலைவனார் ஹசன் இறப்பிற்கு முன் கூறிய செய்தியைக் கூறினார். இவர் தம் மகளைக் காசிமுக்கு மணம் முடித்துக் கொடுக்க வேண்டும் என்று வாக்கு வாங்கியதாகக் கூறியதும் காசிம் அவர் மகளை மணம் முடித்துக் கொண்டார். மணம் ஆகும் போது இவருக்கு 20 வயது மனைவிக்கு எட்டு வயது. யசீது ஆட்சிக்கு எதிர்ப்பாக நடந்த போர் கர்பலாவில் நடைபெற்ற போராகும். யசீதுப் படை வீரர்கள் உமறு இப்னுஸஆத் தலைமையில் போருக்கெழுந்தனர். அப்துல் காசீம் போருக்கு வருவதைக் கண்டதும் உமறு அஸ்ரக் என்பவனைப் போரிடுமாறு கூறினான். அதற்கு அவன் சிறுவனிடம் நான்போர் செய்வதா என்று கேட்டுத் தம் மகன்கள் நால்வரை அனுப்பி வைத்தான். நால்வரும் மாண்டனர். பின் அஸ்ரக்கு வந்தான். அவனையும் வெட்டி வீழ்த்தினார்.பின்னர் அவருக்கும் உமறுஇப்னுசாஅதுக்கும் நடைபெற்ற போரில் உமறு இவரை வெட்டி வீழ்த்தினான். காசிம் தரையில் விழுந்தவுடன் ஹுசைன் ஓடோடி வந்தார். அவரின் மரணங்கண்டு தாயார் புலம்பி, அப்பொழுது மணம் முடித்த மனைவி புலம்ப, அனைத்து மக்களும் புலம்பினர். பின் ஹுசைன் தொழுகை நடத்தி நல்லடக்கம் செய்தார்.

## காசிமை வெட்டியது யார்?

கர்பலாக் களத்தில் போரிட்டுக் கொண்டிருந்த காசீமை "உமறு இப்னு ஸாஅத்" வெட்டினான் என்று ஓலைச்சுவடியும் (127) காசீம் படைப்போர் என்ற நூலும் (பா.136) குறிப்பிடுகின்றன. ஆனால் இஸ்லாமிய உலகின் பன்னூலாசிரியர் அப்துர் ரகீம் இஸ்லாமியக் கலைக் களஞ்சியம் இரண்டாவது தொகுதி பக்கம் 612 இல் "காசீம் மீது பதுங்கி நின்று வாளோச்சியவன் "ஸாஅத் இப்னு உர்வா" என்று குறித்துள்ளார். இதற்குரிய ஆதாரம் குறிக்கப்படவில்லை. போர்க்களத்தில் உமறு இப்னுஸாஅத்திற்கும் அபுல்காசிமிற்கும் போர் நடைபெறுகிறது. அபுல்காசீம் களைத்துப் போயிருக்கும்

வேளையிலே உமறு வெட்டினான் என்பதனைப்புலவர்

> ''வெட்டி மதிமயங்கிக் காசிம் நிற்கின்ற வேளையிலே-
> அந்தத்
> துட்டன் உமறு கணை போல் வந்து வெட்டினான்
> வாளாலே''. (127)

என்று குறிப்பிடுகிறார். இவ்வரிகளே பொருத்தமுடையனவாக உள்ளன. காசீமை வெட்டியது 'உமறு இப்னு சாஅது' தான் என உறுதியாகக் கொள்ளலாம்.

# இஸ்லாமிய மரபு போற்றுதல்

'மாற்றருஞ் சிறப்பின் மரபு' என்று தொல்காப்பியர் மரபின் தனித்தன்மையைக் குறிப்பிடுவார். ஒருவரால் எடுத்தாளப்பட்டது பலரால் பின்பற்றப்பட்டால், அதற்கு மரபு என்று பெயர். மரபு திடீரென்று தோன்றுவதில்லை. அது சிறிது சிறிதாகக் கால்கொண்டு வளர்கிறது. மரபு இரண்டு வகைப்படும். ஒன்று சமுதாய மரபு மற்றொன்று இலக்கிய மரபு. ஒரு குறிப்பிட்ட இனத்தாரிடம் காணப்படும் பழக்க வழக்கங்கள், சடங்கு முறைகள் சமுதாய மரபு எனப்படும். மரபு சமுதாயத்தின் எழுதாத சட்டங்களாக நிலைத்து விடுகிறது மீறுவது குற்றமாகக் கருதப்படுகிறது. இம்மரபுகளை இலக்கியங்களில் புலவர்கள் பாடி வைப்பர். சமய மரபுகளையும் இனமரபுகளையும் இஸ்லாமிய இலக்கியங்களில் காணலாம்.

இஸ்லாமிய சமயத்தின் மரபுகளைத் தாம் படைக்கும் இலக்கியங்களில் இஸ்லாமியப் புலவர்கள் சுட்டிக்காட்டத் தயங்குவதில்லை. இஸ்லாமியர்களின் வாழ்வுமுறைக்குச் சட்ட திட்டங்களாக அல்குர்ஆன் விளங்குகிறது. நபிகள்நாயகம் வாழ்வும் வாக்கும் எழுதாதச்சட்டங்களாக இருந்து வருகின்றன. இஸ்லாமிய மரபுகள் பெரும்பான்மை சமய அடிப்படையிலே அமைவதால், அவைகளைச் சுட்டும்போது உரிய அரபுச் சொற்களாலேயே சுட்டுவர். இவைகளைத் தமிழ்ப்படுத்தும்போது உரிய பொருளாழம் கிட்டுவதில்லை. அரபுச் சொற்களால் குறிக்கும்போது உலக அளவில் வாழும் முஸ்லீம்கள்

புரிந்து கொள்வர். சிறிய அரபுச்சொல்லும் நீண்ட விளக்கத்திற்குரியதாக, இஸ்லாமியக் கொள்கைகளை விளக்கும் போது அமைந்து விடும்.

இஸ்லாமியர்கள் எந்த ஒரு பணியைத் தொடங்குவதற்கு முன்னும் இறைவனை வணங்கிப் போற்றித் தொடங்குவர். இம்மரபு

"ஆலம் படைத்தவனே புகழாய் நிறைந்தவனே
காவல் வளர்ந்தேற என் நாயனே காத்தருள்வாய்
(பா.1)

எனும் பாடலால் புலப்படுகிறது. 'ஆலம்' எனும் சொல்லாட்சி இஸ்லாமியர்களுக்கே உரியதொன்றாகும். அனைத்துலகங்களையும் குறிக்கின்ற சொல்லாக 'ஆலம்' எனும் சொல் அமைகிறது. இஸ்லாமியர்கள் தொன்றுதொட்டு உலகை ஆலம் என்றே குறிப்பிடுவர்.

இறைவனை வணங்கிப் போற்றியபின் இறைத்தூதர் முகம்மது நபியைப் போற்றி வாழ்த்துவர். இஸ்லாமியர்கள் எந்தவிடத்தில் இருந்தாலும் இம்மரபினைப் போற்றி வாழுகின்றனர். காரணம் இஸ்லாமியர்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்தும் வரியிலேயே வணக்கத்திற்குரியவன் அல்லாவைத் தவிர வேறு யாரும் இல்லை. முகம்மது நபி இறைவனின் திருத்தூதராக இருக்கிறார்கள் என்று குறிக்கப்படுகிறது.

"ஆதியாய் உன்தூதர் மருகரான அலியாரும்
நீதி அசனுசனார் பாதமும் நித்தமும் போற்றி
செய்வேன்"

எனும் இரண்டாவது பாடலில் இறைத்தூதரை வாழ்த்திப் போற்றும் மரபு சுட்டப்பட்டுள்ளது. இவ்விரு பாடல்கள் வழி வணங்குவதற்கு இறைவனும் வாழ்த்துவதற்கு முகம்மது நபியும் எனும் கோட்பாடு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இஸ்லாத்தில் முகம்மது நபியவர்களுக்கு வணக்கமோ, வழிபாடோ இல்லை. அவர் இறைமகனும் அல்ல. அவர் மிகச் சாதாரண

மனித நிலையிலே வாழ்ந்து மரித்தவர். இறைவனின் வேத வெளிப்பாட்டை மக்களுக்கு எடுத்துக்கூறிய தூதுவராகவே வாழ்ந்தவராவார். இஸ்லாமிய மக்களின் மிக இன்றியமையாத அடிப்படை மரபும் நம்பிக்கையுமாக இவ்விரு பாடல்கள் விளங்குகின்றன.

இறைநம்பிக்கை இஸ்லாமியர்களின் உயிர்மூச்சாகும். ''செருப்பின் வார் அறுந்து போனாலும் அதனை அல்லாவிடமே கேளுங்கள்'' என்று நபிகள் பெருமானார் கூறியுள்ளார்கள். எத்தகைய சோதனைகள் வந்தாலும் சந்திக்க வேண்டிய களங்களும், பகைகளும் தொடர்ந்து வந்தாலும், இறுதி மூச்சு நின்றுவிடக் கூடியநிலையிலும் 'உதவி' என்று இறைவனிடமே கேட்கவேண்டும் என்பது இஸ்லாமிய மரபாகும். அப்துல் காசீம் போர்க்களத்திலே உமறு இப்னுஸா அத்தினால் வலது புறம் வெட்டப்பட்டதும் மயக்கமுற்றுத் தரையிலே சாய்கின்ற போது இறைவனைப் போற்றிய மரபினை

''காயத்தில் ரத்தஞ் சிந்த இருகண்களும் பார்வை சுற்றி
தாயனைப் போற்றிசைத்து அப்துல் காசிம்
தலைசாய்ந்தார்'' (129)

எனும் பாடலால் அறியலாம்

விதியின் மீது நம்பிக்கை மனிதமுயற்சிகள் வீழ்ந்து விடும்போது தலைதூக்கும். ஆனால் இஸ்லாமியர்கள் இறைவன் படைக்கின்றபோது மரணத்தையும் குறித்து விடுகிறான் எனும் நம்பிக்கை கொண்டவர்கள். அனைத்தும் இறைவன் விருப்பின்றி நடவாது எனும் இஸ்லாமிய மரபினைக் காசீம் போருக்குப் புறப்படும் போது தாயும் தந்தையும் மனைவியும் கலங்கிக் கையற்றுப் புலம்பி வருந்தி நின்ற போது,

'எந்த னெழுத்துப்படி யிருக்கும் நான் என்ன
செய்யப் போறேன் (103)

என்று காசிம் குறிப்பிடுகிறார். இதில் ஒரு காரியம் ஆற்றச் செல்வதற்கு முன் இறைவனின் விருப்பப்படி நடக்கும் என்னும் இஸ்லாமிய மரபு போற்றப்படுகிறது. காசீம் மரணித்த

போது அனைவரும் அழுது புலம்பும் போது

ஆதி பெரியோ னெழுத்தை அழிக்கவும் கூடாது"
(186)

என்று ஹுசைனார் இறைவன் படைத்த அன்றே விதித்தது மாறாது எனக் குறிப்பிடுகிறார். அது மட்டுமன்றி உலகில் படைக்கப்பட்ட அனைத்துயிர்களும் மரணத்தைச் சுவைக்கத் தான் வேண்டும். இந்த உலகம் எவருக்கும் சொந்தமானதல்ல, ஆதிபிதாவிடம் இவ்வுலகையே நான் என்னுடைய நேசராகிய முகம்மது நபிக்காகவே படைத்தேன் என்று கூறினான். அந்தச் சிறப்புக்குரிய முகம்மது நபியவர்களுக்கும் மரணம் வந்தது என்பதை 'ஜோதி நபியவர்க்குப் மௌத் உதிக்கவும் தப்பாது (186) எனும் கூற்றால் ஹுசைனார் உணர்த்துகின்றார் இவ்வுலகின் நிலையாமையை இதைவிட ஆழமாக, நுணுக்கமாக இஸ்லாமியர்களுக்கு உணர்த்திக் காட்ட இயலாது.

இஸ்லாமியர்கள் ஒரு நற்பணியை மேற்கொள்ளும் போது "பாத்திஹாவும் துஆவும்" ஓதியபின் தான் தொடங்குவர். பாத்திஹா ஓதுதல் என்பது திருமறையின் முதல் தோற்றுவாயான 'அல்ஹம்துலில் லாஹிரப்பில் ஆலமீன்' என்று தொடங்கும் அத்தியாயத்தையும் இறைமறையின் இறுதி மூன்று அத்தியாயங்களையும் ஓதுதலாகும். இதனை இஸ்லாமியர்கள் கூடி அமர்ந்த பிறகு 'அல்பாத்திஹா' என்று ஒருவர் கூறுவர். அனைவரும் மேற்கூறிய வேத வரிகளை ஓதி முடிப்பர். அதன்பின் 'துஆ' என்னும் இறைவேண்டலை ஒருவர் கூற மற்றவர்கள் 'ஆமீன்' 'அவ்வாறே ஆகுக' என்று கூறுவர். இம்மரபு முகம்மது நபிகள் காலத்திலிருந்து இருந்து வரும் மரபாகும். ஹுசைனார் தன்தாயாரிடம் போருக்குச் செல்ல விடை கேட்கும் போது

பாத்து முத்து சுகறாவுக்கும் நல்ல பாங்காய்
முகம்மதற்கும்
பாத்திகா ஓதி யென்னை வாழ்த்தி அனுப்பும் அம்மா
(25)

என்று கூறுவதிலிருந்தும்

'எந்தன் எழுத்துப்படி இருக்கும் நான் என்ன
செய்யப்போறேன்
என் சிந்தை கலங்காமல் நீங்கள் சேர்ந்து துஆச்
செய்குவீர் (103)

என்று கூறுவதிலிருந்தும் இஸ்லாமிய மரபு போற்றப்பட்டு இருப்பதைக் காணலாம்.

இவ்வுலகம் நிர்மூலமாக்கப்பட்ட பின் இறைவன் அன்று வரை படைக்கப்பட்ட மனிதர்களை எவ்வித மேடு பள்ளம் இல்லாத வெட்ட வெளியில் எழுப்புவான். மக்கள் நிர்வாணத்தோடும் காலணியின்றியும் இருப்பர். கதிரவன் மனிதர்களின் தலைக்கருகில் வந்து தோன்றும். மனிதர்கள் இவ்வெம்மையிலிருந்து காத்துக்கொள்ள இறை நிழலை நாடி ஓடுவர். முகங்கள் விண்ணை நோக்கி அமைந்திருக்கும். பல நூறு ஆண்டுகள் இவ்வெட்ட வெளியில் மக்கள் நின்று கொண்டிருப்பர். இவ்வெட்ட வெளியில் மனிதர்கள் கூடும் நாளையும் இடத்தையும் இஸ்லாமியர்கள் குறிப்பிடும் போது மஹ்ஷர்' என்பர்.

ஆதியெழுத்தின்படி அணுவளவாகிலும் தப்பாது
சோதி மருசரிலே ஆகிரத்து ஜோடிக்குதவி செய்வான்
(39)

எனும் பாடலில் மஹ்ஷரின் குறிப்பு வருகிறது. வெட்டவெளியில் ஒரு காலத்திற்குப்பின் மனிதன் அவனவன் செய்த நல்வினை தீவினைக்கேற்ப நிலைத்த வாழ்வினை இறைவன் வழங்குவான். அவ்வாறு வழங்கப்படும் வாழ்வைத்தான் 'ஆகிரம்' என்னும் சொல் குறித்து நிற்கிறது.

இஸ்லாமிய மக்களிடம் இவ்வுலகைக் குறிக்கும் போது 'துன்யா (26) என்றும் சுவர்க்கத்து வாழ்வுதனைக் குறிக்குமிடத்து 'ஜன்னத்' (136) என்றும் குறிக்கும் மரபு இன்றும் இருந்து வருவதாகும் உள்ளத்தைக் குறிக்கும் போது 'கல்பு' (93) என்றும் குறிப்பர். கல்பு எனும் சொல் மிக ஆழம் நிறைந்த சொல்லாகும். இறைவனுக்கு நன்றி செலுத்துவதைக்

குறிக்கும் போது 'ஷுக்கூர்' (35) செய்தார் என்று குறிப்பர். இஸ்லாமியர்கள் இறந்த பின் புதைக்கும் வழக்கமுடையவர்கள். இப்புதைகுழியைக் 'கபுறு' (188) என்று குறிப்பர். வான உலகத்தில் இருக்கும் பெண்களை 'ஹீர்லீன்கள்' (136) என்று அழைக்கும் மரபு இருந்து வருகிறது.

'கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்' என்றார் இளங்கோ. கணவன் இறந்தவுடன் இறப்பது தலைக்கற்பு, நெருப்பில் வீழ்ந்து உடன்கட்டை ஏறுதல் இடைக்கற்பு, வடக்கிருந்து நோன்பிருந்து இறப்பது கடைக்கற்பு என்பது தமிழ் மரபு. ஆனால் இஸ்லாமிய வாழ்வில் உயிரைப் போக்கிக் கொள்ளவோ, வருத்திக் கொள்ளவோ உயிரைச் சுமப்பவனுக்கு உரிமையுடையதல்ல. 'எவன் உயிரை வழங்கினானோ அவனையே அவ்வுயிரை எடுத்துக் கொள்ள வேண்டுதல் மட்டும் செய்யலாம். அப்துல் காசீம் இறந்தவுடன் அவருடைய மனைவி இறைவனிடம்

"ஆதிபெரியோனே என்னைப் படைத்து ஆளும்
றகுமானே
நீதர் அப்துல் காசிம் கூடப் போக உதவி செய்வாய்
(176)

என்று வேண்டுகிறார். இஸ்லாமிய மரபை மிக எச்சரிக்கையாக இவ்விடத்தில் புலவர் போற்றியுள்ளார். தமிழ் மரபும் இஸ்லாமிய மரபும் இணைந்து வந்த இடத்தில் புலவர் எச்சரிக்கையாக இப்பாடலை அமைத்துள்ள திறன் பாராட்டிற்குரியதாகும்.

இஸ்லாமிய மரபுப்படி இறந்தவரை, மரணித்தவர், செத்தவர், என்ற சொற்களால் குறிக்க மாட்டார்கள். வபாத்தனார் (7) அல்லது மௌத்தானார் (187) என்றே குறிப்பர். இறைவனுடைய உண்மைத் தன்மையை உணர்த்தும் போது 'ஹக்கன்' என்றும், இறைவனுடைய சன்னிதானத்தை 'அர்ஷ்' (17) என்றும் குறிப்பிடுவர். திருமணத்தை 'நிக்காஹ்' (15) என்றும் பிரேதத்தை 'ஜனாஸா' (188) என்றும் குறிப்பர். ஆலம் நபி கதைப்பாட்டில் இஸ்லாமிய மரபுக்குரிய சொற்கள் உரியஇடத்தில் உரியமுறையில் கையாளப்பட்டுள்ளன.

# தமிழ் மரபு போற்றுதல்

இஸ்லாமியத் தத்துவத்தையோ வரலாற்றையோ புலவர்கள் பாடும் போது தமிழ் மண்ணுக்குரிய மரபுகளையும் இஸ்லாமிய உணர்வுகள் பாதிக்கப்படாத நிலையில் படைத்துக் கொடுப்பர்.

இஸ்லாமியப் பண்பாட்டில் காலில் விழுதல் எவருக்கும் செய்யப்படக்கூடாத வழக்கமாகும். காலில் விழுவதை அங்கீகரிப்பதாக இருந்தால் முதலில் மனைவி கணவனின் கால்களில் விழுவதை சட்டமாக்கியிருப்பேன் என்று நபிகளார் வாக்கு உள்ளது. ஆதலால் காலில் நெடுஞ்சாண்கிடையாக விழுவது இஸ்லாமிய மரபல்ல. இருப்பினும் இம்மண்ணில் பிறந்து இம்மண்ணின் வாடையை நுகர்ந்த தமிழ்ப்புலவர்கள் இஸ்லாமிய இலக்கியங்கள் படைக்கும் போது மண்ணின் மரபையும் போற்றித் தாம் உணர்த்த விரும்பும் கருத்திற்கு உயிர்ப்பூட்ட சில மரபுச் சொற்களைக் கையாளுவதும் உண்டு. இதனை ஆங்கிலத்தில் 'Poetic License' என்பர். அப்துல் காசீம் போருக்குப்புறப்படும் முன் தாயாரிடம் சென்று விடை பெறும் போது

"தாயர் மனைபுகுந்து சரணாகதி பணிந்து — அந்த
மாயன் எசீதை வெல்ல எனக்கு மகிழ்ந்து
விடை கொடம்மா" (19)

என்று கூறுகிறார். தாயினுடைய பாதங்களில் சரணாகதியாக விழுந்தார் என்று தமிழ் மரபுக்கேற்பக் கூறியுள்ளார்.

கணவனுடைய பாதங்களை மனைவி நீரால் கழுவி விடுதல் என்பது தமிழ் மண்ணுக்குரியதாகும். இதனைக் குறிக்கும் போது

"கன்னி எழுந்திருந்து சுத்தப்பன்னீரால் கால் கழுவி
கூந்தல் அவிழ்த்துத் துடைத்து வாழ்த்தி அருகிருந்தார்
(30)

என்று கூறுகிறார். ஹீசைனார் மனைவியிடம் விடைபெறச் சென்றதும் தூய பன்னீரால் கணவனின் பாதங்களைக் கழுவியதாகக் காணப்படுகிறது.

இஸ்லாமியத் திருமண முறையில் தாலி அணிதலென்பது இம்மண்ணுக்குரியதாகும். இஸ்லாமியத் திருமணம் நிறைவேற மணமகன், மணமகள், வலி அல்லது வக்கீல், இருசாட்சிகள், ஈஜாபு, கபூல் இருத்தல் அவசியமாகும். வலி அல்லது வக்கீல் என்பவர் பெண்ணின் தந்தையாவார். அவர் இல்லையெனில் தாத்தாவோ, பெரிய தந்தையோ, சிறிய தந்தையோ, அல்லது இவர்களின் பிள்ளைகளோ உரியவர் ஆவர். இவரே பெண்ணை மணமகனிடம் பிடித்துக் கொடுப்பவர். இரு சாட்சிகளாக இருப்பவர் முஸ்லிமாக இருக்க வேண்டும். வலி அல்லது வக்கீல் மணமகனிடம் இன்னாருடைய மகளை இவ்விருவர் சாட்சியாக உமக்குத் திருமணம் செய்து கொடுத்தேன் என்று கூறுவர். இதுதான் ஈஜாபு என்பதாகும். இதற்கு மணமகன் 'நான் ஒப்புக்கொண்டேன்' என்று கூறுவர். இதுதான் 'கபூல்' என்பதாகும். இந்த அளவில் திருமணம் நிறைவேறிவிடும். ஆனால்

ஆலம் மலைகடலும் படைத்தாளும் ரகுமானே - என்
தாலி தழைத்திருக்க தக்கோனுதவி செய்வாய் (78)

என்ற பாடலில் தாலி நிலைத்திருக்க அபுல் காசிம் மனைவி இறைவனிடம் பிரார்த்திக்கின்ற நிலை காணப்படுகிறது. தாலி அணிதல் பண்டைத் தமிழரிடம் காணப்படவில்லை. இப்பழக்கம் கி. பி. பத்தாம் நூற்றாண்டிற்குப் பின் ஏற்பட்டதாகும் என்று அறிஞர் மா. இராசமாணிக்கனார் 'தமிழர் திருமணத்தில் தாலி' எனும் நூலில் குறித்துள்ளார். தாலியை மங்கலக் குறியீடாகத் தமிழர் பத்தாம் நூற்றாண்டிற்குப் பின் தான் கொண்டனர். அதற்குப் பிறகு அது தமிழ் மண்ணுடன் கலந்து மரபாகிவிட்டது. நாட்டுப்புறப் பாடல்களில் தாலிக்கு மகத்துவம் கொடுத்துப் பாடப்பட்டது. இம்மரபினைத் தான் இப்பாடல் வரிகள் வெளிப்படுத்துகின்றன.

நாட்டுப்புற நம்பிக்கையும் இந்நூலில் புலவரால் கையாளப் பட்டுள்ளது. வாழ்வின் பின் நடைபெற விருக்கும் நன்மை தீமைகளைச் சில குறியீடுகளின் வாயிலாக முன்னுணர்த்துவதனை சகுனம் என்பர். பழந்தமிழகத்தில் இதனைப்புள், நிமித்தம் என்பர். நிமித்தங்கள் நம்பிக்கையின்

அடிப்படையில் அமைந்தவையாகும். இந்த மரபு அன்றிலிருந்து இன்று வரை வேரிட்டுள்ளது. அப்துல் காசிம் போருக்குப் புறப்படும்முன் மனைவி

ரெண்டு தரம்போனீர் அந்த ரப்பன் உதவி செய்தான்
இன்று படைப்போரீர் எனக்கு ரெத்த மணக்குதுகாண்
(91)

என்று கூறும்போது போரில் பின்நிகழ்ச்சியாக நடைபெற விருக்கும் தீ நிமித்தத்தை "ரெத்த மணக்குது" எனும் சொல் குறியீடாக நின்று உணர்த்துகிறது.

நாட்டுப்புற வழக்காறுகள் பாடல்களில் தமிழ் மண்ணோடு கலந்தூட்டப்பட்டுள்ளன. சுருக்காய், பயல், தாட்டிகமாய், சித்த, தேத்தி, தாரது, சேந்துதம்மா, போத்தி, மசங்குதல், சூரம் (உடம்பு), அனுப்ப வேணும், செய்யவேணும், சலிப்பு வாறு பத்துதே போன்ற சொற்கள் வழக்குச் சொற்களாகப் பயன்படுத்தப் பட்டுள்ளன. தமிழ் இதயத்தோடு இஸ்லாமியக்கரு வெளிப்படும் போது தமிழ் மண்ணின் மரபும் இணைந்து வருவது தவிர்க்க இயலாததாகும். அப்துல் காசிம் இறந்தபின்பு மனைவியும் தாயாரும் ஒவ்வொன்றாகக்கூறி புலம்புவது இம்மண்ணுக்குரியதாகும். இஸ்லாத்தில் புலம்புதலோ, அரற்றுதலோ, அழுகையோ, ஒப்பாரியோ கூடாது. மரணம் இறைவனின் விருப்பத்திற்கு நடப்பது, இம்மை வாழ்வை விட மறுமை வாழ்வு சுகமானது என்ற சிந்தனையுடன் மரணத்தை அணுக வேண்டும் என்பது இஸ்லாம். நிரந்தரப் பிரிவாக அமைவதால் கண்கலங்குதல் குற்றமல்ல.

## உவமைகள்

கவிதைகளில் உவமைகள் தேவை ஏற்படும் போதும், ஒரு பொருளை அழுத்தமாகப் படிப்போர் அறிந்து கொள்ள வேண்டும் எனும் விருப்பின்போதும், ஒன்றின் சிறப்பினை உயர்த்த நாடும் போதும் கையாளப்படுகின்றன. உவமையாகவே பாடல்கள் எழுதும் புலவராக உவமைப்புலவர் உமறும், உவமைக்கவிஞர் சுரதாவும் இலக்கிய உலகில்

குறிக்கப்படுவர். இவர்கள் உவமைகளையே எழுதுகோலாக்கிக் கொண்டவர்கள். இந்நூலில் பதினான்கு பாடல்களில் உவமைகள் கூறப்பட்டுள்ளன. விலங்குகளில் வலிமையான சிங்கம், வேங்கை, யாளி முதலியவைகளும், பறவையில் வலிமையான ராஜாளியும் அபுல்காசிம் வலிமைக்கு உவமைகளாகக் கூறப்பட்டுள்ளன. அபுல்காசிம் விரைந்து போரிடும் திறனைக் குறிக்க 'மின்னலை' உவமித்துள்ளார். அபுல்காசிமின் வீரம் விளைத்ததன் பயனைக் குறிக்கும்போது அஸ்ரக்கும் மகன்களும் 'மலை' எனச்சாய்ந்தனர் என்று குறிப்பிடுவார். அபுல்காசிமின் மேனியைத் 'தங்கமாகவும்' அபுல்காசீம் கீழே விழுந்ததைக் குறிக்கும்போது 'தேய்ந்தமதி' என்றும் அபுல்காசீம் மனைவியைக் குறிக்கும்போது 'இளமயில்' என்றும் உவமிக்கிறார். ஹுசைன் போர்க்களத்தில் உமறுஸாஅதின் வாளால் வெட்டப்பட்டுச்சாயும் நிலையைக் கூறும் போது

*தங்கக் குலைவாழை தெறித்துத் தரையில்*
*விழுந்தது போல்*
*அங்கம் மெலிந்துருகிக் காசின் அலறித் தலை சாய்ந்தார்*
(130)

என்று குறிப்பிடுவார். 'தெறித்தது' எனும் சொல்லாட்சி சிலப்பதிகாரத்தில் வழக்காடுகாதையில் பயன்படுத்தப் பட்டுள்ளது. பாரதிதாசன் காதல் குற்றவாளிகள் என்னும் தலைப்பில் எழுதியுள்ள கவிதையில் "பாடம் படித்து நிமிர்ந்த விழிதனில் பட்டுத்தெறித்தது மானின்விழி" என்று இச்சொல்லாட்சியைப் பயன்படுத்தியுள்ளார். இளங்கோ மாணிக்கப்பரலின் இயல்பைச் சுட்டப் பயன்படுத்தியபோது, பாரதிதாசன் காதலின் வேகத்தைச் சுட்டப் பயன்படுத்தினான். ஆனால் குதிரையின் மீதிருந்து அபுல்காசீம் விழுகிற நிலையை உள்ளவாறே உணர்த்தவும், அவலத்தின் உச்சத்தைப் புலப்படுத்தவும் 'தெறித்தது' எனும் சொல்லாட்சியை இஸ்லாமியப் புலவர் பயன்படுத்தியுள்ளார். பொருத்தமற்ற உவமைகள் ஆலம் நபி கதைப் பாட்டில் இல்லை என்பது உறுதி.

# கற்பனை

புலவன் தன்னுடைய கருத்தை விளக்கக்கொண்டிருக்கும் அகலக் கண்கள். இக்கண்களால் மட்டுமே நமக்குத் தோன்றாததை அவனால் படைக்க இயலும். சருகுகளின் சலசலப்பிலும், பாய்ந்து வரும் வெள்ளத்திலும் வாழ்க்கைக் கூறுகளை இந்தக் கண்களால் தான் அறிந்து கொள்கிறான் அசையாப் பொருட்களையும் அசைத்துக் காட்டும் பார்வை இக்கண்களுக்குண்டு இக்கண்களைப் பெறாதவர் வரலாற்று ஆசிரியராவர், பெற்றவர் புலவராவர். அப்துல் காசிம் மரணித்து விழுந்தபோது தாயும், தந்தையும், மனைவியும் உறவால் அழுதனர். ஆனால் உயிரற்ற நிலையில்

'வான் மலை கடலும் இந்த வையமும் புலம்ப' (136)

எனும் வரியில் வானமும் மலையும் கடலும் இவ்வுலகமும் கண்ணீர் விட்டதாகக் கற்பனையில் குறிப்பிட்டு அவலச்சுவைக்கு உயிருட்டுகிறார். காசிமின் வரவுகண்ட உமறுக்குச் சினம் உண்டாகிறது. அந்தச் சினத்தைக் கண்களில் காட்ட விரும்பிப் புலவர் "கண்களில் நெருப்பெரிய" (112) என்ற மிகச் சாதாரண சொல்லாலே உமறுவின் மனநிலையைப் புலப்படுத்துகிறார். இச்சொல்லாட்சியை இவர்தான் பயன்படுத்தியுள்ளார் என எண்ணுகிறேன், கண்களை அடுப்பாக்கி சினத்தீக்குக் காசிமின் வரவையே விறகாக்கி எரியவிடுகிறார் புலவர். புலவரின் கற்பனைத்திறன் வியப்பிற்குரியது. எரிந்து கொண்டிருக்கும் அடுப்பு எரியாமலிருக்க எரியக் காரணமாக இருக்கும் விறகு நீக்கப்படவேண்டும். உமறுவின் எரிதலும் நீங்கக் காசிம் மண்ணுலகிலிருந்து நீக்கப்படவேண்டும் என்னும் குறிப்பையும் இச்சொற்றொடரில் பெய்து வைக்கிறார்.

புலவர் தம் கற்பனைத் திறத்தால் குதிரைக்கும் சிந்திக்கவல்ல ஆற்றலை வழங்குகிறார்.

"கண்டவுடன் குதிரை எழும்பிக் கனைத்து
அனுமானித்து - அந்த
வண்டனைக் கிட்டவர ஒட்டாமல் வாசிக் கடித்து
மிதித்ததுவே" (132)

எனும் பாடலில் அப்துல்காசீம் போர்க்களத்தில் உமறுவின் வாளால் வெட்டுண்டுக் கீழே சாய்ந்ததும் உமறு அவருடைய தலையை வெட்ட வந்தபோது, அப்துல் காசிமின் குதிரை இதனை உள்ளத்தில் தெரிந்துகொண்டு அவனைக்கிட்ட வருவதற்கு முடியாமல் கடித்து மிதித்தது என்று குறிப்பிடுகிறார். குதிரைக்கும் ஆறாவது அறிவை வழங்கப் புலவர்களால் தான் இயலும்.

## சுவைகள்

ஒரு இலக்கியத்தின் உயிர்ப்புச் சக்தியாகக் கதைக்கரு அமையும்போது சுவைகள் அதன் நாளங்களாக விளங்கும். எந்தெந்த இடத்தில் எப்படிப்பட்ட சுவைகள் அமைய வேண்டுமோ அந்தந்த இடங்களில் அதற்கேற்ற சுவைகள் இருத்தல் வேண்டும். அவ்வாறு அமையவில்லையாயின் இலக்கியம் காலவெள்ளத்தில் கரைந்து போகும். தொல்காப்பியர் மெய்ப்பாடுகளைக் குறிக்கும்போது

நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென
அப்பால் எட்டே மெய்ப்பாடென்ப

என்று குறிப்பார். நகையும் அழுகையும் இளிவரலும் (மானக்குறைவு) மருட்கையும் (வியப்பு) அச்சமும் பெருமிதமும் வெகுளியும் உவகையும் என எட்டுவகை மெய்ப்பாடுகள் உடலில் தோன்றும். கவிதையை சுவைப்பவர்களுக்கு அக்கவிதை உருவாக்கும் உணர்ச்சியினால் உடலில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. ஆலம்நபி கதைப்பாட்டு நூலில் மிகுதியும் அவலமே காணப்படுகிறது. அவலம் உயிரிழப்பாலும் இளிவினாலும் அசைவினாலும் வறுமையினாலும் பிறக்கிறது. இந்நூல் அவலத்தின் பிழிவாகவே அமைந்துள்ளது.

கன்னிப்பருவம் அடையாத வயதில் திருமணம் நடைபெறுகிறது. கணவர் போர்க்களத்திற்கு அன்றே சென்று மாண்டு விடுகிறார். மணநாளே பிண நாளாகிறது. கனவுகளைக் கையிலேந்திக் காத்திருந்த கன்னியோ புலம்புகிறாள்.

எட்டுவய தெனக்கு என்னோடொத்த பெண்கள் கூட
இட்டமுடன் கூடித்திரியாமல் றப்பும் எழுதினானோ (171)

என்று தன் இளமையைச் சுட்டி

சாந்து கரையவில்லை கலியாணச் சடங்கு முடியவில்லை
கூந்தல் தலையவிழ்த்து இருவருங் கூடி நீராடவில்லை
(145)

என்று கூறும் போது மணமுடித்து இருவரும் ஒன்றிணையாமல் கணவர் பிணமானாரே என்ற அவலம் படிப்போரை வருந்தச் செய்யும். கன்னியாகவே வாழ்ந்து கன்னியாயிருந்து மணமுடித்துக் கன்னியாகவே இருக்கின்ற நிலை ஏற்பட்டதே என்று புலம்பும்போது அவலம் நம்மையும் ஆழ்த்துகிறது.

மாண்ட மகனின் முகத்தைப் பார்த்துப் பெற்ற தாய் புலம்பும்போது

இத்தனை நாள் வளர்த்து உன்னைத் தேடுதடா மகனே
சற்றே முழித்து என்னை ஒருதரம் பாராயோ என் மகனே
(162)

என்று கூறித் தவிக்கின்ற தாய்மையைக் காட்டுகின்றார்.

மருமகளை நோக்கிக் கண்ணீர் விட்டுப் புலம்பும்போது
அய்யோ! மருமகளே துனியாவில் ஆசையும் காணாமலே
பொய்யாய் மணமுடித்து உன்னைவிட்டுப் போராரே
என்ன செய்வேன் (183)

என்று கூறுகிறாள்.

இந்நூலில் அவலத்திற்கு அடுத்த நிலையில் "வீரம்" காணப்படுகிறது. அப்துல்காசீம் போர்க்களத்தில் பகைவரை

வெட்டி வீழ்த்திய பின்பு

சங்கத்தில் பாய்ப்பமென்றார் சிங்கக்குட்டி வந்திங்கே
நிற்குதடா - அந்தப்
பங்கன் உமறை இங்கே பார்க்க வரச் சொல்லடா (111)

என்று வீரஞ்செறிந்த வார்த்தையைக் கூறுகிறார். போர்க் களத்தையே பாடல்கள் களமாகக் கொண்டதால் வீரம் செறிந்து காணப்படுகின்றன.

அஸ்றக்கும் போர்க் களத்தில் தன் நான்கு மகன்களையும் பலி கொடுத்தவுடன், உமறுவிடம் ஓடி வருகிறான். உமறு அவனைப்பார்த்து

"பார்த்து உமறு மன்னன் அஸ்றக்கைப் பல்லைக்
கடித்து இறுக்கி
நேற்றைய பிள்ளையிவன் அவனுக்குத் தோற்றாயோ
என்று சொன்னான் (60)

எனும் பாடலில் உமறு அஸ்றக்கை இளிவு தோன்றக் கேட்பதைக் காணலாம். அபுல்காசீமை நேற்றைய பிள்ளை அவனிடம் நாம் போரிடுவது ஞாயமல்ல என்று அஸ்றக்குக் கூறியதைத் திருப்பி அவனிடமே அவனுக்கு மானக்குறைவு ஏற்படுகிற அளவில் கேட்டான்.

அபுல்காசிமின் பெருமிதத்தைக் குறிக்கும்போது

பாலில் பரிமேல் ஆதில் வந்த மன்னரைச் குறையிட்டுத்
தாவிப் படைபொருதி எசீது தளத்தைக் கறுவறுத்தார்
(69)

என்று குறிப்பார். பகைவர்களையெல்லாம் தம் வாள்வீச்சால் அபுல்காசீம் அழித்துவிட்டு வீடு திரும்புகிறபோது அவரின் பெருமிதத்தை இப்பாடல் குறித்து நின்றது.

போர்க்களத்தில் அபுல்காசீம் பகைவீரர்களை அழித்தபின்பு சினம் கொண்டவராய் எங்கே உமர் என்று கேட்கிறார்.

வெட்டிக் கறுவெறுந்து காசின் வெளியிலே

நின்றுகொண்டு - அந்த

மட்டி உமர் எங்கே அவன் என்று சொன்னார் (110)

என்ற பாடலில் வெருளிச்சுவை வெளிப்பட்டு நிற்கிறது.

அபுல்காசிம் போருக்குச் சென்று வந்தபின் புதும் மனைவியுடன் விதானம் கட்டப்பட்ட கட்டிலிலே மகிழ்வாக இருந்தார் என்னும் உவகைச் சுவையை

"வந்து இருவரும் மஞ்சமஞ்சத்தில் மேலிருந்த

சந்தோஷ வேளையிலே ......................' (88)

எனும் பாடல்வழி அறியலாம்.

## ஆய்வு முடிவுகள்:-

1. 'ஆலம்நபி கதைப்பாட்டு' எனும் பெயரே உண்மைப் பெயராகும். 'காசிம் படைப்போர்' என்பது பாட்டைப் பிறர்வழி கேட்ட புலவர் வைத்துக்கொண்டது.
2. இந்நூலின் ஆசிரியர் பெயர் ஓலைச்சுவடியில் இல்லை.
3. எளிய, இனிய, நாட்டுப்புற நடையை ஆலம்நபி கதைப்பாட்டு கொண்டு கற்போர் நெஞ்சைக் கவர்கிறது.
4. கதைத்தொடக்கம் சரியான இடத்தில் தொடக்கம் பெற்றுள்ளது. ஆனால் காசிம் படைப்போரில் வரலாற்று முரண் காணப்படுகிறது.
5. காப்புச்செய்யுள் ஆலம்நபி கதைப்பாட்டில் கண்ணிகளாகவே உள்ளன. காசிம் படைப்போரில் நூல் பெற்ற வரலாற்றைக் காப்புச்செய்யுள் என்ற பெயரில் அமைத்துள்ளனர்.
6. முன்னோர்கள் பாடியதால் காலம் உறுதியாகக் கணிக்க முடியவில்லை. ஓலைச்சுவடியில் இருப்பதால் இருநூறு ஆண்டு காலத்திற்கு முந்தியதாகக் கொள்ளலாம்.

7. காசிம் படைப்போர் என்னும் நூலை அப்துல் காதிர்புலவர் இயற்றினார் என்று இஸ்லாமியக் கலைக்களஞ்சியம் குறித்துள்ளது. இவர் வாழ்ந்த காலம் காணவில்லை.

8. அபுல்காசிமை வெட்டியது 'இப்னு சாஅது உர்வா' என்று இஸ்லாமியக் கலைக்களஞ்சியம் குறிக்கிறது. இது தவறான செய்தியாகும். அவரை வெட்டியது 'உமறு இப்னு சாஅது' என்பதே உண்மை.

9. ஆலிம்நபி கதைப்பாட்டு நூலில் ஆற்றொழுக்காக அமைந்திருக்கும் கதை கூறும் பாங்கும், மூலத்தன்மை கொடாது அமைந்திருப்பதும் நூலின் சிறப்பாகும்.

10. காசிம் படைப்போரில் புலவர்களின் தமிழ்நடை இடைச் செருகல்களாக இணைந்துள்ளன

11. இஸ்லாமிய உலகம் தன் இலக்கிய வரலாற்றில் 'கதைப்பாட்டு' எனும் தூய தமிழ்ச் சொல் கொண்ட நூலை முதன்முதலாக சேர்த்துக் கொள்கிறது.

## வரலாற்று மாந்தர்கள்:-

## அலியார்

அபூதாலிப் அவர்களுக்கும் அவரின் மனைவி பாத்திமா அவர்களுக்கும் கி.பி.600 இல் மக்காவில் பிறந்தார். இவர்களின் அன்னையார் 'அஸத்' என்று பெயரிட்டார் தந்தை 'அலி' என்று பெயரிட்டார். அரபுநாட்டில் 'அஸத்துல்லாஹ்' (அல்லாஹ்வின் சிங்கம்) என்றழைப்பர். இவர்கள் முகம்மது நபியவர்களிடம் ஐந்து வயதிலிருந்தே இருந்து வந்தவர். மிகச் சிறந்த வீரராகத் திகழ்ந்தவர். முகம்மது நபியவர்களின் அருமை மகளாரைப் பத்ருப் போரின் வீரத்தின் பரிசாகத் திருமணம் செய்து கொண்டார். முகம்மது நபியவர்களின் மறைவிற்குப்பின் இஸ்லாமிய ஆட்சித் தலைமையை அபூபக்கர் ஏற்றுக்கொண்டார் அவர்களுக்குப்பின் உமர் அவர்களும் அவர்களுக்குப்பின் உதுமான் அவர்களும் தலைமை ஏற்றனர். இம்மூவருக்குப்பின் அலியாரவர்கள் தலைமை

பொறுப்பேற்றார். உதுமான் அவர்களின் மறைவிற்குப்பின் ஐந்து நாட்கள் கழித்துப் பிறகு ஹிஜ்ரி 35இல் துல்ஹஜ் பிறை 25 வெள்ளிக்கிழமை கலீபா (தலைமை) பதவியை ஏற்றார். சிரிய மக்கள் முஆவியா தலைமையில் அலியின் அதிகாரத்தை எதிர்த்த போது அவர்களுடன் 'ஸிஃப்பின்'' எனுமிடத்தில் போரிட்டார் போர்க்களத்தில் முஆவியா கட்சிகளில் திருக்குர்ஆன் பிரதியை வைத்துக்கட்டி சமாதானம் கோரினர். இதன்பின் இவர் இஸ்லாமிய அமைதிக்காக சமாதான உடன்படிக்கை செய்து கொண்டார். தமது 63 வயதில் பகைவன் ஒருவனால் கொல்லப்பட்டு மரித்தார். இவர்களுடைய இரண்டு மகன்கள் தான் ஹசனும் ஹுசைனுமாவார்.

## முஆவியா

அபூசுப்யானுக்கும் ஹிந்தா என்ற பெண்மணிக்கும் ஹிஜ்ரத்துக்குப் பதினைந்தாண்டுகளுக்கு முன் பிறந்தார். இவர் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டபோது வயது 23 ஆகும் முகம்மதுநபி அவர்களுக்கு வேதவெளிப்பாடுகளை எழுதும் எழுத்தாளராக நியமிக்கப்பட்டார். அபூபக்கர் ஆட்சியின்போது திமிஷ்க் எனும் பகுதிக்கு ஆளுநராக இருந்தார். உதுமான் ஆட்சியின் போது சிரியாவின் ஆளுநராக நியமிக்கப்பட்டார். அலியின் ஆட்சியின் போது இவர் ஆளுநர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார் இதன் விளைவாகக் கலகம் மூண்டு சமாதான உடன்படிக்கை செய்து கொண்டார். இராக் மக்கள் அலி அவர்களையும் சிரிய மக்கள் இவரையும் தலைவராக கொண்டனர். அலியின் மறைவிற்குப்பின் அவர் மகன் ஹஸன் பொறுப்பேற்றார். மீண்டும் போர் தொடங்க ஹஸன் கலிபா பொறுப்பைத் துறந்தார். ஹிஜ்ரி 41ஆம் ஆண்டு ரபியுல் அவ்வல் 25 ஆம் நாள் எல்லா முஸ்லிம்களுக்கும் இவரே கலிபாவானார். ஹிஜ்ரி 60 ரஜப் முதல்தேதி திமிஷ்கில் மரணம் அடைந்தார். இவர் செய்த அடிப்படைத் தவறு குடியாட்சி முறையை மாற்றித் தனக்குப்பின் தன் மகன் யஜீதை நியமித்து முடியாட்சியை உருவாக்கியது தான்.

## ஹஸன்

அலியார் அவர்களுக்கும் பாத்திமா அவர்களுக்கும் ஹிஜ்ரி 3, ரமலான் பிறை 15 வியாழக்கிழமை பிறந்தார். முகம்மது நபியவர்களின் பேரர். இவர் தந்தை அலியாரின் மறைவிற்குப்பின் ஆறு மாத காலமே கலீபாக இருந்தார். இதன்பின் இவருக்கும் முஆவியாவிற்கும் ஏற்பட்ட உடன்பாட்டால் ஹிஜ்ரி-41 இல் கலிபாப் பதவியைத் துறந்தார். ஹிஜ்ரி49 இல் ஸபர் மாதம்7ஆம் நாள் நஞ்சூட்டப்பட்டு மறைந்தார். இவருக்குப் பன்னிரண்டு ஆண் மக்களும் ஐந்து பெண் மக்களும் பிறந்தனர்.

## ஹுஸைன்

அலியாருக்கும் பாத்திமாவுக்கும் பிறந்த இரண்டாவது மகன் இவர்கள் ஹிஜ்ரி 4. ஷாபான், பிறை 5ஆம் நாள் பிறந்தார். இவர்கள் மூஆவியா அளித்து வந்த உதவித்தொகையுடன் வாழ்ந்து வந்தார். முஆவியா தனக்குப்பின் தன்மகன் யஸீதை நியமித்ததும், இவர்தம் குடும்பத்தினருடன் மக்கா வந்தடைந்தார். கூஃபா நகர மக்கள் யஸீதின் கொடுமைக்கு ஆளானதும் இவர்களை மீண்டும் பொறுப்பேற்க வேண்டினர். இவர்களை நம்பி வந்ததும் துரோகம் செய்தனர். கர்பலா எனும் இடத்தில் நடைபெற்ற போரில் இவர்களின் குடும்பத்தினர் 72பேர் இறந்தனர். போர்க்களத்திலேயே மரித்த இவர்களின் தலையை வெட்டித்தனியே எடுத்து மதீனாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் அதனை அவர் தம் அன்னையின் அடக்கத் தலத்திற்கு அருகில் அடக்கம் செய்யப்பட்டதாகவும் குறிக்கின்றனர்.

## யஸீத்

இவர் மூஆவியாவின் மகன். தனக்குப்பின் தன்மகன் யஸீதே ஆட்சிப் பொறுப்பேற்க வேண்டும் என்று மூஆவியா செய்த ஏற்பாட்டின் படி, தந்தை மறைந்த அன்றே (கி.பி.680, ஏப்ரல் 7) ஹிஜ்ரி 60 ரஜப் பிறை முதல் நாள் ஆட்சிப்பொறுப்பேற்றார்.

இவர் ஒரு குடிகாரர். ஆதலால் மக்கள் இவரை வெறுத்தனர். மூன்றரையாண்டு ஆட்சிக்குப் பின் தமது 39 வயதில் ஹிஜ்ரி 64 ரபியுல் அவ்வல்முறை 4 (கி.பி. 683 அக்டோபர் 31) மரணம் அடைந்தார்.

## பாத்திமா

முகம்மதுநபி அவர்களுக்கும் அன்னை கதீஜா அவர்களுக்கும் பிறந்தவர். வீரர் அலியாரை மணந்து கொண்டவர். ஹசன் ஹுசன் இருவரையும் ஈன்றெடுத்தவர்கள். நபிகள் பெருமானுர் இறந்த ஆறு மாதங்களில் தமது 29 வயதில் ரமலான் பிறை 3 இல் மரணமானுர்கள். எளிய வாழ்வும் கொடை உள்ளமும் கொண்டவர்கள். வாழ்நாளில் மிகுதியும் அழுதவர்கள்.

## ஜிப்ரீல்

இவர் வானவர்களின் தலைவராவார். இறைத் தூதர்களுக்கு வேத . வெளிப்பாட்டைக் கொணர்ந்து தருபவர். மூஸா நபி, ஈசா நபி, ஜகரியா நபி, முஹம்மது நபி, இவர்களைத் தவிர வேறு யாரும் இவரை நேரில் பார்த்ததில்லை. முதன் முறையாகப் பார்த்த போது முகம்மது நபியவர்கள் மயங்கிக் கீழே விழுந்து விட்டார்கள்.

*கடவுள் வாழ்த்து:-*

1. ஆலம் படைத்தவனே புகழாய் நிறைந்தோனே
காவல் வளர்ந்தேற யென் நாயனே காத்தருள்வாய்

*(புணர்ச்சி பிரித்து எழுதியது)*

ஆலம் படைத்தவனே புகழாய் நிறைந்தவனே
காவல் வளர்ந்து ஏறஎன் நாயனே காத்து அருள்வாய்

(பொருளுரை)

அனைத்து உலகையும் படைத்துக் காக்கும் இறைவனே— புகழாகவே விளங்குபவனே — உலகைக் காத்து வாழ்வளிக்க இறைவனே அருள்புரிவாயாக.

(சிறப்புரை)

ஆலம் — அனைத்து உலகங்கள்
புகழாய் நிறைந்தோன்—எல்லாப் புகழும் இறைவனுக்கே உரியது இதனை முஸ்லிம்கள் 'அல் ஹமது லில்லாஹ்' என்று குறிப்பிடுவர்.

## முகம்மது நபி, அலியார், அசனுசன் வாழ்த்து

2. ஆதியா யுன்தூதர் மருகரான அலியாரும்
நீதி அசனுசனுர் பாதமும் நித்தமும் போற்றிசைப்பேன்.

ஆதியாய் உன்தூதர் மருகர் ஆன அலியாரும்
நீதி அசன் உசனுர் பாதமும் நித்தமும் போற்றி இசைப்பேன்.

(பொ.ரை)

உலகின் தொடக்கத்திலேயே படைக்கப்பட்ட இறைவனின் திருத்தூதரான முகம்மது நபி, அவர்தம் மருமகனார் அலியார், நீதிக்கெனத் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட ஹசன், ஹுசனார்

பாதங்களை நாளும் வாழ்த்துகிறேன்.

(சி.உரை)

அலியார் — முகம்மது நபியவர்களின் மகளார் பாத்திமாவின் கணவர்

அசன், உசன் — அலியாரின் பாசமிகு பிள்ளைகள்.

# எசிது போருக்கு வருதல்

3. என்டிசையும் போற்றும் அலியா றீன்ற வரிப்புலியை -அந்த
வன்டனெசீது படை பாளையம் வந்து வளைந்து கொண்டான்.

என்திசையும் போற்றும் அலியார் ஈன்ற வரிப்புலியை—அந்த
வன்டன் எசீது படை பாளையம் வந்து வளைந்து கொண்டான்.

(பொ.உரை)

எட்டுத்திக்குகளும் போற்றுகின்ற அலியார் பெற்றெடுத்த புலியை நிகர்த்த வீரங்கொண்ட உசைனைப் பகைவன் எசீது படைகள் முற்றுகையிட்டன.

(சி.உரை)

அலியார் — முகம்மது நபிகளாரின் மகள் பாத்திமாவை மணம் புரிந்தவர்—மருமகனர்.

வரிப்புலி — அலியாரின் மகனார் உசைன்

எசீது — இஸ்லாமிய மக்களின் தலைவராக (கலிபா) முடி சூட்டப்பட்டவர். இவர் தந்தை 'மூஆவியா' இதனை மக்கள் விருப்பமின்றிச் செய்து முடித்தார்.

# போருக்குக் காரணம்

ஆலம் நபி கிளையில் நாங்கள் வரும் கோத்திரத்தில் கலகக்

கொடுமையினால் இந்தக் காரணம் வந்ததென்றார்

ஆலம் நபி கிளையில் நாங்கள் வரும் கோத்திரத்தில் கலகக்

கொடுமையினால் இந்தக் காரணம் வந்தது என்றார்.

(பொ.ரை)

முகமது நபிகளார் பாரம்பரியத்தில் தோன்றிய காரணத்தாலும், இதற்கு முன் ஆட்சிப் பொறுப்பேற்க முஆவியா செய்த கலகத்தின் காரணத்தாலும் இத்தகைய பகை தோன்றியது.

(சி.ரை)

கோத்திரம் — தலைமுறையினர்

கலகக் கொடுமை — முகம்மது நபி அவர்களுக்குப்பின் முஆவியா என்பவர் உமறு, உதுமான் இவர்களின் ஆட்சிக் காலத்தில் சிரியா நாட்டின் ஆளுநராக நியமிக்கப்பட்டிருந்தார். அலியார் தலைமைப் பொறுப்பேற்றதும் ஆளுநர் பொறுப்பிலிருந்து நீக்கவும் 'முஆவியா' போர்க்கொடி தூக்கிக் கலகம் செய்தார். இருதரப்பினர்க்கும் சண்டை 'சிஃப்பின்' எனுமிடத்தில் நடைபெற்றது. சிரியாவிற்கு முவியாவைச் சிரியா மக்கள் தலைவராகத் தேர்வு செய்து கொண்டனர்.

# விதியோ

காசின் மனமுருகி இருகண்களும் ரெத்தஞ் சிந்த — அந்த

ஹாசிம் கிளை வழிக்கு விதித்த ஆண்டவன் கற்பனையோ

காசின் மனம் உருகி இருகண்களும் ரெத்தம் சிந்த — அந்த
ஹாசிம் கிளை வழிக்கு விதித்த ஆண்டவன் கற்பனையோ

(பொ.ரை)

அப்துல் காசிமின் மனம் உருகி இரண்டு கண்களிலிருந்தும் இரத்தக் கண்ணீர் வழிய, முகம்மது நபி கிளை வந்த மக்களுக்கு இறைவன் விதித்த விதியோ என்று எண்ணுவாரானார்,

(சி.ரை)

ஹாசிம் கிளை — முகம்மது நபிகள் மூதாதையர் பெயராகும். கிலாப் என்பவரின் புதல்வர் குசை, அவரின் புதல்வர் அப்துல் முனைப், அவரின் மகன் ஹாசிம் இவர்மகன் அப்துல்லா முத்தலிபு இவருடைய மகனார் முகம்மதுநபி. ஆதலால் நபிகளாரின் பாரம்பரியத்தை மூதாதையரான ஹாசிம் வழி குறிப்பிடுகின்ற மரபு அன்று இருந்துவந்தது.

காசீம் அசனாருடைய மகனாவார்.

## உடன் பிறந்தவர் இறந்தார் எனும் செய்தி வரல்

6. தங்களுடன் பிறந்தோர் முடிசரிந்து கிடக்க இருகாது
கன்னங்கள் பட உசேனூர் பாதம் பணிந்து சொல்வார்.

தங்கள் உடன் பிறந்தோர் முடிசரிந்து கிடக்க இருகாது
கன்னங்கள் பட உசேனூர் பாதம் பணிந்து சொல்வார்.

(பொ.ரை)

அப்துல் காசிம் தம்முடன் கூடப்பிறந்த தமையனார் அலி அக்பரைப் பகைவர்கள் வெட்டிக் கீழே சாய்த்து விட்ட கொடுமையைக்கண்டு சினந்தவராய்த் தம் சிறிய தந்தையின் பாதம் பணிந்து சொல்லத் தொடங்கினார்.

(சி.ரை)

உடன் பிறந்தோர் — அலி அக்பர் ஆவார். இவர் ஹுசைன் அவர்களின் மூதல் மகனாவார். இவர் கர்பலாப் போர்க்களத்தில் புகுந்து போரிட்டுப் பலரைக் கொன்றார். இவரின் பின்னே வந்த ஸினான் இப்னு அனஸ் என்பவன் ஈட்டியால் குத்தினான். மற்றவர்களும் இவரைக் குத்திக் கொன்றனர். இவர் அப்துல் காசீமுக்குச் சிறிய தந்தையின் மகன். சோதர உறவுடையவர்.

## அப்துல் காசிம் கூறியது

7. தங்க முடிசூடும் எங்கள் தமையனார் வபாத்தானார்-என் நெஞ்சம் பொறுக்குதில்லை சலிப்படங்கவும் கூடுதில்லை.

தங்க முடிசூடும் எங்கள் தமையனார் வபாத்தானார்-என் நெஞ்சம் பொறுக்குதிலலை சலிப்பு அடங்கவும் கூடுதில்லை

(பொ.ரை)

தங்களுக்குப் பின்னே இவ்வரசை ஆட்சி புரியவிருந்த எங்களின் தமையனார் போரிலே வீரமரணம் அடைந்து விட்டார். என்னுடைய நெஞ்சு பொறுக்கவில்லை. உள்ளத்திலேற்பட்டுள்ள சினமும் அடங்கவில்லை.

(சி.ரை)

வபாத்தானார் — மரணமடைந்தார்.

## ஹுசைனாரிடம் போருக்குச் செல்ல அனுமதி கேட்டல்

8. எங்கள் தகப்பனாருடன் பிறந்த தம்பித்துணையாரே

மனம் நொந்து சலியாமல் விடை தந்து அனுப்ப வேணும்.

எங்கள் தகப்பர் உடன் பிறந்த தம்பித் துணையாரே-மனம்

நொந்து சலியாமல் விடை தந்து அனுப்ப வேணும்.

(பொ.ரை)

எங்களுடைய தகப்பனார் ஹசனாருடன் பிறந்த ஹுசைனாரே உள்ளம் வருந்தாமல் எனக்கு விடை தந்து போர்க்களம் செல்ல வாழ்த்தியனுப்ப வேண்டுகிறேன்.

9. தந்தை பழிவாங்கியே எசீது குலத்தைக் கருவறுத்து

வந்து பாதம் பணிய யெனக்கு வாழ்த்தி விடை கொடுப்பீர்.

தந்தை பழி வாங்கியே எசீது குலத்தைக் கருவறுத்து

வந்து பாதம் பணிய எனக்கு வாழ்த்தி விடைகொடுப்பீர்

(பொ.ரை)

என் தந்தையைக் கொன்ற எசீதின் குலத்தையே அடியோடு அழித்து வந்து தங்களின் பாதம் பணிந்து வாழ்த்துப் பெற எனை வாழ்த்தி அனுப்பவேண்டுகிறேன்.

## ஹுசைனார் அனுமதி தரத் தயங்குதல்

10. எங்கள் குலக்கொடியே அசனார் ஈன்ற அலைகடலே என்

தங்க மகனாரே விடைதாரது எந்த விதம்

எங்கள் குலக் கொடியே ஹசனார் ஈன்ற அலைகடலே—என்
தங்க மகனாரே விடை தாரது எந்த விதம்

(பொ.ரை)

எங்கள் குலத்தில் உதித்த கொடியே, ஹசனாருக்குப் பிறந்த அலைகடலே, எங்களின் அன்புக்குரிய தங்க மகனாரே படுகளத்திற்கு விடை தந்து அனுப்புவது எந்த விதத்தில் அமையும்

(சி.ரை)

தாரது — தருவது

11. பாவி எசீதுடனே யிந்த பாலனும் பரியேறித்
தாவிப் படை பொருத விடை தாரது எந்த விதம்

பாவி எசீதுடனே இந்த பாலனும் பரியேறித்
தாவிப் படை பொருத விடை தாரது எந்தவிதம்.

(பொ.ரை)

பாவமே வடிவான எசீதுடன் இளம் வயதுடைய காசீம் குதிரை மீது ஏறிப் போர்க்களம் சென்று போரிட விடை தருவது எந்த விதமாகும்.

(சி.ரை)

பரி — குதிரைகள்

# மீண்டும் அனுமதி கேட்டல்

12. எந்தனை ஈன்றெடுத்த என் தந்தையெனை வாழ்த்தும்படி
சந்தர்ப்பம் பண்ணி விடை தந்து அனுப்ப வேணும்.

எந்தனை ஈன்று எடுத்த என் தந்தை எனை வாழ்த்தும்படி
சந்தர்ப்பம் பண்ணி விடை தந்து அனுப்ப வேணும்.

(பொ. ரை)

என்னைப் பெற்றெடுத்த என் தந்தை ஹசனார் என் வீரங்கண்டு வாழ்த்துவதற்குறிய சந்தர்ப்பத்தை உண்டாக்க விடை தந்து அனுப்ப வேண்டுகிறேன்.

(சி. ரை.)

என் தந்தை — ஹசனார்

# ஹுசைனார் காசிமுக்குத் திருமணம் செய்யவிரும்புதல்

13. உந்தனை ஈன்றெடுத்த அசனர் ஓசியத்துச் சொன்னபடி
வந்த மகனுரே உமக்கு மணக்கோலஞ் செய்யவேண்டும்.

உந்தனை ஈன்று எடுத்த அசனார் ஓசியத்துச் சொன்னபடி
வந்த மகனுரே உமக்கு மணக்கோலம் செய்ய வேணும்.

(பொ.ரை)

உன்னைப் பெற்றெடுத்த அசனார் முன்னமேயே கூறியபடி உனக்குத் திருமணம் செய்யவேண்டியிருக்கிறோம்.

(சி.ரை)

ஓசியத்து — 'வஸிய்யத்' — தான் வாழும் நாளிலேயே தன் மறைவிற்குப்பின் செய்ய வேண்டிய காரியங்களை முன்கூட்டியே சொல்வது வஸிய்யத் சொல்வதாகும். இறப்பதற்கு முன் வஸிய்யத் செய்வது நபிகளாரின் வழி முறையாகும்.

14. விண்ணினில் பொற்கொடியார் பீவி பாத்திமா பெற்ற சேயின்
கன்னிக் குலக்கொடியை உமக்குக் கலியாணஞ் செய்யவேணும்.

விண்ணினில் பொற்கொடியார் பீவி பாத்திமா பெற்ற சேயின்
கன்னிக் குலக்கொடியை உமக்குக் கலியாணம் செய்யவேணும்.

(பொ.ரை)

**விண்ணிலே இருக்கும் பொற்கொடியைப்போன்ற பீவி பாத்திமா பெற்றெடுத்த ஹுசைனாரின் மகளைக் கன்னிக்குலக்கொடியை உங்களுக்குத் திருமணம் செய்யவேண்டும்.**

(சி.ரை)

பீவி — பீபி — இச்சொல் துருக்கிச் சொல்லாகும். இதன் பொருள் 'சீமாட்டி' என்பதாகும். பீபி என்ற சொல்லே 'பீவி' என்று மருவி தமிழில் வழங்கி வருகிறது.

# திருமணம் நடைபெறுதல்

**15.** ஆல நபி சிபுரீல் அலியாரும் வந்திருந்து அந்தப் பாலனுக்கும் கன்னிக்கும் நிக்காஹ் பாங்காய் முடித்தெழுந்தார்.

ஆலநபி சிபுரீல் அலியாரும் வந்திருந்து அந்தப் பாலனுக்கும் கன்னிக்கும் நிக்காஹ் பாங்காய் முடித்தெழுந்தார்.

(பொ.ரை)

**கர்பலாப் போர்க்கள மைதானத்தில் முஹம்மது நபிகளாரும் ஜிப்ரயீலும், அலியாரும் வந்து தோன்றி அப்துல் காசிமுக்கும் கன்னிக்கும் திருமணம் செய்து வைத்துச்சென்றார்கள்.**

(சி.ரை)

ஜிப்ரீல் — Gabriel — சுர்யானி மொழியில் 'ஜிப்ர்' என்றால் 'அடியார்' என்றும் 'ஈல்' என்றால் 'இறைவன்' என்றும் பொருள்படும். இவர் வானவர்களின் தலைவர். நபிமார்களுக்கு இறை அறிவிப்பைக் கொண்டு வருபவர்.

நிக்காஹ் — திருமணம்

# காசிம் போருக்குப் புறப்படுதல்

16. நிக்கா முடிந்த பின்பு நீதர் அப்துல்காசின்
பாங்கா யெழுந்திருந்து உசனுர் பாதம் பணிந்து சொல்வார்

நிக்கா முடிந்த பின்பு அந்த நீதர் அப்துல் காசீம்
பாங்காய் எழுந்திருந்து உசனார் பாதம் பணிந்து சொல்வார்.

(பொ.ரை)

திருமணம் நிறைவேறியதும் நீதியை நிலைநாட்டவல்ல அப்துல்காசீம் பணிவுடன் எழுந்திருந்து உசனுர் பாதம் பணிந்து சொல்லத் தொடங்கினார்.

(சி.ரை)

நீதர் — நீதியை நிலைநாட்ட வல்லவர்
பாங்காய் — தன்மையாய்

17. ஹக்கனருகில் புலி அலியார் பெத்த மகனுரே
தக்கோன் புறஞ்சாட்டி விடை தந்து அனுப்ப வேணும்
ஹக்கன் அருகில் புலி அலியார் பெத்த மகனுரே
தக்கோன் புறம் சாட்டி விடை தந்து அனுப்ப வேணும்

(பொ.ரை)

இறைவனின் அரியாசனத்தருகில் வீற்றிருக்கும் வீரப்புலி அலியாரின் அன்பு மகனாரே! இறைவனின் மீது பொருப்பினையிட்டு விடைதந்து அனுப்ப வேண்டுகிறேன்.

(சி.ரை)

ஹக்கன் — இறைவன், 'ஹக்' எனும் அரபுச் சொல்லிற்கு 'உண்மை என்பது பொருள் ஆகும் 'உண்மையானவன்' என்று இறைவனைக் குறிக்கும் சொல்லாக 'ஹக்கன்' எனும் சொல் அமைந்துள்ளது.

அர்ஷ் — இறைவனின் அரசு பீடத்தைக் குறிக்கும் சொல். இதனை ஒன்பதாவது வானம் என்று கூறுவர்.

## றசூலைனார் காசிமை அன்னையிடம் அனுப்புதல்

18. என் மகனே கனியே எங்கள் நலச் சிற்றரசே—என்
பொன்னின் மகனாரே உனையே பெற்ற பேதைக்குப் போய்ச்
சொல்வீர்.

என்மகனே கனியே எங்கள் குலச் சிற்றரசே—என்
பொன்னின் மகனாரே உனையே பெற்ற பேதைக்குப் போய்ச்
சொல்வீர்.

(பொ.ரை)

என்னுடைய மகனே—எங்கள் குலத்தின் இளவரசே—பொன் போன்ற மகனே உன்னைப் பெற்றெடுத்த தாயிடம் தங்களின் புறப்பாட்டைக் கூறிச் செல்வீர்.

## தாயிடம் அனுமதி கேட்டல்

19. தாயர் மனை புகுந்தெழுந்து சரணாகதி பணிந்து அந்த
மாயன் எசீதை வெல்ல எனக்கு மகிழ்ந்து விடை கொடம்மா.

தாயர் மனை புகுந்து எழுந்து சரணாகதி பணிந்து அந்த
மாயன் எசீதை வெல்ல எனக்கு மகிழ்ந்து விடை கொடு
அம்மா

(பொ.ரை)

தாய் இருக்கும் வீட்டிற்குள் நுழைந்து பாதங்களில் விழுந்து —— பகைவன் எசீதை வென்றிட எனக்கு மகிழ்வுடன் விடை கொடுத்து அனுப்புங்கள் அம்மா.

(சி.ரை)

சரணாகதி — பாதங்களில் விழுவது. இறைவனின் திருத்தாட்களில் விழுவதை சரணாகதி என்பர்.

20. பெண்களுக்கரசியரே யென்னைப் பெற்ற இளமயிலே அந்தப் பங்கனெசீதை வெல்ல யென் முகம் பார்த்து விடை கொடம்மா

பெண்களுக்கு அரசியரே என்னைப் பெற்ற இளமயிலே அந்தப் பங்கன் எசீதை வெல்ல என் முகம் பார்த்து விடை கொடு அம்மா

(பொ.ரை)

பெண்களுக்கெல்லாம் அரசியாக விளங்குபவரே. என்னைப் பெற்றெடுத்த இளமயிலே. அந்தப் பங்கன் எசீதை வெல்ல என்னுடைய முகத்தைப் பார்த்து விடை கொடுத்து அனுப்புங்கள் அம்மா.

21. மாவியா கிளையிலுள்ள அந்த வஞ்சனெசீதுடனே அவன் மார்பில் பொருத யெனக்கு வாழ்த்தி விடை கொடம்மா.

மாவியா கிளையில் உள்ள அந்த வஞ்சன் எசீதுடனே அவன் மார்பில் பொருத எனக்கு வாழ்த்தி விடை கொடு அம்மா.

(பொ.ரை)

முஆவியாவின் கிளையில் தோன்றியவனும் அவனுடைய மகனும் வஞ்சகம் நிறைந்தவனுமான எசீதுடனே போரிட்டு அவனைக் கொல்ல வாழ்த்தி விடை கொடுங்கள் அம்மா.

(சி.ரை)

மாவியா — முஆவியா. அபூசுப்யானுக்கும் ஹிந்தாவுக்கும் பிறந்த மகன். நபிகள் நாயகத்திற்கு இறை அறிவிப்பு வருவதை எழுதும் எழுத்தராக விளங்கினார்.

# தாயின் ஆற்றாமை

22. பத்து மாதம் சுமந்து மகனே உன்னைப் பெற்ற இளவயிறு
பத்துதே யென்மகனே நான் செத்தாலும் ஆறுவேனோ.

பத்து மாதம் சுமந்து மகனே உன்னைப் பெற்ற இளவயிறு
பத்துதே என் மகனே நான் செத்தாலும் ஆறுவேனோ.

(பொ.ரை)

அன்பு மகனே, பத்து மாதம் வயிற்றில் சுமந்தவள், உனக்கு விடை கொடுக்க என் மனம் அஞ்சுதே. இந்நிலை ஏற்பட்டு விட்டதே, நான் இறந்து போனாலும் என் உள்ளம் ஆருதே.

(சி.ரை)

இளவயிறு பத்துதே — இது நாட்டுப் புற வழக்காறு. வயிறு எரியுதே எனும் பொருளில் வழங்கப் பட்டுள்ளது.

23. சித்தம் மயங்குதடா உடல்கள் சேரக்கருகுதடா
பத்தி யெரியுதடா மகனே உன்னைப் பெத்த இளவயிறு.

சித்தம் மயங்குதடா உடல்கள் சேரக் கருகுதடா
பத்தி எரியுதடா மகனே உன்னைப் பெத்த இளவயிறு

(பொ.ரை)

என்னுடைய உள்ளம் இக்கொடுமையை எண்ணி மயங்குதடா மகனே. என்னுடைய உடம்பே நெருப்பிலிட்டது போல் வெந்து போகிறதே. எண்ணுந்தோறும் வயிறு அனலாய் எரிகிறதே மகனே.

# மீண்டும் அனுமதி வேண்டல்

24. பார்த்து மனமகிழ்ந்து உங்கள் பால் சலிப்படக்கி வாழ்த்தி விடை கொடுத்து என்னைப் போற்றி யனுப்புமம்மா.

பார்த்து மனம் மகிழ்ந்து உங்கள் பால் சலிப்பு அடக்கி வாழ்த்தி விடை கொடுத்து என்னைப் போற்றி அனுப்பும் அம்மா.

(பொ.ரை)

என்னைப் பெற்றெடுத்த தாயே! என்னை நன்றாகப் பார்த்து மனம் மகிழ்ச்சி அடைந்து, உங்கள் உள்ளத்தில் உள்ள சலிப்பினை அடக்கிப் போரில் வெற்றி பெற்றுச் சிறக்க என்னை வாழ்த்தி விடை கொடுத்து அனுப்புங்கள்.

25. பாத்திமுத்து சுகராவுக்கும் நல்ல பாங்காய் முகம்மதற்கும் பாத்திகா ஓதியென்னை வாழ்த்தி அனுப்புமம்மா.

பாத்திமுத்து சுகராவுக்கும் நல்ல பாங்காய் முகம்மதற்கும் பாத்திகா ஓதியென்னை வாழ்த்தி அனுப்பும் அம்மா,

(பொ.ரை)

பெண்களின் அன்னை பாத்திமுத்து சுகராவுக்கும் இறைவனின் திருந்தூதர் முகம்மது நபி அவர்களுக்கும் பாத்திஹா ஓதி என்னை வாழ்த்தி அனுப்புங்கள்.

(சி.ரை)

பாத்திமுத்து சுகரா — முகம்மது நபியவர்களின் மகளார். வீரர் அலியாரின் மனைவியார் ஹசன் ஹுசேன் இருவரின் தாயார். "சுஹரா" என்னும் சொல்லுக்குப் "பிரகாசமானவர்" என்று பொருள்

(சி.ரை)

முகம்மது — முகம்மது நபியவர்கள்

பாத்திகா — 'பாத்திஹா' — இறைவனிடம் இறைஞ்சுதல் எந்த ஒரு பணியையும் தொடங்குவதற்கு முன் இஸ்லாமியர்கள் இறைவனிடம் இறைஞ்சிய பின் தொடங்குவர். இதனையே பாத்திஹா ஓதுதல் என்பர்.

## தாயின் விடை பெறுதல்

26. ஹாசிம் கிளா தழைக்கத் துன்யா ஆலம் வளர்ந்தோங்குக—அப்துல்
காசிம் போய் வரவே படைத்த றப்பனே காத்தருள்வாய்.

ஹாசிம் கிளா தழைக்கத் துன்யா ஆலம் வளர்ந்து ஓங்குக-அப்துல்
காசிம் போய் வரவே படைத்த றப்பனே காத்து அருள்வாய்.

(பொ.ரை)

முகம்மது நபி கிளையில் பிறந்த அப்துல் காசிம், ஹாசிம் குலத்தின் கிளைகள் தழைக்கவும் இவ்வுலகம் செழித்தோங்கவும் என் மகன் போய்வர இவ்வுலகைப் படைத்த இறைவனே காத்து அருள்வாயாக.

(சி.ரை)

துன்யா — மண்ணுலகம்

ரப்பனே — 'இறைவனே — 'ரப்', இதன் பொருள் இரட்சித்தல் வளர்த்தல் என்பதாகும். 'எசமான்' எனும் பொருளை 'ரப்பே' எனும் சொல் தரும். இறைவனுக்கே உரிய தனிப்பெயராகும். திருக்குர்ஆனில் இறைவனை "ரப்பில் ஆலமீன்" என்று

குறிக்கப் பட்டுள்ளது இவ்வுலகின் எசமானன் என்பதாகும்.

27. என் பாலர் அப்துல்காசிம் மணக்கோலம் அழியாமல்
அவர் பாளையம் போறதினுல் மகனைப் படைத்தோனே
காத்தருள்வாய்

என் பாலர் அப்துல் காசிம் மனக்கோலம் அழியாமல்-அவர்
பாளையம் போறதினுல் மகனைப் படைத்தோனே காத்து
அருள்வாய்.

என் அன்பு மகன் அப்துல் காசிம் திருமணம் முடிந்தவுடன் போர்க் கோலம் பூண்டு போரிடச் செல்கின்றான். இவ்வுலகைப் படைத்தவனே என் மகனை காத்து அருள்புரிவாயாக.

28. ஆதியிரசூல் மருகரான அலிபுலியே உன்பேரர்
அப்துல் காசினிடம் நின்று பேணியே காத்தருள்வாய்

ஆதி இரசூல் மருகரான அலிபுலியே உன்பேரர்—அப்துல்
காசினிடம் நின்று பேணியே காத்து அருள்வாய்

இறைவனின் தூதுவரான முகம்மது நபியின் மருகரான வீரர் அலிபுலியே — தங்கள் பேரர் அப்துல் காசீம் போருக்குச் செல்கிறார். போர்க்களத்தில் எவ்விதக் குறையும் நிகழா வண்ணம் நின்று காத்து அருள் புரிவீராக.

இரசூல் — இச் சொல்லிற்குத் "தூதுவர்கள்" என்று இறைவனால் மக்களுக்கு நேர்வழி காட்ட அனுப்பி வைக்கப்பட்டவர்களே ரசூல் மார்களாவர். முகம்மது நபியவர்களை முகம்மது ரசூலுல்லாஹ் என்றே அழைப்பர். இம்மண்ணிற்கு '313' ரசூல்மார்கள் அனுப்பப் பட்டுள்ளனர். நபிப்பட்டத்திற்கு அடுத்த உயர்ந்த நிலையாகும்.

# மனைவியிடம் செல்லல்

29. பாதம் தனைத் தொழுது அவர் பாங்காயெழுந்திருந்து அந்த
நீதர் அப்துல் காசின் தன்னுடை நேரிழை வீட்டில் சென்ருர்.

பாதம் தனைத் தொழுது அவர் பாங்காய் எழுந்திருந்து அந்த
நீதர் அப்துல் காசிம் தன்னுடைய நேரிழை வீட்டில் சென்ருர்.

(பொ.ரை)

தன்னுடைய தாயின் பாதங்களைத் தொழுது பணிவுடன் எழுந்திருந்து நீதியறிந்த அப்துல் காசீம் தன் அன்பு மனைவியின் வீட்டிற்குச் சென்ருர்.

*(சி.ரை)*

நேரிழை — அப்துல் காசிம் மனைவி

30. கன்னி யெழுந்திருந்து சுத்தப் பன்னீரால் கால்கழுவி
வர்ணக்
கூந்தல் அவிழ்த்துத் துடைத்து வாழ்த்தி அருகிருந்தார்.

கன்னி எழுந்திருந்து சுத்தப் பன்னீரால் கால்கழுவி—வர்ணக்
கூந்தல் அவிழ்த்துத் துடைத்து வாழ்த்தி அருகிருந்தார்

(பொ.ரை)

அப்துல் காசிம் வீட்டிற்கு வந்தவுடன் மனைவி பணிவுடன் எழுந்திருந்து தூய பன்னீரால் காலைக் கழுவி, அழகு நிறைந்த கூந்தலை அவிழ்த்து விட்டு, இருக்கும் இடத்தைத் தூய்மையாகத் துடைத்து, கணவரைப் போற்றி அருகினில் இருந்தார்.

# மனைவியிடம் அனுமதி பெறுதல்

31. பெண்களுக்கரசியரே உசனுர் பெற்ற இளங்குயிலே
செங்கதிர் வாளெடுத்துப் பாளையஞ் செல்ல விடை கொடுப்பீர்.

பெண்களுக்கு அரசியரே உசனுர் பெற்ற இளங்குயிலே
செங்கதிர் வாள் எடுத்துப் பாளையஞ் செல்ல விடை கொடுப்பீர்.

(பொ.ரை)

மண்ணுலகப் பெண்களின் அரசியே! உசனார் பெற்றெடுத்த இளமையான குயிலே! சிவந்த கிரணங்களை வீசும் வாளினை ஏந்திப் போர்க்களம் செல்ல விடை தாருங்கள்.

32. இராசர் முடிசூடும் உசனுர் நாயகம் ஈன்ற கண்ணே அந்தத்
தோசியே சீதை வெல்ல விடைத் தாரும் இளமயிலே

இராசர் முடிசூடும் உசனுர் நாயகம் ஈன்ற கண்ணே — அந்தத்
தோஷி எசீதை வெல்ல விடைதாரும் இளமயிலே.

(பொ.ரை)

மன்னருக்குள்ள முடியைச் சூடியுள்ள உசனார் பெற்றெடுத்த கண்ணே! பகைவன் எசீதை வென்று வாகைசூட விடைதந்து அனுப்புங்கள்.

(சி.ரை)

தோஷி — பகைவன்.

## மனைவி மயங்கிக் கீழே விழுதல்

33. சொன்ன மொழி கேட்டு மயங்கித் துடித்துப் பதை பதைத்துக்
கண்ணீர் மேல் சொரிய உடலெங்கும் காயம்பட விழுந்தாள்.

சொன்ன மொழி கேட்டு மயங்கித் துடித்துப் பதை பதைத்துக்
கண்ணீர் மேல் சொரிய உடல் எங்கும் காயம்பட விழுந்தாள்.

(பொ.ரை)

அஃதால் காசிம் கூறிய செய்திகளைக் கேட்டுத் துடித்துப் போய், மயங்கிப் பதைபதைத்துக் கண்ணீர் பெருக நிலத்தில் உடல் முழுவதும் காயம் ஏற்படும் அளவிற்கு விழுந்தாள்.

## மனைவி கூறுதல்

34. எந்தன் உயிர்க்குயிரே அசனூர் ஈன்ற தவப்பேறே — என்னை
வந்து மணமுடித்தீர் என் மையல் தெளியவில்லை.

எந்தன் உயிர்க்கு உயிரே அசனூர் ஈன்ற தவப் பேறே — என்னை
வந்து மணமுடித்தீர் என்மையல் தெளியவில்லை.

(பொ.ரை)

என்னுடைய உயிர்க்கு உயிரானவரே! அசனூர் ஈன்றெடுத்த தவமே என்னை இன்று தான் மன திருமணம் செய்து கொண்டீர், என் ஆவல் தெளியவில்லையே.

## காசிம் பொறுமையாயிருத்தல்

35. மங்கை உரை கேட்டுக் காசிம் தனது மதி மயங்கி
அங்கம் மெலிந்துருகிச் சகித்து 'சுக்கூர்' செய்தார்.

மங்கை உரைகேட்டுக் காசிம் தனது மதிமயங்கி
அங்கம் மெலிந்து உருகிச் சகித்து 'சுக்கூர்' செய்தார்.

(பொ.ரை)

தனது அருமை மனைவியின் உரையினைக் கேட்ட அப்துல் காசிம் அறிவு மயங்கி, உடல் மெலிந்து உருகினார். இருப்பினும் அவ்வுரையைப் பொறுத்து மனதில் அமைதி அடைந்தார். அன்பு மிக்க மனைவியை அடைந்தமைக்காக இறைவனுக்கு நன்றி செலுத்தினார்.

(சி.ரை)

சுக்குர் — ஷுக்ரு - இதன் பொருள் நன்றி செலுத்துதல் என்பதாகும். இது மூவகைப்படும். மனதால், நாவால், உடலால் செலுத்துவதாகும். இது இறைவனுக்கே உரியது. 'மனிதன் இறைவனுக்கே செலுத்தும் நன்றியைத் தான் ஷுக்கு செய்தல் என்று குறிப்பர்.

## மனைவியிடம் அனுமதி வேண்டல்

36. எங்கள் குடிக்கரசியே உசனார் ஈன்ற குலக்கொடியே
தங்கள் சலிப்படக்கி வெல்ல விடை தந்த னுப்பவேண்டும்.

எங்கள் குடிக்கு அரசியே 'உசனார் ஈன்ற குலக்கொடியே'
தங்கள் சலிப்பு அடக்கி வெல்ல விடை தந்து அனுப்ப வேண்டும்.

(பொ.ரை)

எங்கள் இல்லத்தின் அரசியே — உசனார் பெற்றெடுத்த குலக்கொடியே தங்களுடைய மனதில் உண்டாகும் வருத்தத்தை நீக்கிப் பகைவரை வென்று வாகைசூட விடை தந்து அனுப்பவும்.

## மனைவி கண்ணீர் விடுதல்

37. கன்னி யெழுந்திருந்து காசிம் கரத்தில் சிரசை வைத்து
மின்னும் விழி சிவந்துருகி மிகவும் கரைந்தழுதார்.

கன்னி எழுந்திருந்து காசிம் கரத்தில் சிரசை வைத்து
மின்னும் விழி சிவந்து உருகி மிகவும் கரைந்து அழுதார்.

(பொ.ரை)

திருமணம் ஆனபோதும் கன்னியாகவே இருந்து வரும் அப்துல் காசிமின் மனைவியார் தன் கணவரின் கரங்களில் தன் தலையினை வைத்தார். தன் மின்னலை ஒத்த விழிகள் சிவந்து போகும் வண்ணம் உள்ளம் உருக மிகவும் வாய்விட்டு அழுது புலம்பினார்.

(சி.ரை)

கன்னி — திருமண மானலும் கன்னித்தன்மை கழியாத நிலையில் உள்ளவராதலால் 'கன்னி' என்று குறிக்கப்பட்டார்.

## மனைவிக்குக் காசிம் ஆறுதல் கூறுதல்

38. பார்த் தப்துல்காசீம் அந்தப் பாவை தலை உயர்த்தி வாழ்த்திக்
கண்ணீர் துடைத்து முகத்தைப் பார்த்தொரு செய்தி சொல்வார்.

பார்த்து அப்துல் காசீம் அந்தப் பாவை தலை உயர்த்தி வாழ்த்திக்
கண்ணீர் துடைத்து முகத்தைப் பார்த்து ஒரு செய்தி சொல்வார்.

(பொ. ரை)

தன் மனைவி தன் கரங்களில் முகம் புதைத்து அழுவதைக் கண்ட அப்துல் காசீம் மனைவியின் முகத்தைத் தன் கரங்களால் மேலே உயர்த்தினர். வழிந்து வரும் கண்ணீரைத் தம் திருக் கரங்களால் நீக்கினர். தன் மனைவிக்கு நல் வாழ்த்துக்களைத் தெரிவித்து ஒரு செய்தியினைக் கூறலுற்ருர்.

## மஹ்சரில் சந்திப்போம் எனல்

39. ஆதியெழுத்தின்படி அறுவளாகிலுந்தப் பாது
சோதி மருசரிலே ஆகிரத்து ஜோடிக்குதவி செய்வான்.

ஆதி எழுத்தின் படி அணு அளவு ஆகிலும் தப்பாது
சோதி மருசரிலே- ஆகிரத்து ஜோடிக்கு உதவி செய்வான்.

(பொ.ரை)

இறைவனின் விதிப்படியே அனைத்தும் நடக்கும். அவனின் விருப்பத்திற்கு மாருக அணு அளவிற்குக் கூட மாறுதல் இராது. இவ்வுலகில் நாம் இணைந்தது போல, மறுமை நாளில் உயிர்ப்பித்து எழும் போது மீண்டும் இணைந்திருக்க இறைவன் அருள்புரிவான்.

மருசர் — 'மஹ்ஷர்' - இதன் பொருள் 'கூட்டம்' என்பதாகும். உலக முடிவு நாளில் படைப்பினங்கள் அனைத்தும் அழிக்கப்படும். மீண்டும் இறைவன் மனிதர்களை வெட்ட வெளியில் அனைவரையும் உயிர்ப்பிப்பான். இந்த வெட்ட வெளியே 'மஹ்ஷர்' ஆகும்.

ஆகிரம் — மறுமை வாழ்வு. அரபு மொழியில் 'ஆகிர்' என்ருல் இறுதி என்று பொருள்படும்.

# மஹ்ஷரிலே தங்களின் அடையாளம் கூறுங்கள்

40. இந்த மொழி கேட்டுக் காசிமை யெழும்பி முகம் பார்த்து
அந்த மகசரிலே உமக்கு அடையாளஞ் சொல்லு மென்றார்.

இந்த மொழி கேட்டுக் காசிமை எழும்பி முகம் பார்த்து
அந்த மகசரிலே உமக்கு அடையாளஞ் சொல்லுமென்றார்.

(பொ.ரை)

தன்னருமை மக்கணவர் கூறிய மொழி கேட்டதும் தலை நிமிர்ந்து தன் கணவர் முகம் பார்த்து வினவலுற்றார். அந்த வெட்ட வெளியில் தங்களை நான் காண்பதற்குரிய அடையாளங்களைச் சொல்லுங்கள் என்றார்.

(சி.ரை)

மகசரில் — அடையாளம் — மஹ்ஷர் வெட்ட வெளியில் ஒருவரை ஒருவர் அடையாளங் காணுதல் இயலாது. காரணம் அனைவரும் நிர்வாணமாக இருப்பர். முகங்கள் விண்ணை நோக்கி இருக்கும். இறையருள் கிட்டுபவர்களே ஒருவரை ஒருவர் அடையாளங் காண இயலும்.

# என் கைச்சட்டை கிழிந்திருக்கும்

41. செங்கன் சருங்குயிலே உசனுர் செல்வியே நீர் கேளீர்
என் கையின் சட்டையிலே கிழிந்தி ருக்கு மடையாளம்

செங்கண் கருங்குயிலே உசனுர் செல்வியே நீர்கேளீர்
என் கையின் சட்டையிலே கிழிந்து இருக்கும் அடையாளம்

(பொ.ரை)

சிவந்த கண்களை உடைய அழகிய குயிலே! உசனுரின் அன்பு மகளே! நான் கூறுவதைக் கேளுங்கள் - வெட்ட வெளியிலே அலைந்து வரும் போது என் கையில் உள்ள சட்டை கிழிந்து இருக்கும் இதுவே என் அடையாளமாகும்.

(சி.ரை)

அடையாளம் — போரிலே மாண்டவர்கள் எந்த உடையோடு எப்படி இறக்கிருர்களோ அதே ஆடையோடு மறுமை நாளில் மகசரில் தோற்றம் தருவர் என்பது இஸ்லாமிய நம்பிக்கையாகும். அதனைத் தன் மனைவிக்கு அடையாளமாகக் கூறுகிருர்.

# மனைவி 'விதியோ' என்றல்

42. காசிம் மொழி கேட்ட அரசியார் கத்தனைப் போற்றிசெய்து
ஹாசிம் கிளையிருக்கும் நமக்கு ஆண்டவன் கற்பனையோ,

காசிம் மொழி கேட்ட அரசியார் கத்தனைப் போற்றி செய்து
ஹாசிம் கிளையிருக்கும் நமக்கு ஆண்டவன் கற்பனையோ,

(பொ.ரை)

தன்னருமைக்கணவர் காசிம் கூறியதைக் கேட்டதும் இறைவனை வாழ்த்தி வணங்கினர். ஹாசிம் கிளையில் வருவோர் அனைவர்க்கும் இறைவன் விதித்த விதி இதுதானோ என்று எண்ணினள்.

## மனைவி விடை தந்து அனுப்புதல்

43. மக்கா நகர்க்கரசே நீங்கள் விசயஞ் செய்ய
ஹக்கனுதவியினால் அவன் பக்கலில் போய்வரும்

மக்கா நகர்க்கு அரசே நீங்கள் விசயஞ் செய்ய
ஹக்கன் உதவியினால் அவன் பக்கலில் போய்வாரும்

(பொ.ரை)

மக்கா நகர்க்கு அரசரே ! பகைவனைப் போர்க் களத்தில் வென்று வாகைசூடி வர இறைவன் உதவி புரிவான். அவனுடைய காவலில் வீரமுடன் சென்று வாரும்.

(சி.ரை)

ஹக்கன் — இறைவன்
பக்கலில் — காவலில்

44. வானவர் கோனான அரசர் அந்த வள்ளல் திருப்பேரர்
யீனனெசிதை வெல்ல என் றப்பனே காத்தருள்வாய்.

வானவர் கோன் ஆன அரசர் அந்த வள்ளல் திருப்பேரர்
ஈனன் எசிதை வெல்ல என் றப்பனே காத்து அருள்வாய்.

(பொ.ரை)

மக்களினத்திற்கும் வானவர்க்கும் தலைவரான முகம்மது நபியவர்களின் பேரரான அப்துல் காசீம் கீழ்த்தரமான அறிவைக் கொண்ட எசீதை வென்று களத்தில் சிறக்க இறைவனே அருள்புரிவாயாக.

# அப்துல் காசிம் இறைஞ்சியது

45. பொன்னின் கணுக்கரும்பை உசனர் புண்ணியரீன்ற
கண்ணை

கன்னிக் குலக்கொடியை வந்து காண உதவி செய்வாய்

பொன்னின் கணுக்கரும்பை உசனர் புண்ணியர் ஈன்ற கண்ணை
கன்னிக் குலக் கொடியை வந்து காண உதவி செய்வாய்,

(பொ. ரை)

இறைவனே — பொன்னால் ஆன கணுக்கள் நிறைந்த கரும்பை புண்ணிய வடிவினரான உசனர் ஈன்ற கண்மணியை, கன்னித் தன்மை மாறாத குலக்கொடியை, நான் போருக்குச் சென்று வெற்றியுடன் மீண்டு வந்து என் கண்களால் காண்பதற்கு எனக்கு உதவிபுரிவாயாக.

# அப்துல் காசிமின் புறப்பாடு

46. மின்னிடைப் பொற்கொடியாள் விடை வாங்கியெழுந்திருந்து
- அந்த

மன்னர் அப்துல் காசிம் வணங்கிப் பரியேறிச் சென்றார்.

மின் இடைப் பொற்கொடியாள் விடை வாங்கி எழுந்து இருந்து -
அந்த

மன்னர் அப்துல் காசிம் வணங்கிப் பரியேறிச் சென்றார்.

(பொ.ரை)

மின்னலைப் போன்ற இடையினை உடையவளும், பொன்னாலான கொடியைப் போன்றவளுமான அன்பு மனைவியிடம் போர்க்களம் செல்வதற்கு விடையினைப் பெற்றுவிட்டு, இறைவனை வணங்கிக் குதிரைமீது அமர்ந்து புறப்பட்டார்.

# அப்துல் காசிமின் கம்பீரம்

47. சிங்கத்துக் குட்டியது வெகுண்டு சினந்தெழுந்ததுபோல்
கண்கள் பொறிபறக்க யெழுந்து கையில் வாளுருவிச் சென்ருர்.

சிங்கத்துக் குட்டியது வெகுண்டு சினந்து எழுந்தது போல்
கண்கள் பொறி பறக்க எழுந்து கையில் வாள் உருவிச் சென்ருர்.

(பொ.ரை)

வலிமை மிக்க சிங்கத்தின் குட்டி சினம் மேற்கொண்டு விரைந்து எழுந்து போவது போல, அபூல்காசிம் தம் கண்களில் நெருப்புப் பொறி பறக்க, கையில் உருவிய வாளை ஏந்தியவராய்ச் சென்ருர்.

# உமறுவின் கூற்று

48. சீற்றமதைக் கண்ட வுடனுமறு கலங்கி மதிமயங்கி
ஹாசிம் கிளையளிக்கும் யிவன் ஆண்பிள்ளைச் சிங்கமென்ருன்.

*சீற்றம் அதைக் கண்ட உடன் உமறு கலங்கி மதி மயங்கி*
ஹாசிம் கிளை அளிக்கும் இவன் ஆண் பிள்ளைச் சிங்கம் என்ருன்.

(பொ.ரை)

அப்துல் காசிம் சினத்துடன் வருகின்ற காட்சிதனைக்கண்ட உமறு உள்ளம் கலக்கம் உற்றவனுய், அறிவு மயங்கியவனுய், ஹாசிம் குலத்தில் தோன்றிய இவன் ஒரு ஆண்மகன் சிங்கம் என்ருன்.

(சி.ரை)

உமறு — எசீதின் படைத்தலைவன்

# அபுல்காசிம் பகைப்படைக்குள் புகுந்தமை

49. சிங்கத்துக் குட்டியது ஆனைத்திரளில் நுழைந்தது போல்
— அந்தப்
பங்கனெ சீதுடைய குதிரைப் பாளையம் போய்ப் புகுந்தார்.

சிங்கத்துக் குட்டி அது ஆனைத் திரளில் நுழைந்தது போல் —
அந்தப்
பங்கன் எசீதுடைய குதிரைப் பாளையம் போய்ப் புகுந்தார்.

அப்துல் காசிம் உருவிய வாளுடன் யானைக் கூட்டங்கள் நிறைந்தது போல் இருந்த வஞ்சகன் எசீதுடைய குதிரைப் படைகளுக்குள்ளே ஒரு சிங்கக் குட்டி நுழைவதைப் போன்று புகுந்தார்.

## உமறுவின் சீற்றம்

50. பார்த்து வுடல் கருகி உமறு பல்லை நெறு நெறுத்து
நேற்றைப் பிள்ளையவன் படை முன் நெருங்கியே வந்து நின்றான்.

பார்த்து உடல் கருகி உமறு பல்லை நெறு நெறுத்து
நேற்றைப் பிள்ளை இவன் படைமுன் நெருங்கியே வந்து நின்றான்.

(பொ.ரை)

அபுல்காசிமின் வரவினைப் பார்த்த உமறு, சினத்தினால் உடல் பற்றி எரியப் பற்களைக் கடித்து நேற்றுப் பிறந்த சிறுவன் என்னுடைய படைக்குள்ளே வந்து விட்டானே என்று கூறியவனாய்த் தன் படைக் கருகில் வந்து நின்றான்.

51. கோபம் துளிதுளிர்த் தசறக்கைக் கோபமாய் வார்த்தை சொல்லித்
தாவிப் படைபொருதி காசிம் தலையை அறுப்பமென்றான்.

கோபம் துளிதுளிர்த்து அசறக்கைக் கோபமாய் வார்த்தை சொல்லித்
தாவிப் படைபொருதிக் காசிம் தலையை அறுப்பம் என்றான்.

(பொ.ரை)

உமறுவுக்குச் சினம் பொங்கி எழத் தனக்கு அடுத்த நிலையில்உள்ள படைத்தலைவன் அசறக்கை அழைத்துச் சினமுடன் அப்துல் காசிமைத் தாவிப் பிடித்து அவன் தலையை அறுத்து விடுவோம் என்று கூறினான்.

(சி.ரை)

அசறக்கு — 'அஸ்றக்' — இவன் ஒரு படைத்தலைவன்.

# அஸ்றக்குக் கூற்று

52. சொன்ன மொழி கேட்ட அசறக்குத் துப்பி யிதழ்கடித்தந்த
சின்னஞ்சிறு பிள்ளை மேல் போர் நாம் செய்வது ஞாயமல்ல.

சொன்ன மொழி கேட்டு அசறக்குத் துப்பி இதழ் கடித்து அந்தச்
சின்னஞ் சிறு பிள்ளை மேல் போர் நாம் செய்வது ஞாயமல்ல.

(பொ.ரை)

உமறு கூறியதைக் கேட்ட அஸ்றக்கு, தன்னுடைய இதழ்களைக் கடித்து, அலட்சியமாய்த் துப்பியவனாய் சின்னஞ் சிறுவனாகக் காட்சியளிக்கும் அபுல்காசிமிடம் நம்மைப் போன்ற வீரர்கள் போரிடுவது வீரமும் அல்ல. நீதியுமல்ல என்று கூறினான்.

53. எந்தனுடன் பிள்ளைகள் நாலுபேர் இருக்கிற பேர்களிலே மூந்தின பிள்ளை போய்க் காசிம் முடியை அறுக்குமென்றான்.

எந்தன் உடன் பிள்ளைகள் நாலுபேர் இருக்கிற பேர்களிலே
முந்தின பிள்ளை போய்க் காசிம் முடியை அறுக்கும் என்றான்,

(பொ.ரை)

இந்தப் போர்க்களத்தில் என்னுடன் என்னுடைய நான்கு மகன்கள் வந்துள்ளனர். சின்னஞ்சிறிய இவனிடம் என் மூத்த மகன் போர் செய்து தலையை அறுத்து வருவான் என்று கூறினான்.

## அஸ்றக்கு மூத்த மகன் செல்லுதல்

54. மூத்த மகன் எழும்பிக்குதித்து உத்தரவு வாங்கிக் கொண்டு-
அவன்
தானுந் தன் குதிரையின் மேலேறிக் காசிமிடத்தில்
முருகிச்சென்றான்.

மூத்த மகன் எழும்பிக் குதித்து உத்தரவு வாங்கிக் கொண்டு -
அவன்
தானுந் தன் குதிரையில் மேல் ஏறிக் காசிம் இடத்தில்
முருகிச்சென்றான்.

(பொ.ரை)

அஸ்றக்குடைய மூத்த மகன் தன் தந்தை கூறியதைக் கேட்டவுடன், மகிழ்வுடன் குதித்து எழும்பி, தந்தையிடம் வாழ்த்துக்களையும், ஆணையையும் பெற்றுக் கொண்டு, தன்னுடைய குதிரையில் அமர்ந்து அப்துல் காசிமிடம் மிக விரைவாகச் சென்றடைந்தான்.

# அப்துல் காசிம் ‘உமறை வரச் சொல்லுதல்’

55. காசிம் அகங்கரித்துப் புலிமுன் கிடாய் வந்தெதிர்க்குமோ தான்
தோசி உமறையிங்கே நீயே போய்ச் சுருக்காய் வரச்சொல்லடா.

காசிம் அகம் கரித்துப் புலிமுன் கிடாய் வந்து எதிர்க்குமோ தான்
தோசி உமறை இங்கே நீயே போய்ச் சுருக்காய் வரச் சொல்லடா

(பொ.ரை)

அப்துல்காசிம் உள்ளம் சீற்றங் கொண்டு கொல்லும் புலி முன்னே ஆட்டுக்கிடாய் எதிர்ப்பது போல், நீ வந்துள்ளாய். நீ உடனே சென்று என்னுடன் பாவி உமறைப் போருக்கு உடனே வரச் சொல்லடா என்று கூறினார்

(சி,ரை)

சுருக்காய் — விரைவு குறித்த சொல், நாட்டுப்புற வழக்காறு.

# அஸ்றக்கு மகன்கள் நால்வர் மடிதல்

56. சொன்ன மொழி கேட்டுப் பயல் சுறுக்காக வாளோங்கி வெட்ட அந்த
மன்னர் அப்துல்காசின் அதைத் தட்டி வாளாலே வெட்டி விட்டார்

சொன்ன மொழி கேட்டுப் பயல் சுறுக்காக வாள் ஓங்கி வெட்ட அந்த
மன்னர் அப்துல் காசிம் அதைத் தட்டி வாளாலே வெட்டி விட்டார்

(பொ.ரை)

அப்துல் காசிம் கூறியதைக் கேட்டுக் கொண்டிருந்த அஸ்றக்கின் மூத்த மகன் மிக விரைந்து அப்துல்காசிமை வெட்டுவதற்கு வாள் ஓங்கியதும், அப்துல்காசிம் தங்களது வாளினால் அதனைத்தடுத்து அவனை வெட்டிச் சாய்த்து விட்டார்.

57. கண்ணும் கிறுகிறுத்துச் சுழன்று தரையில் விழுந்தவுடன்
பின்னரொடு மகனும் அதட்டியே போருக்கு முன்னே வந்தான்

கண்ணும் கிறுகிறுத்துச் சுழன்று தரையில் விழுந்தவுடன்
பின்னர் ஒரு மகனும் அதட்டியே போருக்கு முன்னே வந்தான்.

(பொ.ரை)

அப்துல்காசீம் வாளால் வெட்டப்பட்டதும் கண்களிரண்டிலும் இருள்படர்ந்து தலை சுழன்று கீழே விழுந்தவுடன், அஸ்றக்கின் இரண்டாம் மகன், அபுல் காசிமை அதட்டிக் கொண்டே போரிட முன்னே வந்தான்.

58. வந்து அகங்கரித் தவன் வாளாலே ஓங்கிடவே
சிந்தை மகிழ்ந்த தவன் சிரசையும் வெட்டி விட்டார்.

வந்து அகம் கரித்து அவன் வாளால் ஓங்கிடவே
உள்ளம் மகிழ்ந்து அவன் சிரசையும் வெட்டி விட்டார்.

(பொ. ரை)

வந்து சினந்து நின்று அபுல்காசிமை வெட்டுவதற்கு வாளினை ஓங்கிடவும், உள்ளம் மகிழ்ந்து அவனுடைய தலையையும் வெட்டி வீழ்த்தி விட்டார்.

# அஸ்றக்கு உமறுவிடம் செல்லுதல்

59. இந்தப் படியே வந்து மக்கள் நால்வர் இறந்த பின்பு
தந்தை அசர்க்கவன் உமறு சபையில் முடுகிச் சென்முன்.

இந்தப் படியே வந்து மக்கள் நால்வர் இறந்த பின்பு
தந்தை அசருக்கவன் உமறு சபையில் முடுகிச் சென்முன்.

(பொ.ரை)

ஒருவர்பின் ஒருவராக இந்த விதமாக நான்கு பிள்ளைகளும் அபுல் காசிமினுல் வெட்டப்பட்டு இறந்தவுடன் அஸ்றக்கு மிக விரைந்து உமறுவின் முன்னே சென்முன்.

# உமறுவின் ஏளனமும் சினமும்

60. பார்த்து உமறு மன்னன் அசர்க்கைப் பல்லைக் கடித் திறுக்கி
நேற்றைப் பிள்ளையவன் அவனுக்குத் தோத்தாயோ என்று
சொன்னுன்.

பார்த்து உமறு மன்னன் அசர்க்கை பல்லைக்கடித் திறுக்கி
நேற்றைப் பிள்ளை இவன் அவனுக்குத் தோற்முயோ என்று
சொன்னுன்.

(பொ.ரை)

அஸ்றக்கு வந்ததும், உமறு அவனைப்பார்த்து, பற்களைக் கடித்துக் கொண்டு 'நேற்று பிறந்த சின்னஞ் சிறுவன்' என்று கூறினுயே அவனிடம் போய்த்தோற்றுப் போனுயா என்று ஏளனமும் சினமும் கொண்டு வினவினுன்.

## அஸ்றக்கு அபுல்காஸிமிடம் வருதல்

61. சொன்ன மொழி கேட்டு அசறக்குச் சுறுக்கா யெழுந்திருந்து
தன்னின் பரியேறிக் காசிம் தன்னில் முடுகிவந்தான்.

சொன்ன மொழி கேட்டு அசறக்குச் சுறுக்காய் எழுந்து இருந்து
தன்னின் பரி ஏறிக் காசிம் தன்னில் முடுகிவந்தான்.

(பொ.ரை)

உமறுவின் ஏளனம் நிறைந்த சொல்லைக் கேட்டவுடன், விரைந்து எழுந்தவனாய்த் தன் குதிரை மீது அமர்ந்து அப்துல் காசிம் இருக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தான்.

## இருவருக்கும் போர் நிகழ்தல்

62. வாளால் சமர் பொருதி யிரு பேரும் மல்லாடும் வேளையிலே
தாழக் குனிந்திவர் குதிரையைத் தாக்கியே வெட்டிவிட்டான்.

வாளால் சமர் பொருதி இருபேரும் மல்லாடும் வேளையிலே
தாழக் குனிந்து இவர் குதிரையைத் தாக்கியே வெட்டி விட்டான்.

(பொ.ரை)

இருவரும் ஒருவருக்கொருவர் வாளினால் போரிட்டுக் கொண்டிருக்கும் வேளையிலே, அஸ்றக்குக் கீழே குனிந்து குதிரையின் கால்களை வெட்டி விட்டான்.

(சி.ரை)

மல்லாடும் — போரிடும்.

63. நின்ற குதிரை விழக் காசிம் நிற்கும் நிலைபார்த்துக்
கண்டவுடன் உசனூர் தன்னுடைய கச்சை அனுப்பி விட்டார்.

நின்ற குதிரை விழக் காசிம் நிற்கும் நிலை பார்த்துக்
கண்டவுடன் உசனூர் தன்னுடைய கச்சை அனுப்பி விட்டார்.

(பொ.ரை)

குதிரையின் கால்கள் வெட்டப்பட்டு வீழ்ந்து விட்ட நிலையில் அபுல் காசிம் கீழே நின்று கொண்டிருப்பதைக் கண்ணுற்ற உசனூர் தமக்குரிய குதிரையை உடன் அபுல் காசிமிடம் அனுப்பி வைத்தார்.

(சி.ரை)

கச்சு — குதிரை

64. கச்சுக் குதிரை வரக் காசின் கல்லாணை மேலேறி
மெச் சென்றலங்கரித்து அப்போ மின்னல் போல் படைபொருதி

கச்சுக் குதிரைவரக் காசிம் கல்லாணை மேலேறி.
மெச்சு என்று அலங்கரித்து அப்போ மின்னல்போல் படைபொருதி

(பொ.ரை)

உசனூர் அனுப்பிய குதிரை தன்னிடம் வந்தவுடன் வலிமை மிக்க அதன் மேலே ஏறி அமர்ந்து கம்பீரமாக உடனேயே மின்னலைப் போல் போரிட்டார்.

## அபுல்காசிம் அஸ்றக்கிடம் கூறியது

65. பெட்டை அசரக்கவன் அகத்திப் பொருதிடும் வேளையிலே—
அந்தக்
கட்டான கற்காசின் அவனைக் கண்டொரு செய்தி சொல்வார்.

பெட்டை அசரக்கு அவன் அகத்திப் பொருதிடும் வேளையிலே-
அந்தக்
கட்டான கற்காசிம் அவனைக்கண்டு ஒரு செய்தி சொல்வார்.

(பொ.ரை)

பெண்பிள்ளையைப்போல் போரிட்ட அஸ்ரக்கு அப்துல்காசிமிடம் போரிடும் வேளையிலே அழகுமிக்க காளையான காசீம் அஸ்றக்கிடம் ஒரு செய்தியினைக் கூறுவார்.

66. வண்டனெ சீதுடை சேனையில் மன்னரில் நீ பெரியோன் உன்னுடைக் குதிரையோட சங்குவாரை இறுக்கவில்லை.

வண்டன் எசீது உடைய சேனையில் மன்னரில் நீ பெரியோன் உன்னுடைய குதிரையுடைய சங்கு வாரை இறுக்கவில்லை.

(பொ.ரை)

வஞ்சகன் எசீதுடைய படைகளிலேயே தலைமையேற்கும் மன்னரில் நீ மிகப்பெரியோன். இருப்பினும் போரிட வந்திருக்கும் நீ உன்னுடைய குதிரையுடைய கழுத்து வாரை இறுக்கிக் கட்ட வில்லையே என்று கூறினர்.

(சி.ரை)

சங்குவார் — குதிரையின் முன்னங்காலுக்கும் வயிற்றுக்கும் இடையில் போடப்படும் வார். இந்த வாரில் தான் வீரர்கள் கால் வரைக்கும் 'சீனி' இருக்கும். இது அறுந்து விட்டால் வீரன் குதிரை மீது அமர்ந்திருக்க முடியாது.

## அஸ்றக்கின் மரணம்

67. சொன்ன மொழி கேட்டு அசரக்கு வாரை குனிந்திறுக்க உன்னிஅ புதுலு காசின் அவனையும் வெட்டிப் பொருதி விட்டார்.

சொன்ன மொழி கேட்டு அசரக்கு வாரைக் குனிந்து இறுக்க உன்னிய புதுல் காசிம் அவனையும் வெட்டிப் பொருதி விட்டார்.

(பொ.ரை)

இதனைக் கேட்ட அஸ்றக்குத் தன் குதிரையின் சங்குவாரை இறுக்க முற்பட்ட போது, அப்துல்காசிம் தன் வாளால் அவனை வெட்டிச் சாய்த்து விட்டார்.

## அப்துல் காசிம் கருவறுத்தல்

68. உச்ச மலை போலேப் பிள்ளைகள் தகப்பனும் யேலே கிடக்க
— அந்தக்
கச்சுக் குதிரை விட்டுக் காசின் பாய்ந்தோடி மேல் மிதித்தார்

உச்சமலை போலே பிள்ளைகள் தகப்பனும் மேலே கிடக்க —அந்தக்
கச்சுக் குதிரை விட்டுக் காசிம் பாய்ந்தோடி மேல் மிதிந்தார்.

(பொ.ரை)

அஸ்றக்கும் அவன் பிள்ளைகள் நால்வரும் மண்ணில் மலை போலே சாய்ந்து கிடந்தார்கள். அபுல்காசிம் தன் குதிரை மீதிருந்து கீழே இறங்கி அகங்காரம் பிடித்த அவர்கள் மீது பாய்ந்தோடி மிதித்தார்.

69. மாவில் பரியேறி அதில் வந்த மன்னரைச் சூறையிட்டுத்
தாவிப் படைபொருதி எசீது தளத்தைக் கருவறுத்தார்.

மாவில் பரி ஏறி அதில் வந்த மன்னரைச் சூறையிட்டுத்
தாவிப் படைபொருதி எசீது தளத்தைக் கருவறுத்தார்.

(பொ.ரை)

விரைந்து செல்லும் குதிரையின் மீது போரிட வந்த மன்னர்களை எல்லாம் அழித்து, போர்க் களத்திலேயே எசீதின் வீரர்களை ஒருவரின்றி ஒழித்துப் பகை வென்றார்.

70. வென்று கருவறுத் தந்த வெல்வாள் உமரெத்தஞ் சிந்தச்
சென்று படை பொருத வானோர் செம்மலர் சொரிந்தார்.

வென்று கருவு அறுத்து அந்த வெல்வாள் உமறு ரெத்தம் சிந்தச்
சென்று படைபொருத வானோர் செம்மலர் சொரிந்தார்.

(பொ.ரை)

அபூல் காசிம் போர்க்களத்திற்குச் சென்று பகைவர்களின் வலிமையை அழித்தொழித்ததால், வெற்றி பொருந்திய வாளினைக் கொண்ட உமறுவின் கண்கள் குருதி சிந்தி வானோர்கள் அபுல் காசிமுக்கு விண்ணிலிருந்து மலர் சொரிந்து வாழ்த்தினர்.

## உசனூர் வாழ்த்து

71. காசிம் வரவு கண்டு உசனூர் கண்ணோடு கண்வைத்து,
வாச மகனாரைப் யோற்றி யனுப்பி விட்டார்.

காசீம் வரவு கண்டு உசனார் கண்ணோடு கண் வைத்து,
வாச மகனாரைப் போற்றி அனுப்பி விட்டார்.

(பொ.ரை)

அன்பு மகன் அபுல்காசிம் வெற்றியுடன் வருவதைக் கண்ட உசனார் தம் கண்ணோடு காசிமின் கண்களை வைத்து வாழ்த்தி அனுப்பி வைத்தார்.

## தாயர் வாழ்த்து

72. மைந்தனெழுந்திருந்து தங்கள் தாயரளவில் சென்று
வந்து கதம் பணிய மாதா வாழ்த்தி எடுத்தணைத்தார்.

மைந்தன் எழுந்து இருந்து தங்கள் தாயர் அளவில் சென்று
வந்து கதம் பணிய மாதா வாழ்த்தி எடுத்து அணைத்தார்.

(பொ.ரை)

தந்தையிடம் வாழ்த்துக்களைப் பெற்ற அளவில் தங்கள் தாயாரிடம் ஓடி வந்தார் அன்னையின் பாதங்களில் பணிய, அன்னையும் மகனை வாழ்த்தி அரவணைத்துக் கொண்டார்.

(சி.ரை)

கதம் — பாதம். இது பாரசீகச்சொல்.

78. எந்தனுடய கனியே அசனுர் ஈன்ற வரிப் புலியே நீர்
வந்ததே போதுமென்று அம்மா வாழ்த்தி எடுத்தணைத்தார்.

எந்தன் உடைய கனியே அசனுர் ஈன்ற வரிப்புலியே நீர்
வந்ததே போதும் என்று அம்மா வாழ்த்தி எடுத்து அணைத்தார்

(பொ.ரை)

என்னுள்ளத்தின் கனியே! அசனூர் பெற்றெடுத்த வீரப்புலியே! போர்க்களத்திலிருந்து வெற்றிபெற்றாய் என்பதைவிட நீ மீண்டு வந்தாயே அதுவே போதும் எனக்கு எனக்கூறி வாழ்த்தினுர்.

## மனைவி ஆரத்தி எடுத்தல்

74. வஞ்சியிள மயிலாள் அசனுர் மன்னர் மருமகளார்
அஞ்சிப் பாதம் பணிந்து முத்தாலே ஆலத்தி யேந்தி நின்றுர்.

வஞ்சி இளம் மயிலாள் அசனுர் மன்னர் மருமகளார்
அஞ்சிப் பாதம் பணிந்து முத்தாலே ஆலத்தி ஏந்தி நின்றுர்.

(பொ.ரை)

அசனுரின் மருமகளான அபுல்காசிமின் மனைவி, தன் கணவரின் பாதங்களைப் பணிந்து, முத்தினுலேயே ஆரத்தித் தட்டினை ஏந்தி நின்றுர்.

(சி.ரை)

ஆலத்தி — 'ஆரத்தி' — பண்டுதொட்டு இருந்து வரும் பழக்கம். வீரர்கள் போர்க்களம் சென்று வெற்றியுடன் திரும்பியதும் மனைவியர் ஆரத்தி எடுப்பர்

## மனைவியிடம் மகிழ்ந்திருத்தல்

75. பொன்னின் கனுக்கரும்பே உசனூர் புண்ணிய ரீன்ற கண்ணே

கன்னிக் குலக் கொடியே உம்மைக் கண்டதே போதுமென்றூர்.

பொன்னின் கனுக்கரும்பே உசனூர் புண்ணியர் ஈன்ற கண்ணே
கன்னிக் குலக்கொடியே உம்மைக் கண்டதே போதும் என்றூர்

(பொ.ரை)

உசனூர் பெற்றெடுத்த கண்மணியே! கன்னிமை உடைய குலக் கொடியே என் கண்களால் மீண்டும் கண்டதே எனக்கு மனமகிழ்வைத் தருகிறது.

## எசிது படை வருதல்

76. வந்து யிரு பெரு மனங்கள் களிகூர்ந்து சென்றிருக்கையிலே படை வந்து சேருதே யென்று சொன்னூர்.

வந்து இரு பெரு மனங்கள் களிகூர்ந்து சென்று இருக்கையிலே
படை வந்து சேருதே என்றுசொன்னூர்.

(பொ.ரை)

அன்பு மனைவியுடன் அபுல்காசிம் மனம் மகிழ்ந்து இருந்திடும் வேளையிலே ஒருவன் ஓடோடி வந்து பகைவர்களின் படை வந்து கொண்டிருக்கிறது என்று சொன்னுன்.

## மனைவியிடம் விடை கேட்டல்

77. சொன்னமொழி கேட்டுக் காசிம் சுருக்கா யெழுந்திருந்து
மன்னருசன் மகளீரெனக்கு மகிழ்ந்து விடை கொடுப்பீர்.

சொன்னமொழி கேட்டுக் காசிம் சுருக்காய் எழுந்து இருந்து
மன்னர் உசன் மகளீர் எனக்கு மகிழ்ந்து விடை கொடுப்பீர்.

(பொ.ரை)

பகைப் படையினர் வருகின்றனர் எனும் செய்தியினைக் கேட்ட வுடன் விரைந்தெழுந்தார் அப்துல்காசிம். அருமை மனைவியிடம் போருக்குச் செல்ல மகிழ்ச்சியுடன் விடை கொடுக்கவும் என்று கூறினர்.

## மனைவியின் கூற்று

78. ஆல மலை கடலும் படைத்தாளும் றகுமானே யென்
தாலி தழைத்திருக்க தக்கோனுதவி செய்வாய்.

ஆலம் மலை கடலும் படைத்து ஆளும் ரகுமானே என்
தாலி தழைத்திருக்க தக்கோன் உதவி செய்வாய்

(பொ.ரை)

இவ்வுலகையும் மலையையும் கடலையும் படைத்து ஆட்சி புரியும் இறைவனே அருள் நிறைந்தவனே! என்னுடைய தாலி என்றும் நிலைத்திருக்க இறைவனே எனக்குத் துணை புரிவாயாக.

(சி.ரை)

ரகுமான் — ரஹ்மான் 'அருளாளன்'.

79. போய் வாருமென்று சொல்லி அரசியார் போற்றிப் பாதம்
பணிந்து அந்த
மாயனு மறை வெல்லயென் நாயன் உதவி செய்வான்.

போய்வாரும் என்று சொல்லி அரசியார் போற்றிப் பாதம் பணிந்து
- அந்த
மாயன் உமரை வெல்ல என் நாயன் உதவி செய்வான்.

(பொ.ரை)

அபூல்காசிம் மனைவி தன் அரும 'கணவருக்குச் சென்று வாருங்கள்' என்று விடை தந்தார்கள். பகைவனாகிய உமரை வென்றுச் சிறக்க என் இறைவன் துணை புரிவான் என்று கூறினார்கள்.

## அப்துல் காசிமின் புறப்பாடு

80. கோட்டை மதில் தாண்டிப் பறக்கும் குதிரை மேலேறித்
தாட்டிகமாய் நடத்தி உமறு தளத்தினில் போய்ப் புகுந்தார்.

கோட்டை மதில் தாண்டிப் பறக்கும் குதிரை மேல் ஏறித்
தாட்டிக மாய் நடத்தி உமறு தளத்தினில் போய்ப் புகுந்தார்.

(பொ.ரை)

கோட்டையின் மதிலைத் தாண்டிப் பறந்து செல்லும் குதிரையின் மீது ஏறி மிக வலிமையோடு உமறுவின் போர்க்களத்திற்குள் போய்ப் புகுந்தார்.

(சி.ரை)

தாட்டிகமாய் — மிக வலிமையாய்

## உமறுவின் கூற்று

81. காசிமைக் கண்டவுடன் உமறு கலங்கி மனம் மயங்கி—அந்த
ஹாசிம் கிளை வழிக்கிவ ஞாண் பிள்ளைச் சிங்க மென்றான்.

காசிமைக் கண்டவுடன் உமறு கலங்கி மனம் மயங்கி—அந்த
ஹாசிம் கிளை வழிக்கு இவன் ஆண் பிள்ளைச் சிங்கம் என்றான்.

(பொ. ரை)

போர்க்களத்திற்கு மிக விரைந்து வந்த காசிமைக் கண்டதும் உமறுவின் உள்ளம் கலங்கிப் போயிற்று. மனம் மயக்கம் கொண்டது. முகம்மது நபிகளாரின் ஹாசிம் குலத்தில் தோன்றி வீரமிக்க சிங்கம் இவன் என்றான்.

## போர் புரிதல்

82. வாளால் சமர் பொருதலில் சில மன்னர் மயங்கி நின்று
ஏழையைக் காருமென்று வெகுவெகு பேரெல்லாம் போற்றி
செய்வார்

வாளால் சமர் பொருதலில் சில மன்னர் மயங்கி நின்று
ஏழையைக் காரும் என்று வெகுவெகு பேர் எல்லாம் போற்றி
செய்வார்.

(பொ.ரை)

அபுல்காசிம் வாளினை எடுத்துப் போர் செய்யும்போது சில மன்னர்கள் உள்ளம் அஞ்சி, காசிமே, ஏழையாகிய எங்களை நீர் தான் காக்க வேண்டும் என்று ஒருவர் பின் ஒருவராக மன்றாடிக் கேட்டனர்.

83. வேங்கையைக் கண்ட கிடையாடு வெருண்டு தெறித்தது போல்
பங்கனெசீது தளம் வெட்டிச் சேர்க்கலுற்றார்.

வேங்கையைக் கண்ட கிடையாக வெருண்டு தெறித்தது போல்
பங்கன் எசீது தளம் வெட்டிச் சேர்க்கல் உற்றார்.

(பொ.ரை)

பாய்ந்து வரும் வேங்கையை எதிர்க்கமாட்டாது, போர்க்களத்தில் ஆட்டுக்கிடாய்த்தெறித்து ஓடுவதுபோல் அபுல்காசிமைக்கண்ட பகைவீரர்கள் திசையறியாது ஓடி ஒளிந்தனர். காசிம் பகையினரைப் பாய்ந்து சென்று வெட்டி எசீதின் படைபலத்தை வெட்டி ஒழித்தார்.

# வானவர்கள் பூச்சொரிதல்

84. வெட்டி மனஞ்சலித்து சுருக்கென் றெழுவார் பரிமேலாய் நடக்க
இஷ்ட முடன் வானோர் வந்து எல்லோரும் பூச்சொரிந்தார்

வெட்டி மனம் சலித்துச் சுருக்கு என்று எழுவார் பரிமேலாய் நடக்க
இஷ்டமுடன் வானோர் வந்து எல்லோரும் பூச்சொரிந்தார்.

(பொ.ரை)

காசிம் பகைவர்களை வெட்டி வீழ்த்துவிட்டு மனம் சலித்துப் போய் விரைந்து குதிரைமீது அமர்ந்து புறப்படும் போது வானவர்கள் மகிழ்ந்து வந்து மலர் தூவி வாழ்த்தினர்.

85. ஆதி தனை வணங்கி ஆமீன் தனைமுழங்கி யந்தச்
சோதி உசன் மகளுக்கு மிகச்சோபன மென்று சொல்வார்.

ஆதி தனை வணங்கி ஆமீன் தனைமுழங்கி அந்தச்
சோதி உசன்மகளுக்கு மிகச் சோபனம் என்று சொல்வார்.

(பொ.ரை)

இறைவனை வாழ்த்தி வணங்கி 'ஆமீன்' என்று முழங்கி வானவர்கள் உசன் மகளுக்கு வாழ்த்துக்கள் என்று கூறினர்.

(சி.ரை)

ஆமீன் — 'அது போலவே ஆகுக' என்பது பொருள். இறைவனை வணங்கி முடித்து அவனிடம் இறைஞ்சுகின்றபோது அனைவரும் 'ஆமீன்' என்று கூறுவர்.

சோபனம் — சுபம் உண்டாவதாக, இஸ்லாமியர்கள் அதிகமாகப் பயன்படுத்துவர்.

86. கன்னிக் குலக்கொழுந்தே உசனூர் கண்மணி யீன்ற கண்ணே
சொர்ண மடமயிலே காசீம் வரச் சோபனம் சோபனமே.

கன்னிக் குலக்கொழுந்தே உசனூர் கண்மணி ஈன்ற கண்ணே
சொர்ண மடமயிலே காசீம் வரச் சோபனம் சோபனமே.

(பொ.ரை)

கன்னிமை நிறைந்த குலப்பெண்ணே! கண்மணியாம் உசனூர் பெற்றெடுத்த கண்ணே! தங்கமயிலே! காசீம் வரவு நல்வரவாகட்டும். வாழ்த்துக்கள்! வாழ்த்துக்களாகும்.

# மனைவி ஆலத்தி ஏந்தி நிற்றல்

87. மன்னரு சன்மகளார் எழுந்து மனது களி கூர்ந்து
பொன்னாலே ஆலத்தி காசின் முன்னாலே ஏந்தி நின்றார்.

மன்னர் உசன் மகளார் எழுந்து மனது களி கூர்ந்து
பொன்னாலே ஆலத்தி காசின் முன்னாலே ஏந்தி நின்றார்.

(பொ.ரை)

உசனாரின் அன்பு மகளார் விரைந்தெழுந்து உள்ளம் மகிழ்ச்சியால் உவகை கொண்டு பொன் தட்டினாலே ஆலத்தி எடுத்து வந்து காசிம் முன்னாலே வந்து நின்றார்.

# மனைவியுடன் மகிழ்வுடன் இருத்தல்

88. வந்து யிருவரும் சப்ர மஞ்சத்தின் மேலிருந்த
சந்தோஷ வேளையிலே பாளையம் யிங்கல்லோ வந்த தென்றார்.

வந்து இருவரும் சப்ரமஞ்சத்தின் மேலிருந்த
சந்தோஷ வேளையிலே பாளையம் இங்கு அல்லோ வந்தது என்றார்.

(பொ.ரை)

காசிம் தனது மனைவியுடன் படுக்கையறையிலிருந்து மஞ்சத்தில் மகிழ்வுடன் இருக்கும் வேளையிலே, பகைவர்தம் படை வருகிறது என்ற செய்தியை ஒருவன் கூறினான்.

(சி.ரை)

சப்ர மஞ்சம் — விதானம் அமைக்கப் பட்ட கட்டில், பட்டினால் ஆகிய மேற்கட்டின் கீழ் அமைக்கப்பட்ட கட்டில், இதனை முஸ்லிம்கள் 'அஸ்மானகிரி' என்று அழைப்பர்.

# காசிம் போரிடச்செல்லுகிறேன் எனக்கூறுதல்.

89. கேட்டவுடன் காசின் சுருக்காகக் கீழே குதித்திறங்கிய அந்த
மூடனுமறை வெல்லப் பாஜயம் போரேனெனச் சொல்லுவார்.

கேட்டவுடன் காசிம் சுருக்காகக் கீழே குதித்து இறங்கி அந்த
மூடன் உமறை வெல்லப் பாஜயம் போரேன் எனச் சொல்லுவார்.

(பொ.ரை)

இச்செய்தியைக் கேட்டவுடன் காசிம் மஞ்சத்திலிருந்து விரைந்து கீழே இறங்கி, அறிவில்லாத உமறை வென்று பகைமுடிக்கப் போர்க்களம் சென்று வருகிறேன் என்று கூறினார்.

## காசிம் மனைவியின் கூற்று

90. கணவனுரைக்கு மயங்கிக் கன்னங்களில் ரெத்தம் சிந்த
கூசி மனங் கருகி அந்தக் குயில் மொழி வார்த்தை சொல்வாள்

கணவன் உரைக்கு மயங்கிக் கன்னங்களில் ரெத்தம் சிந்த
கூசி மனம் கருகி அந்தக் குயில் மொழி வார்த்தை சொல்வாள்

(பொ.ரை)

சிறிது நேரமே தன்னுடன் இருந்த கணவன் போரிடப்போகிறேன் எனக் கூறியதைக் கேட்டதும் உள்ளம் வருந்தி, கண்களில் பெருக்கெடுத்த குருதி கன்னங்களில் வழிந்தோட, உள்ளம் உருகி அச்சத்துடன் சிலவற்றைச் சொல்லத் தொடங்கினாள்.

91. இரண்டு தரம்போனீர் அந்த ரப்பன் உதவி செய்தான்
இன்று படைபோரீர் யெனக்கு ரெத்த மணக்குது காண்

இரண்டு தரம் போனீர் அந்த ரப்பன் உதவிசெய்தான்
இன்று படை போரீர் எனக்கு ரெத்த மணக்குது காண்

(பொ.ரை)

என் அன்புக் கணவரே! இரண்டு முறை போரிடச் சென்றீர் இறைவன் தங்களுக்கு வெற்றியைப் பெற உதவியருளினான் ஆனால் இன்று போருக்குச் செல்லப் புறப்படுகின்ற போதே எனக்கு இரத்தத்தின் வாடை வீசுகிறதே.

92. என் கண்ணின் ஒளிவே கல்பின் உயிர்க்குயிரே
என் வண்ணச் சிலையே என்ன செய்வேன் மனது குழம்புது காண்.

என் கண்ணின் ஒளிவே கல்பின் உயிர்க்கு உயிரே
என் வண்ணச் சிலையே என்ன செய்வேன் மனது குழம்புது காண்.

(பொ.ரை)

என் கண்களின் ஒளியே! உள்ளத்தின் உயிர்க்கு உயிரே என் அழகுச் சிலையே நான் இனி என்ன செய்வேன். என் உள்ளம் குழம்புகிறதே.

(சி.ரை)

கல்பு — 'புரளுதல்' என்பது இதன் பொருள். இதயம் எப்பொழுதும் புரண்டு கொண்டிருப்பதால் அது இப்பெயர் பெற்றது. "உங்களின் உடம்பில் ஓர் இறைச்சித்துண்டு உள்ளது. அது நல்லதாயின் நீங்களும் நல்லவர்களே தீயவாயின் நீங்களும் தீயவர்களே" என்று நபிகள்நாயகம் கூறினர்கள். கல்பு என்பதற்கு உள்ளம் என்பது பொருளாகும்.

93. ஈரல் துடிக்குது காண் ரெத்தவாடை மணக்குது காண்
வான் கயல் விழியில் துலங்கக் கூர்மையாய் மையையிட்டார்.

ஈரல் துடிக்குது காண் ரெத்தவாடை மணக்குது காண்
வான் கயல் விழியில் துலங்கக் கூர்மையாய் மையை யிட்டார்.

(பொ. ரை)

என்னுடைய ஈரல் துடிக்குது. இரத்த வாடை மணக்கிறது என்று கூறினர்கள். அபுல் காசீம் வாள் மீன் போன்ற விழிகளில் எழிலுறக் கூர்மையாய் மையைப் போட்டார்கள்.

"இப்பாடலின் அடி ஒன்றி வரவில்லை"

# அபுல்காசிம் போருக்குப் புறப்படுதல்

94. பத்து வகை ரெத்தினத்தினுல் செய்த முத்துப் பதித்த தூணி
அம்புருவை மகிழ்ந்து எடுத்து அங்கி நிசார் அணிந்தார்.

பத்து வகை ரெத்தினத்தினுல் செய்த முத்து பதித்த தூணி
அம்புருவை மகிழ்ந்து எடுத்து அங்கி நிசார் அணிந்தார்.

(பொ.ரை)

பத்து வகையான இரத்தினத்தினுல் செய்த முத்துக்கள் பதித்த அம்புகள் நிறைந்த அம்ருத் தூணியை மகிழ்ந்து எடுத்து அங்கியும் நிசாரும் அணிந்தார்.

(சி.ரை)

அங்கி — உடம்பின் மேலே அணியும் ஆடை
நிசார் — கால்களுக்கு அணியும் ஆடை
அம்புருத் தூணி — அம்புகள் நிறைந்த தூணி.

95. வாள் செருகி வைத்த ரெத்தினக் கச்சுதனை கமர் பந்திஙை அவுதல காசின் எடுத்து மருங்கிடை சேர்த்தார்.

வாள் செருகி வைத்த ரெத்தினக்கச்சுதனை கமர்பந்தினை அவுதல காசிம் எடுத்து மருங்கிடை சேர்த்தார்.

(பொ.ரை)

வாளினைச் சொருகி வைத்துள்ள இரத்தினங்கள் பதித்த இடையில் அணியும் வாரினை அப்துல் காசிம் எடுத்துக் கட்டிக் கொண்டார்.

(சி.ரை)

கமர் பந்து — இடையிலே கட்டப்படும் வார்.

96. பொன்னரிய மாலை கோத்துப் பதித்த நீலம் பச்சை மின்னும் விலையுயர்ந்த பதைக்க மெடுத்துக் கழுத்திலிட்டார்.

பொன் அரிய மாலை கோத்துப் பதித்த நீலம் பச்சை மின்னும் விலை உயர்ந்த பதைக்கம் எடுத்துக் கழுத்தில் இட்டார்.

(பொ.ரை)

பொன்னினுல் செய்யப்பட்ட மாலையும் நீலம், பச்சை, சுற்கள் பதித்த விலை உயர்ந்த பதைக்கத்தையும் கழுத்தில் போட்டார்.

97. ஐம்பது சவரன் யிருக்கிற ஆணி முத்து மாலை
இன்பமாகப் பார்த்துக் காசி னெடுத்துக் கழுத்திலிட்டார்

ஐம்பது சவரன் இருக்கிற ஆணிமுத்து மாலை
இன்பமாகப் பார்த்துக் காசிம் எடுத்துக் கழுத்தில் இட்டார்.

(பொ.ரை)

ஐம்பது பவுன் எடை இருக்கின்ற ஆணி முத்து மாலைதனை
இன்பமாகப் பார்த்துக் காசிம் எடுத்துக் கழுத்தில் அணிந்தார்.

98. வச்சிர வாசி பந்துசுத்தி வைத்ததொரு நீலம் பச்சைக் கரை
சருகைத் துப்பட்டா பெடுத்து இருக்கி யணைத்தார் காண்

வச்சிர வாசிப்பந்து சுத்தி வைத்த தொரு நீலம்பச்சைக் கரை
சருகைத் துப்பட்டா எடுத்து இருக்கி அணைத்தார் காண்.

(பொ.ரை)

வச்சிரத்தால் பந்து போல் சுத்தி வைக்கப்பட்டதும் நீலக் கரையும்
பச்சைக் கரையும் இணைந்த துப்பட்டாவை எடுத்து அணிந்தார்

(சி.ரை)

துப்பட்டா — இது இஸ்லாமியர்கள் தலையில் அணியும் தலைப்பாகை ஆகும். முகலாய மன்னர்கள் அணிந்திருந்தமையைக் காணலாம். இது மிக விலை உயர்ந்ததாக இருக்கும். கற்கள் பதித்து வைத்திருப்பர்.

99. ஒத்த சூரிய காந்திபோல் கடைந்த ரத்தினச் சமுதாடு
சித்திடை மேல்சொருகியெடுத்துச் சேர்த்து யிருக்கினர் காண்.

ஒத்த சூரிய காந்திபோல் கடைந்த ரத்தினச் சமுதாடு
சிற்றிடை மேல் சொருகி எடுத்து சேர்த்து இருக்கினர் காண்.

(பொ.ரை)

ஒற்றைச் சூரிய காந்தி பூப்போலக் கடைந்த இரத்தினால் செய்த அணிகலனைத் தம் இடையில் சொருகிக் கட்டினார்.

100. முகப்பு நூலில் வேய்ந்து நடுவில் பச்சை சிகப்பு
சுத்தி வைரம் வேய்ந்த சருகை சட்டை கழுத்திலிட்டார்.

முகப்பு நூலில் வேய்ந்து நடுவில் பச்சை சிவப்பு
சுத்தி வைரம் வேய்ந்த சருகை சட்டை கழுத்தில் இட்டார்.

(பொ.ரை)

நூலால் முகப்பு அமைந்து நடுவிலே பச்சை சிவப்பு சுத்தப்பட்ட வைரம் பதித்த சட்டை தனை மேனியில் அணிந்தார்.

# தாயார் அழுதல்

101. துனியா விலுலாவி வரும் சிங்கந்தனைப் பரிமேல் வரும்
ஆண்மகன் காசிம் அழகைப் பார்த்துத் தாயாரழுது நின்றார்.

துனியாவில் உலாவி வரும் சிங்கந்தனைப் பரிமேல் வரும்
ஆண்மகன் காசிம் அழகைப் பார்த்துத் தாயாரழுது நின்றார்.

(பொ.ரை)

இவ்வுலகில் நிகரில்லாச் சிங்கமென உலாவரும் காசிம், குதிரையின் மீது ஏறிவரும் அழகினைப் பார்த்துத் தாயார் அழுது நின்றிருந்தார்.

(சி.ரை)

துன்யா — உலகம்

# காசிம் பெற்ஞேரையும் மனைவியையும் காணுதல்

102. தந்தை உசன்முகமும் பெத்த தாயர் முகமும் பார்த்துச்
சிந்தை கலங்கி நிற்கும் தேவி முகமும் பார்த்தார்.

தந்தை உசன்முகமும் பெற்ற தாயர் முகமும் பார்த்துச்
சிந்தை கலங்கி நிற்கும் தேவி முகமும் பார்த்தார்.

(பொ.ரை)

தந்தை நிலையில் உள்ள உசனுர் முகத்தையும் ஈன்ற தாயின் முகத்தையும் பார்ந்தார். அருகில் உள்ளம் கலங்கி நின்ற தன் மனைவியின் முகத்தையும் பார்த்தார்.

# காசிம் விடைபெறுதல்

103. எந்தெ னெழுத்துப்படி யிருக்கும் நான் என்ன செய்யப் போரேன்.
என் சிந்தை கலங்காமல் நீங்கள் சேர்ந்து துவாச் செய்குவீர்.

எந்தன் எழுத்துப்படி இருக்கும் நான் என்ன செய்யப் போரேன்.
என் சிந்தை கலங்காமல் நீங்கள் சேர்ந்து துவாச் செய்குவீர்.

(பொ.ரை)

என்னுடைய தலை விதிப்படி என்ன நடக்க வேண்டுமோ அது நடக்கும். என்னுடைய செயல் என்று எதுவும் இல்லை. அனைத்தும் இறைவன் செயலே. ஆதலால் எது உள்ளம் கலங்கிவிடாமல் நீங்கள் அனைவரும் என் நலத்திற்காக இறைவனிடம் பிரார்த்தியுங்கள்.

(சி.ரை)

துஆ — 'ஆசிர்வதித்து இறைஞ்சுதல்' என்பது பொருளாகும். ''துஆ வணக்கத்தின் மூளையாகும்'' என்று நபிகள் நாயகம் கூறியுள்ளார்.

104. இந்தமொழி கேட்டு ஜனங்கள் எல்லோருமே அழ
அந்தவழி காசீன் தம்பரியை அதட்டியே காலால் தட்டினர்.

இந்த மொழி கேட்டு ஜனங்க்ள் எல்லோருமே அழ
அந்தவழி காசீம் தம்பரியை அதட்டியே காலால் தட்டினர்.

(பொ.ரை)

அனைவரும் நின்று இவர் கோலங்கண்டு அழுதனர். அந்நிலையிலே காசிம் தனது குதிரையை அதட்டிக் காலால் தட்டினர்.

## காசிமின் வருகையைப் படைத்தலைவன் காணுதல்

105. வாசி ஏழுவா னெல்லாம் துகள் பறக்க விட்ட
காசி னலங்கரித்து வாரதைக் கண்டான் படைத்தலைவன்.

வாசி ஏழுவான் எல்லாம் துகள் பறக்கவிட்ட
காசிம் அலங்கரித்து வாரதைக் கண்டான் படைத்தலைவன்.

(பொ.ரை)

குதிரையின் வேகத்தால் ஏழு வான் எல்லாம் தூசி பறந்து வரக் காசிம் அலங்கரித்து வருகின்றதைக் கண்டான் படைத்தலைவன்.

(சி.ரை)

வாசி — குதிரை
துகள் — தூசி.

## உமறுவின் சீற்றம்

106 காசின் வரவுகண்டு உமறுகண்கள் நெருப்பெரியவ்வின்
வாசியும் வாளும் படையும் கூட்டமாய் வந்து நெருங்கிநின்ருன்.

காசிம் வரவு கண்டு உமறு கண்கள் நெருப்பு எரிய அவன்
வாசியும் வாளும் படையும் கூட்டமாய் வந்து நெருங்கி நின்ருன்.

(பொ.ரை)

காசிமின் எழிலான வருகையைக் கண்டு உமறுவின் கண்கள் நெருப்பு உமிழ குதிரைகளுடனும் வாளுடனும் படையும் கூட்டமாய் வந்து நெருங்கி நின்ருன்.

## காசிமின் போர்த்திறன்

107. யானைப் பரித்திறளில் வந்து யாளி நுழைந்தது போல்-அந்தச்
சேனைப் படைத் தலைவர் சிரசு முடியறுத்தார்.

யானைப் பரித் திறளில் வந்து யாளி நுழைந்தது போல் - அந்தச்
சேனைப் படைத் தலைவர் சிரசு முடி அறுத்தார்.

(பொ.ரை)

யானைக் கூட்டங்களும் குதிரைகளும் நிறைந்த கூட்டத்தினுள்ளே யாளி நுழைந்ததைப் போல் சேனைகளுடையவும் படைத் தலைவர் களுடையவும் தலைகளைச் சேர்த்து வெட்டி வீசினுர்.

(சி.ரை)

யாளி — சிங்கம் போன்ற முகமும் உடலும் கொண்டு யானையின் தும்பிக்கையும் கொண்ட விலங்கு

108. யானைச் சிரசுருள அதில் வரும் வீரர் பரிமேலுருள
சேனைப் படையுருள எங்குமே கத்திச் சேர்த்துக் கருவறுத்தார்.

யானைச் சிரசு உருள அதில்வரும் வீரர் பரிமேல் உருள
சேனைப் படை உருள எங்குமே கத்திச் சேர்த்துக் கருவறுத்தார்.

(பொ.ரை)

போர்க்களத்தில் காசிமின் வாள் வீச்சால் யானைக்கூட்டம் நிலத்தில் வீழ்ந்து மடிய, அதிலே வந்த வீரர்கள் ஓடிவரும் குதிரைகளின் கால்களில் சிக்கி உருள, குதிரையும் சேர்ந்து ஒருவர் மீது ஒருவர் உருள, களத்தையே சுற்றி வந்து அனைவரையும் கொன்று குவித்தார்.

109. மாவைப் பிளந்தறுத்து அதில் வரும் மன்னரைச் கூறையிட்டுத்
தாவிப் படைபொருதி யெசீது தளத்தைக் கருவறுத்தார்.

மாவைப் பிளந்தறுத்து அதில் வரும் மன்னரைச் கூறையிட்டுத் தாவி படைபொருதி எசீது தளத்தைக் கருவறுத்தார்.

(பொ.ரை)

குதிரைப் படைதனைப் பல்வேறு கூறுகளாகப் பிரித்து அதில் வந்த மன்னர்களைக் கொன்று குவித்து, வீரமுடன் போரிட்டு எசீதின் போர்க் களத்தை நிர்மூலமாக்கினார்.

# காசிம் உமறு எங்கே என்று வினவுதல்

110. வெட்டிக் கருவறுத்து காசின் வெளியிலே நின்று கொண்டு
— அந்த
மட்டி உமறு எங்கே யவன் என்று சொன்னார்.

வெட்டிக் கருவறுத்து காசிம் வெளியிலே நின்று கொண்டு—அந்த
மட்டி உமறு எங்கே அவன் என்று சொன்னார்.

(பொ. ரை)

போர்க்களத்தில் அணைவரையும் நிர்மூலமாக்கியபின் கர்பலா வெட்ட வெளியிலே நின்றுகொண்டு 'எங்கே அந்த உமறு' என்று முழக்கமிட்டார்.

(சி.ரை)

வெளியிலே — கர்பலா களத்திலே

111. சங்கத்தில் பார்ப்ப மென்றார் சிங்கக்குட்டி வந்திங்கே
நிற்குதடா •யந்தப்
பங்க னுமறை இங்கே பார்க்க வரச் சொல்லடா.

சங்கத்தில் பார்ப் போம் என்றார் சிங்கக்குட்டி வந்து இங்கே
நிற்குதடா அந்தப்
பங்கன் உமறை இங்கே பார்க்க வரச் சொல்லடா.

(பொ.ரை)

வீரர்கள் சங்கமிக்கும் போர்க்களத்தில் சந்திப்போம் என்று சொன்னாரே இதோ. சிங்கத்தின் குட்டி சினத்துடன் நிற்குதடா. வஞ்சகம் நிறைந்த உமறைக் களத்தில் வந்து பார்ப்பதற்கு வரச் சொல்லடா.

# உமறு காசிமை வளைத்தல்

112. காசினுரை கேட்டுமறு கண்கள் நெருப்பெரிய அவன்
வாசிப் படையனுப்பித் திரும்பவும் வந்து வளைந்து கொண்டான்.

காசிம் உரைகேட்டு உமறு கண்கள் நெருப்பு எரிய - அவன்
வாசிப் படையனுப்பித் திரும்பவும் வந்து வளைந்து கொண்டான்.

(பொ.ரை)

வீரவுரை நிகழ்த்திய காசிமின் சொற்களைக் கேட்டு உமறுவின் கண்களில் அனல் பறக்க, குதிரைப் படையால், மீண்டும் வந்து வளைத்துக் கொண்டான்.

# உமறுவின் மந்திரி எதிர்த்தல்

113. வந்து வளைந்து கொண்ட உமறு மந்திரி தானே எதிர்த்துப்
பந்தையம் போட வாருந் திறத்தைப் பார்ப்போமெனச்
சொல்லுவான்.

வந்து வளைந்து கொண்ட உமறு மந்திரி தானே எதிர்த்துப்
பந்தையம் போடவாரும் திறத்தைப் பார்ப்போம் எனச்
சொல்லுவான்

(பொ.ரை)

காசிமைச் சுற்றி வளைத்துக்கொண்ட உமறுவின் மந்திரி காசிமிடம் இருவரின் திறமையையும் பார்த்து விடுவோம். பந்தயம் போட்டுக் கொள்வோம் என்று திமிரோடு கூறினன்.

# காசிம் போரிடுதல்

114. சொன்ன மொழி கேட்டுக் காசிம் சுருக்காய்ப் பரி நடத்தி
மின்னு மிடி போலே அந்த மிகவுஞ்சமர்கள் செய்தார்.

சொன்ன மொழிக்கேட்டுக் காசிம் சுருக்காய்ப் பரி நடத்தி
மின்னும் இடி போல அந்த மிகவும் சமர்கள் செய்தார்.

(பொ.ரை)

மந்திரி கூறிய மொழியைக் கேட்ட காசிம் விரைந்து குதிரையைச் செலுத்தி மின்னலின் வேகத்துனுடம் இடிபோன்றமுழக்கத்துடனும் இறுதி நிலை உண்டாகப் போரிணைக் கடுமையாக நடத்தினர்.

(சி.ரை)

சமர்கள் — போர்கள்

115. கொக்குக் களத்திலே போய் இராசாளி கொக்கரித்தாப் போலே திரிந்து
திக்குத் திசைகளெல்லாம் துரத்தி வெட்டிக் கருவறுத்தார்.

கொக்குக் களத்திலே போய் இராசாளி கொக்கரித்தாப் போலே திரிந்து
திக்குத் திசைகள் எல்லாம் துரத்தி வெட்டிக் கருவறுத்தார்.

(பொ.ரை)

கொக்குகள் நிறைந்திருக்கும் இடத்திலே இராசாளிப் பறவை ஒலி எழுப்பித் திரிவது போல் காசிம் எட்டுத் திக்குகளும் பகைவர்களைத் துரத்தி வெட்டிப் பகைவரை நிர்மூலமாக்கினர்.

(சி.ரை)

இராசாளி — பருந்தினங்களுள் ஒன்று.

## இரத்த ஆறு ஓடுதல்

*116.* வெட்டிக் கருவறுத்து ரத்த வெள்ளம் ஓடியதில்
மட்டில்லாச் சேனைப்படை மிகப் பெரு வாரியில் சேர்ந்ததம்மா.

வெட்டிக் கருவறுத்து இரத்த வெள்ளம் ஓடியதில்
மட்டில்லாச் சேனைப்படை மிகப் பெருவாரியில் சேர்ந்ததம்மா.

(பொ.ரை)

எதிரிப் படைகளை வெட்டி நிர்மூலமாக்கியதால் உண்டான இரத்தப் பெருக்கில் எண்ணமுடியாத சேனைகளும் படைவீரர்களும் அடித்துச் செல்லப்பட்டனர்.

## காசிப் சோர்ந்து நிற்றல்

117. உதிரத்துளி தெறித்து அங்கி உடுப்பெல்லாம் ரெத்தஞ்சிந்த
மதுரங் கனி மேனி மிகவும் வாடிமெலிந்து நின்றார்.

உதிரத்துளி தெறித்து அங்கி உடுப்பெல்லாம் இரத்தம் சிந்த
மதுரங்கனி மேனி மிகவும் வாடி மெலிந்து நின்றார்.

(பொ.ரை)

பகைவர்களை வெட்டிய போது தம்மீது தெறித்த இரத்தத் துளிகள் அணிந்திருந்த உடையெல்லாம் பட்டதால், இனிமையான உடல் இவ்வாடையினால் மிகவும் வாடிப்போய்ச் சோர்ந்து நின்றார்.

## உமறு நெருங்கி வருதல்

118. ரத்தக்களை தாங்கிக்காசிம் நிற்கும் நிலைபார்த்துச்
சற்றும் இரங்காமல் உமறு ஜாது நெருங்கி வந்தான்.

ரத்தக் களை தாங்கிக் காசீம் நிற்கும் நிலை பார்த்துச்
சற்றும் இரங்காமல் உமறு ஜாது நெருங்கி வந்தான்.

(பொ.ரை)

இரத்தத்துளிகள் பட்டதால் களைத்துப்போய் நிற்கின்ற காசீம் நிலையைப் பார்த்த உமறு கொஞ்சமும் இரக்கம் கொள்ளாமல் நெருங்கி வந்து கொண்டிருந்தான்.

(சி.ரை)

உமர் ஜாது — உமர் இப்னு ஸாஅது.

## உமறை வெட்டுதல்

119. துட்டனுமறு படை நெருங்கிச் சுத்தி வளைந்து கொள்ளக்
கட்டான கற்காசிம் அவனைத் துரத்தியே வெட்டி விட்டார்.

துட்டன் உமறு படை நெருங்கிச் சுத்தி வளைந்து கொள்ளக்
கட்டான கற்காசிம் அவனைத் துரத்தியே வெட்டி விட்டார்.

(பொ.ரை)

பகைவனான உமறுவின் படை காசீமை நெருங்கிச் சுற்றி வளைந்து கொண்டதும், கல்லைப் போன்ற உடல் வலிமை மிக்க காசிம் அவனைத் துரத்திச் சென்று வெட்டி விட்டார்.

# காசிமுக்குத் தாகம் எடுத்தல்

120. யித்தனைப் பேருடனே அவுதுல் காசி னெதிர்த்தே போராடி-
சித்தம் மயங்கவே தண்ணீர்த் தாகமும் வந்தது காண்.

இத்தனைப் பேருடனே அப்துல் காசிம் எதிர்த்துப் போராடி-
சித்தம் மயங்கவே தண்ணீர்த் தாகமும் வந்தது காண்.

(பொ.ரை)

அப்துல்காசிம் பெரும்படையை எதிர்த்துப் போராடினர். களைத்துப் போயிருந்ததால் மயக்கம் அடையும் நிலைக்கு ஆளாகும் போது தண்ணீர்த்தாகமும் எடுத்தது.

121. இப்படிப் போராடிச் சமர் செய்து நிற்கின்ற வேளையிலே
தப்பாமல் நாவுலர்ந்து தண்ணீர்த் தாகமும் வளர்ந்தது காண்.

இப்படிப் போராடிச் சமர் செய்து நிற்கின்ற வேளையிலே
தப்பாமல் நா உலர்ந்து தண்ணீர்த் தாகமும் வளர்ந்தது காண்.

(பொ.ரை)

எதிரிப் படையுடன் எதிர்த்துப் போராடிப் போர் செய்து நிற்கின்ற போது நா உலர்ந்து போய் தண்ணீர்த் தாகமும் அதிகமானது.

122. இப்படிப் போர்க் களத்தில் சமர்செய்து நிற்கின்ற
வேளையிலே அந்தச்
சொல்படிக் கேளாத உமறு சுற்றி நெருங்கி நின்ருன்.

இப்படிப் போர்க் களத்தில் சமர் செய்து நிற்கின்ற வேளையிலே -
அந்தச்
சொல்படிக் கேளாத உமறு சுற்றி நெருங்கி நின்ருன்.

(பொ.ரை)

காசிம் இவ்விதமாகப் போரிட்டுக் களைத்து நிற்கும் வேளையிலே இறை ஆணைப்படி நடவாத உமறு காசீமை நெருங்கி வளைத்து நின்றான்.

# காசீம் எதிரிகளைத் துரத்துதல்

123. கர்ப்பம் கலங்கிடவே வந்து நின்ற உமறு படைக்களம்
போய்ப் புகுந்து
துரத்தி அந்தபுறம் போன பின்பு திரும்பவும் அங்ஙனே வந்து
நின்றார்.

கர்ப்பம் கலங்கிடவே வந்து நின்ற உமறு படைக்கலம் போய்ப்
புகுந்து
துரத்தி அப்புறம் போனபின்பு திரும்பவும் அங்ஙனே வந்து
நின்றார்.

(பொ.ரை)

காசீம் தளர்ந்த நிலையில் தன்னை எதிர்த்து நிற்கும் உமறைப் பார்த்துச் சினந்தவராய்ப் போர்க்களம் புகுந்து அவனைத் துரத்த மீண்டும் அவ்விடத்திலே வந்து நின்றார்.

# இறைவனை - இறசூலை-புலி அலியை வாழ்த்துதல்

124. நிற்கையிலே மயங்கி அந்த றப்பனையே நினைந்து அந்த
மக்கத்திற சூலையும் அலியையயும் வாழ்த்தியே போற்றி நின்றார்.

நிற்கையிலே மயங்கி அந்த றப்பனையே நினைந்து அந்த
மக்கத்து இறசூலையும் அலியையும் வாழ்த்தியே போற்றி நின்றார்.

(பொ.ரை)

மயங்கி அவ்வாறு நிற்கையிலே உலகைக் காத்துவக்கும் இறைவனை நினைந்து வணங்கி மக்கத்து முகம்மது நபி இறைத்தூதரையும், அவர்தம் மருகரான அலியையும் வாழ்த்தியே நின்ருர்.

125. அந்த ரணகளத்தில் உடலெங்கும் ரத்த வாடை விச
அந்தமுள்ள காசினவர் அல்லாஹ்வைப் போற்றி நின்ருர்.

அந்த ரண களத்தில் உடல் எங்கும் ரத்த வாடை விச
அந்தமுள்ள காசீம் அவர் அல்லாஹ்வைப் போற்றி நின்ருர்.

(பொ. ரை)

இரத்த ஆறு பாய்ந்து வாடை வீசும போர்களத்தில் அழகுமிக்க காசீம் அல்லாஹ்வை வணங்கி நின்ருர்.

(சி.ரை)

அல்லாஹ் — இறைவன்

## காசீம் மயங்குதல்

126. சொரணை மதிமயங்கி உடலெல்லாம் சோர்ந்து மனமுருகி
அந்தக்
கருணை அப்துல்காசிம் ரத்தக் களையில் மயங்கி நின்ருர்.

சொரணை மதி மயங்கி உடல் எல்லாம் சோர்ந்து மனம் உருகி –
அந்தக்
கருணை அப்துல் காசிம் ரத்தக் களையில் மயங்கி நின்ருர்.

(பொ.ரை)

தன்மேனியில் உள்ள உணர்ச்சி குறைந்து போய், அறிவு மயங்கி உடல் சோர்ந்து மனம் உருகிய நிலையில் கருணை மிக்க அப்துல் காசிம் ரத்தம் சிந்த மயங்கி நின்றார்.

## உமறு வெட்டுதல்

127. வெட்டி மதி மயங்கிக் காசிம் நிற்கின்ற வேளையிலே அந்தத்
துட்டன் உமறு கணை போல் வந்து வெட்டினான் வாளாலே

வெட்டி மதிமயங்கிக் காசிம் நிற்கின்ற வேளையிலே - அந்தத்
துட்டன் உமறு கணை போல் வந்து வெட்டினான் வாளாலே

(பொ.ரை)

எதிரிகளைப் போர்க்களத்தில் வெட்டிச் சாய்த்ததால் மேனியில் பட்ட இரத்த வாடையினால் அறிவும் உள்ளமும் மயங்கிக் காசிம் நிற்கின்ற பொழுது துஷ்டன் உமறு அம்பு போல் விரைந்து வந்து வாளினாலே காசீமை வெட்டினான்.

## காசிம் வெட்டுதல்

128. வெட்டும் வலது புறம் விழுந்து வெள்ளம் போல் ரத்தம் சிந்த்
யிஷ்டமுடன் காசிம் அவனை எட்டியே வெட்டினார் காண்.

வெட்டும் வலதுபுறம் விழுந்து வெள்ளம் போல் இரத்தம் சிந்த்
இட்டமுடன் காசிம் அவனை எட்டியே வெட்டினார் காண்.

(பொ.ரை)

உமறு வெட்டிய வெட்டு காசிமின் வலது புறத்தில் விழுந்தது, இரத்தம் வெள்ளம் போல் பெருகியது. அந்நிலையிலேயே காசிம் விருப்பத்துடன் உமறை எட்டியே வெட்டி வீழ்த்தினார்.

# காசிம் மண்ணில் சாய்தல்

129. காயத்தில் ரத்தஞ்சிந்தியிரு கண்களும் பார்வை சுத்தி
நாயனைப் போற்றி சைத்து அப்துல் காசின் தலைசாய்ந்தார்.

காயத்தில் ரத்தம் சிந்தி இரு கண்களும் பார்வை சுத்தி
நாயனைப் போற்றி இசைத்து அப்துல் காசிம் தலை சாய்ந்தார்.

(பொ.ரை)

உமறு வெட்டிய வெட்டினால் ஏற்பட்ட காயத்தினால் இரத்தம் சிந்தி இரண்டுகண்களும் பார்வை இழந்து இறைவனைப் போற்றி வாழ்த்தி அப்துல் காசிம் தலை கீழே சாய்த்தார்.

130. தங்கக் குலைவாழை தெறித்துத் தரையில் விழுந்தது போல்
அங்கம் மெலிந்துருகிக் காசின் அலறித் தலை சாய்ந்தார்.

தங்கக் குலைவாழை தெறித்துத் தரையில் விழுந்தது போல்
அங்கம் மெலிந்து உருகிக் காசிம் அலறித் தலை சாய்ந்தார்.

(பொ.ரை)

தங்கத்தினால் செய்த வாழைக் குலை தெறித்துத் தரையில் விழுந்தது போன்று காசிம் உடலின் உறுப்புக்கள் மெலிந்து, உருகி இறைப் பெயரை உரக்கக் கூறித் தலை சாய்ந்தார்.

# உமறு காசிமின் தலையறுக்க வருதல்

131. மண்டலம் போற்றுகின்ற அலிபேரர் மண்ணில் காசிம் விழ அந்த
வண்டனுமறு கனை போல் கிட்ட வந்தான் தலையறுக்க.

மண்டலம் போற்றுகின்ற அலி பேரர் மண்ணில் காசிம் விழ அந்த

வஞ்சகன் உமறு கணைபோல் கிட்ட வந்தான் தலையறுக்க.

(பொ.ரை)

உலகம் போற்றுகின்ற அலியினுடைய பேரர் காசிம் மண் மீது விழுந்தார். அந்த நேரத்தில் வஞ்சகன் உமறு அம்பு போல் காசிமின் தலையறுக்க அருகினில் வந்தான்.

## காசிமின் குதிரை உமறை மிதித்தல்

132. கண்டவுடன் குதிரையெழும்பிக் கனைத்து அனுமானித்து அந்த
வண்டனைக் கிட்டவர ஒட்டாமல் வாசி கடித்து மிதித்தது காண்.

கண்டவுடன் குதிரை எழும்பிக் கனைத்து அனுமானித்து - அந்த
வண்டனைக் கிட்டவர ஒட்டாமல் வாசி கடித்து மிதித்தது காண்

(பொ.ரை)

காசிமைத் தலையறுக்க வந்த வந்த உமறைக் கண்ட காசிமின் குதிரை எழுந்து தாவிக் கனைத்து அவனை எதிரியென்றும் அவன் நோக்கம் இன்னது என்பதை அனுமானித்து, வஞ்சகனை அருகில் வரவிடாமல் குதிரை கடித்து மிதித்தது.

## உசனூர் ஓடி வந்து புலம்புதல்

133. அசனூர் மகன் காசிம் தரையில் விழுந்து கிடக்கிறதை
உசனூரும் கண்டவுடன் மயங்கியே ஓட்டமாய் ஓடி வந்தார்.

அசனூர் மகன் காசிம் தரையில் விழுந்து கிடக்கிறதை
உசனூரும் மகன்காசிம் கண்டவுடன் மயங்கியே ஓட்டமாய் ஓடி வந்தார்.

(பொ.ரை)

தன்னுடைய தமையனார் அசனார் மகன் காசிம் தரையில் விழுந்து கிடப்பதை உசனார் கண்டதும் மயக்கத்துடன் ஓடோடி அருகில் வந்தார்.

(சி.ரை)

ஓட்டமாய் ஓடி — பாசம் முன்னே துரத்தக் கால்கள் அதற்கு ஈடாக ஓடியதாம். நாட்டுப்புற மக்களின் வழக்கில் உள்ள சொற்றொடரைப் பயன்படுத்தி ஹுசைனாரின் வேகத்தை உணர்த்தியுள்ளார்.

134. வந்து எடுத்தணைத்துக் காசிமை வாரி மடியில் வைத்து
சிந்தை மனம் மயங்கி உசனார் மனம் நொந்து புலம்பலுற்றார்.

வந்து எடுத்து அணைத்துக் காசிமை வாரி மடியில் வைத்து
சிந்தை மன மயங்கி உசனார் மனம் நொந்து புலம்பல் உற்றார்.

(பொ.ரை)

ஓடி வந்த உசனார் காசிமை எடுத்து அணைத்துக் கொண்டு மடியில் வைத்தார். அவருடைய உள்ளம் மயங்கி மனம் நொந்து புலம்பத் தொடங்கினார்.

## அனைவரும் புலம்புதல்

135. மன்னருசன் புலம்ப ஹீறுலின் மங்கையரும் புலம்ப
ஜன்னத்திலே யிருக்கும் வானோர்கள் சேரப் புலம்பலுற்றார்.

மன்னர் உசன் புலம்ப ஹீறுலின் மங்கையரும் புலம்ப
ஜன்னத்திலே இருக்கும் வானோர்கள் சேரப் புலம்பல் உற்றார்.

(பொ.ரை)

மன்னர் உசன் புலம்பினர், ஹீறுலின் பெண்கள் புலம்பினர் சொர்க்கத்திலே இருக்கும் வானோர்கள் இணைந்து புலம்பினர்.

(சி.ரை)

ஹீறுலின் — 'ஹீருல் ஈன். — ஹீர் என்பது ஹீராஉ என்பதன் பன்மையாகும். 'கண்ணழகிகள்' என்று பெயர். வெண்ணிற மேனியும், கருத்த விழிகளும் கொண்ட சுவர்க்கத்துப் பெண்கள்.

ஜன்னத் — 'சுவர்க்கம்' என்பது பொருளாகும்.

136. வான்மலை கடலும் இந்த வையமும் புலம்ப ஆண்மகன்
காசிமை யெடுத்தணைத் தங்கே கொண்டு வந்தார்.

வான் மலை கடலும் இந்த வையமும் புலம்ப ஆண்மகன்
காசிமை எடுத்து அணைத்து அங்கே கொண்டு வந்தார்.

(பொ.ரை)

வானமும் கடலும் மலையும் இந்த மண்ணுலகமும் புலம்பியழத் தங்கள் மகன் காசீமை எடுத்து மார்போடு அணைத்து இல்லத்திற்குக் கொண்டு வந்தார்.

# தாயும் மனைவியும் புலம்புதல்

187. கண்டாரே தாயரும் காசின் காலில் மனைவியரும்
வந்துவந்து
மனங் கரைந்து யிருபேரும் நொந்து புலம்பலுற்றார்.

கண்டாரே தாயரும் காசிம் காலில் மனைவியரும் வந்து வந்து
மனம் கரைந்து இருபேரும் நொந்து புலம்பல் உற்றார்.

(பொ.ரை)

காசிம் மண்ணில் சாய்ந்ததும் பெற்ற தாயரும் அன்பு மனைவியும் ஓடோடி வந்து உள்ளம் உருகி இரண்டுபேரும் மனம் வருந்திப் புலம்பினார்.

188. தங்கம் போல் மேனியிலே வெட்டு மத்தழும்புமே தான்
பொங்கிய ரத்தத்திலே புரண்ட புழுதியுமே பார்த்து.

தங்கம் போல் மேனியிலே வெட்டும் அத்தழும்புமே தான்
பார்த்துப்
பொங்கிய ரத்தத்திலே புரண்ட புழுதியுமே பார்த்து

(சி.ரை)

தங்கம் போன்ற உடலிலே விழுந்த வெட்டின் காரணத்தினாலே உடலில் தழும்பு இருப்பதைக் கண்டும் பொங்கி வழிந்த இரத்தத்திலே புரண்டதால் மேனியில் படிந்த புழுதியினையும் பார்த்தார்.

# மனைவியின் புலம்பல்

139. வாடி யெழுந்தலறி மனைவியும் வஞ்சியிளமயில் போல்
ஆடிக் கிறு கிறுத்துத் தரையில் அறைந்து விழுந்தார்.

வாடி எழுந்து அலறி மனைவியும் வட்சி யிள மயில் போல்
ஆடிக் கிறு கிறுத்துத் தரையில் அறைந்து விழுந்தார்.

(பொ.ரை)

கணவனின் மரணத்தைக் கண்டு உடல் வாடி விழுந்து மீண்டும் எழுந்து, அலறித்துடித்துத் தலைசுற்றித் தரையிலே தன் கைகளால் அறைந்து விழுந்தார்.

140. கன்னி வயதெனக்குத் தலையிலே கத்தனெழுதினானே
பொன்னினுசன் மகளார் தரையில் புலம்பி விழுந்தழுதார்.

கன்னி வயது எனக்குத் தலையிலே கத்தன் எழுதினானே
பொன்னின் உசன் மகளார் தரையில் புலம்பி விழுந்து அழுதார்.

(பொ. ரை)

உசனுடைய மகளாரான, காசிமுடைய மனைவி, என்னுடைய வயது, கன்னித் தன்மையையுடைய வயது. என் தலையிலே இறைவன் இந்த விதியை எழுதிவிட்டானே என்று கூறித் தரையில் புலம்பி விழுந்து அழுதார்,

141. கொத்துக் குழல் முடித்த பின்னுக்குக் கூந்தல் அவிழ்க்கவில்லை
வைத்து முடித்த மலர் மசங்கியே வாடவில்லை

கொத்துக் குழல் முடித்த பின்னுக்குக் கூந்தல் அவிழ்க்க இல்லை
வைத்து முடித்த மலர் மசங்கிய வாடவில்லை

(பொ.ரை)

கூந்தலைக் கொத்தாக எழிலுற முடித்தேனே. இன்னும் அதை அவிழ்க்கவில்லையே, கூந்தலில் வைத்த மலர் இன்னும் வாடவே இல்லையே.

142. கொண்டை சரியவில்லை ரத்தினங் குஞ்சந் தளரவில்லை
செண்டு மலர் முடித்து வாசச் செண்பகம் வாடவில்லை.

கொண்டை சரியவில்லை இரத்தினக் குஞ்சம் தளரவில்லை
செண்டு மலர் முடித்த வாசச் செண்பகம் வாடவில்லை.

(பொ.ரை)

கட்டி வைத்திருக்கும் கொண்டை சரியவில்லையே. கூந்தலிலே தொங்க விட்டிருக்கும் இரத்தினத்திலாய குஞ்சம் தளரவில்லையே செண்பகப் பூவால் முடித்து வைக்கப்பட்ட செண்டு வாடல்விலையே.

143. கூந்தல் அவிழ்க்கவில்லை ரத்தினக் குப்பி தளரவில்லை
வகிழ்ந்து முடித்த பின்னல் அவிழ்த்து மறுபடி பின்னவில்லை

கூந்தல் அவிழ்க்க வில்லை ரத்தினக் குப்பி தளரவில்லை
வகிழ்ந்து முடித்த பின்னல் அவிழ்த்து மறுபடி பின்னவில்லை

(பொ.ரை)

கூந்தலை அவிழ்க்கவே இல்லையே. இரத்தினத்தால் செய்த கொண்டையில் வைக்கப்படும் குப்பி தளரவில்லை. வகிடு எடுத்துப் பின்னல் பின்னியதை மீண்டும் அவிழ்த்துப் பின்ன வில்லையே.

144. சூடா அவிழ்க்கவில்லை இரத்தினச் சுட்டி கழட்டவில்லை
வாடாக் கொழுந்து முல்லை மலர்த் துளிர் வாடவில்லை

சூடா அவிழ்க்கவில்லை இரத்தினச் சுட்டி கழட்டவில்லை
வாடாக் கொழுந்து முல்லை மலர்த் துளிர் வாடவில்லை

(பொ.ரை)

தலையில் அணிந்துள்ள சூளாமணியை அவிழ்க்கவில்லை நெற்றியில் அணிந்திருக்கும் இரத்தினக் சுட்டி கழற்றவில்லை. கூந்தலில் அணிந்திருக்கும் முல்லை மலர் வாடவில்லையே.

145. சாந்து கரையவில்லை கலியாணச்சடங்கு முடியவில்லை.
கூந்தல் தலையவிழ்த்து இருவருங் கூடி நீராடவில்லை.

சாந்து கரையவில்லை கலியாணச் சடங்கு முடியவில்லை
கூந்தல் தலை அவிழ்த்து இருவருங் கூடி நீராடவில்லை.

(பொ.ரை)

முகத்திலே போட்டுள்ள சாந்துப் பொடி கரையவில்லையே. திருமணம் ஆனதற்குப் பின் நடைபெறும் சடங்குகளும் முடியவில்லையே. கூந்தலினை அவிழ்த்து இருவரும் இணைந்து நீராடவில்லையே.

146. எண்ணெய்த் தலைமுழுகி நாமளிருபேரும் நீராடி
பொன்னின் தலை உயர்த்தி மனம் பொருந்தி நீராடவில்லை.

எண்ணெய்த் தலை முழுகி நாம் இருபேரும் நீராடி
பொன்னின் தலை உலர்த்தி மனம் பொருந்தி நீராடவில்லை,

(பொ.ரை)

தலைக்கு எண்ணெய் தேய்த்து இருவரும் நீராடவில்லையே· பொன் போன்ற தலையினை உலர்த்தி நறுமணம் பூசி நீராடவில்லையே.

147 மங்கையர் தன்னுடனே கொஞ்சி மஞ்சள் நீராடவில்லை
செங்கையால் நீர் வழங்கி இருவரும் செல்வமும் பார்க்கவில்லை.

மங்கையர் தன்னுடனே கொஞ்சி மஞ்சள் நீராடவில்லை.
செங்கையால் நீர் வழங்கி இருவரும் செல்வமும் பார்க்கவில்லை·

(பொ.ரை)

என்னை யொத்த பெண்களுடனே விளையாட்டுப் பேச்சுக்கள் பேசி மஞ்சள் நீராடி விளையாடவில்லையே தாங்கள் பொருள் ஈட்டி என்னிடம் வழங்க இருவரும் இணைந்து உலகின் செல்வமும் பார்க்கவில்லை.

148. சிங்கா சனத்தில் வைத்து இருபேரையும் சேர
அருகிருத்தி
எங்கள் மனங்குளிர இருவர் செல்வமும் பார்க்கவில்லை.

சிங்க ஆசனத்தில் வைத்து இருபேரையும் சேர அருகு இருத்தி எங்கள் மனம் குளிர இருவர் செல்வமும் பார்க்கவில்லை.

(பொ.ரை)

பெருமிதத்திற்குரிய சிங்கம் போன்ற ஆசனத்தில் வைத்து நம் இருவரையும் கணவன் மனைவியாக ஒன்று இணைத்துப் பார்க்கவில்லையே. நாம் இருவரும் இணைந்து நம்முடைய உள்ளம் மகிழ்ச்சியுறப் பிள்ளைச் செல்வத்தையும் காணவில்லையே.

**149.** பொனிலங்குக் குழியில் போட்ட முத்து ரத்தினம்
தன்னில் விளையாடி யிருபேர் சமர்த்தையும் பார்க்கவில்லை.

பொன் இலங்கு குழியில் போட்ட முத்து ரத்தினம்
தன்னில் விளையாடி இருபேர் சமர்த்தையும் பார்க்கவில்லை.

(பொ.ரை)

தங்கத்தால் செய்யப்பட்ட பல்லாங் குழியில் முத்து ரத்தினக் கற்களைப்போட்டு நாம் இருவரும் விளையாடி நம்மில் யார் சிறப்பாக ஆட வல்லவர் எனும் போட்டி கூட நடக்கவில்லையே

**150.** சாந்து புனுகு பன்னீரணிந்த ஜவ்வாதும் அழியவில்லை.
சோர்ந்து குழல் அவிழ்ந்து மனம் சோருதே என்ன செய்வேன்

சாந்து புனுகு பன்னீர் அணிந்த ஜவ்வாதும் அழியவில்லை
சோர்ந்து குழல் அவிழ்ந்து மனம் சோருதே என்ன செய்வேன்.

(பொ. ரை)

சாந்தும் புனுகும் பன்னீரும் ஜவ்வாதும் மேனியில் தடவிக் கொண்ட மணம் அழியவில்லையே. தங்களை எண்ணியே நான் சோர்ந்து வழும்போது குழல் அவிழ்கிறதே என்ன செய்வேன்.

**151.** பொட்டுக் கரையவில்லை தாச்சினாப் போட்டது மாறவில்லை.
பட்டு மயங்கவில்லை தின்ற பாக்கும் சிவக்கவில்லை.

பொட்டுக் கரையவில்லை தாச்சினாப் போட்டது மாறவில்லை
பட்டு மயங்கவில்லை தின்ற பாக்கும் சிவக்க வில்லை.

(பொ.ரை)

கண்ணத்தில் வைத்துள்ள பொட்டும் கரையவில்லை. தாச்சினாப் போட்டது மாறவில்லை அணிந்துள்ள பட்டுச் சேலையும் கசங்கவில்லை. வாயிலே போட்டவெ வற்றிலைப் பாக்கும் சிவக்கக் கூட இல்லையே.

(சி ரை)

தாச்சினா — கூந்தலில் உள்ள வகிடுக்கு நேராகப் போடப் படும் 'குங்குமப்பொடி'

152. மஞ்சள் துவளவில்லை இரு கண்ணில் மையும்
அழியவில்லை
மிஞ்சி முகத்திலிட்ட மினுக்குமே போகவில்லை

மஞ்சள் துவளவில்லை இருகண்ணில் மையும் அழியவில்லை முகத்திலே போட்டுள்ள மஞ்சள் மயங்கவில்லை. இரண்டு கண்களில் போட்டிருக்கும் மை அழியவில்லையே. கால்விரலிலே போடுகின்ற மிஞ்சியின் மினுமினுப்பும் நீங்கவில்லையே.

(சி.ரை)

மிஞ்சி — கால் விரல்களுக்குப் போடுகின்ற அணிகலன்.

153. மெய்யிலிட்ட நான்கு மருகிலும் மின்னும் வங்கிக்
காப்பழகும்
கையிலிட்ட கங்கணமும் கழட்டி அவிழ்க்கவில்லை.

மெய்யில் இட்ட நான்கு மருகிலும் மின்னும் வங்கிக் காப்பழகும் கையில் இட்ட கங்கணமும் கழட்டி அவிழ்க்கவில்லை.

(பொ.ரை)

உடம்பில் போட்டு அழகு பார்க்கும் நான்கு பக்கங்களும் மின்னுகின்ற காப்பும் கையில் போட்டிருக்கும் கங்கணமும் இன்னும் கற்றி அவிழ்க்கவில்லையே.

(சி.ரை)

கங்கணம் — திருமணத்தின் போது மணமக்களுக்குக் கையின் மேல் பகுதியில் போடுவர். சடங்குகள் கழித்தபின் அதனைக் கழற்றி விடுவர்.

வங்கிக்காப்பு — நாட்டுப்புறப் பெண்கள் முழங்கைக்கு மேல் அணியும் அணி.

154. வாளி பிறழவில்லை கொங்கை வயிரமசையவில்லை
கோவி வைர ரத்தினக் கொட்புக் கழற்றவில்லை.

வாளி பிறழவில்லை கொங்கை வயிரம் அசையவில்லை
கோவி வைர ரத்தினக் கொப்புக் கழற்றவில்லை.

(பொ.ரை)

காதிலே அணிந்திருக்கும் வாளி அங்கும் இங்கும் பிறழாது இருக்கிறதே - மார்புக்கு அணிந்து வைர அணிகலன் அசைய வில்லையே - வைரமும் ரத்தினக்கற்களும் பதித்த கொப்பு கழற்றப்படவில்லையே.

(சி.ரை)

கொப்பு — காதின் மேலே அணியும் அணிகலன்

வாளி — கொப்புக் கீழே காதிலே வரிசையாக ஓட்டைகள் போட்டு அணிவிக்கும் அணிகலன் இது அரசமரத்தின் இலையைப்போல இருக்கும். ஆதலால் இதனை 'அரச இலைவாளி' என்பர்.

155 ஒத்தைச் சூரியர் பிறை வைத்த ரத்தினப் பதைக்கத்துடன்
கொத்துச் சரப்பலியும் கழுத்தில் போட்டுத் திரும்பலையே.

ஒத்தைச் சூரியப் பிறை வைத்த ரத்தினப் பதைக்கத்துடன்
கொத்துச் சரப்பலியும் கழுத்தில் போட்டுத் திரும்பலையே.

(பொ.ரை)

கழுத்திலே போட்டிருக்கும் ஒற்றைப் பிறை வடிவம் போலிருக்கும் பதைக்கம் செய்து அதில் ரத்தினக் கற்கள் பதித்த பதைக்கத்தை உடைய சரப்பலி அணிந்து கழற்றவில்லையே.

(சி.ரை)

சரப்பலி — பதைக்கத்துடன் கழுத்தில் அணியும் அணிகலன் சங்கிலியுடன் இருக்கும்.

156. தாலிச் சரடு கட்டும் மஞ்சள் நூலும் பழகவில்லை
மாலையும் மல்லிகையும் கோத்த நூலும் பழகவில்லை.

தாலி சரடு கட்டும் மஞ்சள் நூலும் பழகவில்லை
மாலையும் மல்லிகையும் கோத்த நூலும் பழகவில்லை.

(பொ.ரை)

கழுத்திலே அணிந்திருக்கும் தாலிச் சங்கிலியை இணைக்கும் மஞ்சள் நூலும் மாலையில் இணைத்த மல்லிகைக்குரிய நூலும் பழமையாக இல்லையே.

(சி.ரை)

தாலிச்சரடு — தாலிச் சங்கிலி

157. கையிலிட்ட ரத்தினவளையல் கங்கணம் அவிழ்க்கவில்லை
மெய்யாய் மனமுருகி கைதனிலே சோர்ந்தது காண்.

கையில் இட்ட ரத்தின வளையல் கங்கணம் அவிழ்க்கவில்லை
மெய்யாய் மனம் உருகிக் கைதனிலே சோர்ந்தது காண்.

(பொ.ரை)

கையிலே அணிந்துள்ள இரத்தின வளையல்கள் அவிழ்க்கப் படாததால், உடலெல்லாம் மெலிந்து கைகள் சோர்ந்து வளையல்கள் தானே கழன்று விடும் நிலை ஆனதே.

158. சிங்க எடையிருக்கும் சரிகை சேர்ந்த கமருப்பட்டு
அங்கம் மெலிந்துருகி மிகவும் அவிழ்ந்து தளர்ந்தது காண்.

சிங்க எடை இருக்கும் சரிகை சேர்ந்த கமருப்பட்டு
அங்கம் மெலிந்து உருகி மிகவும் அவிழ்ந்து தளர்ந்தது காண்.

(பொ.ரை)

ஒரு சிங்கத்தினது எடை இருக்கக் கூடிய சரிகைகள் நிறைந்த பட்டுச் சேலை, அங்கமெல்லாம் உருகி மெலிந்ததால் தானே அவிழ்ந்து தளர்ந்து விழுகிறதே.

(சி.ரை)

கமருப்பட்டு — வெள்ளிச் சருகையினால் ஆன பட்டுச்சேலை.

159. பாதத்தில் இட்டதொரு தங்கப் பதைக்கம் சிலம்பு கொஞ்சப்
பேதை மெலிந்துருகிச் சிலம்பு பிறழத் தளர்ந்த ழுதாள்.

பாதத்தில் இட்டது ஒரு தங்கப் பதைக்கம் சிலம்பு கொஞ்சப்
பேதை மெலிந்து உருகிச் சிலம்பு பிறழத் தளர்ந்து அழுதாள்.

(பொ.ரை)

கால்களில் போட்டுள்ள சிலம்பு தங்கப் பதைக்கத்துடன், பாதங்கள் மெலிந்ததால் தளர்ந்து போய்ப் பிறழ்ந்து கழருகிற நிலையில் தளர்ந்து அழுதாள்.

## தந்தையிடம் மகள் வினவுதல்

160. இத்தனைப் பேர்களையும் வளர்த்து ஈன்றெடுத்த
கோமானே என்
பத்தாவும் நானிருக்க உனக்குச் சித்தம் இரங்கவில்லை.

இத்தனைப் பேர்களையும் வளர்த்து ஈன்றெடுத்த கோமானே-என்
பத்தாவும் நானிருக்க உனக்குச் சித்தம் இரங்கவில்லை,

(பொ.ரை)

அன்புத் தந்தையே என்னுடன் பிறந்த சகோதர சகோதரிகளையும் வளர்த்து வாலிப மாக்கினீர்களே — இன்று என் கணவனும் நானும் சேர்ந்து வாழத் தங்களுக்கு உள்ளம் இரங்கவில்லையே.

(சி,ரை)

பத்தா — பர்த்தா - கணவன்

இத்தனைப் பேர்கள் — ஹுசைன் குடும்பத்தினர் 72 பேர் இவர்கள் அனைவரும் போர்க்களத்தில் மாண்டனர்.

## தாயின் புலம்பல்

161. தாயார் மனமுருகி விழுந்து தரையில் புரண்டழுது
மாயவினை உனக்கு இன்று வந்ததோ என் மகனே

தாயார் மனம் உருகி விழுந்து தரையில் புரண்டு அழுது
மாயவினை உனக்கு இன்று வந்ததோ என் மகனே

(பொ.ரை)

காசிமின் தாயார் மனம் உருகி விழுந்து தரையில் புரண்டு அழுது அன்பு மகனே! உனக்கு மாயவினை வந்ததோ என்று அழுதாள்.

162. இத்தனை நாள் வளர்த்து உன்னைத் தேடுதடா மகனே
சற்றே முழித்து என்னை ஒருதரம் பாராயோ என் மகனே

இத்தனை நாள் வளர்த்து உன்னைத் தேடுதடா மகனே
சற்றே முழித்து என்னை ஒருதரம் பாராயோ என் மகனே

(பொ.ரை)

அன்பு மகனே! இத்தனை நாள் வளர்த்து வாலிபமாக்கினேன். உன்னைப் பார்க்கத் தேடுதடா மகனே. சற்றே விழித்து ஒரு முறை பாராயோ என் மகனே.

## காசிம் கண்திறந்து பார்த்தல்

163. இத்தனை பேர் புலம்ப ஜனங்கள் எல்லோருமே அழுக - அந்தக்
கத்தன் உதவியினால் காசிம் கண்ணைத் துறந்தார் காண்

இத்தனை பேர் புலம்ப ஜனங்கள் எல்லோருமே அழுக - அந்தக்
கத்தன் உதவியினால் காசிம் கண்ணைத் துறந்தார் காண்.

(பொ.ரை)

இவ்வளவு ஜனங்கள் எல்லோருமே அழுதனர். இறைவனுடைய கருணையினால் காசிம் கண்களைத் துறந்தார்.

## உசேனையும் அம்மாவையும் பார்த்தல்

**164.** கண்ணைத் துறந்தவுடன் இரு கண்களில் நீர் சொரிய-அந்த மன்னர் உசன் முகமும் தங்கள் மாதா முகமும் பார்த்தார்.

கண்ணைத் துறந்தவுடன் இரு கண்களில் நீர் சொரிய - அந்த
மன்னர் உசன் முகமும் தங்கள் மாதா முகமும் பார்த்தார்.

(பொ.ரை)

இரு கண்களைத் துறந்தவுடன் இரு கண்களிலும் கண்ணீர் சொரிய அந்த மன்னர் உசன் முகத்தையும் தங்கள் தாயார் முகத்தையும் பார்த்தார்.

## மனைவி முகம் பார்த்தல்

**165.** மாதா முகம் பார்த்துத் தங்கள் மனைவி முகம் பார்த்து ஆதம் கிளை ஹாசிம் ஹக்கன் விதிப்படியே ஆகிரம் போய்ச் சேர்ந்தார்.

மாதா முகம் பார்த்துத் தங்கள் மனைவி முகம் பார்த்து
ஆதம் கிளை ஹாசிம் ஹக்கன் விதிப்படியே ஆகிரம் போய்ச்
சேர்ந்தார்.

(பொ.ரை)

தாயாருடைய முகத்தைப் பார்த்துத் தங்கள் மனைவி முகம் பார்த்து ஆதம்நபி கிளை வழியில் இறைவன் விதிப்படியே சொர்க்கம் போய்ச் சேர்ந்தார்.

(சி.ரை)

ஆதம் — ஆதம் நபி, முதல் மனிதர்

ஆகிரம் — மறுமை

## ஹுசைன் புலம்புதல்

166. மன்னர் ஹுசேன் புலம்பித் தங்கள் மகளார் முகம் பார்த்து
என்ன செய்வோம் மகளே தலையினில் றப்பும் எழுதினானோ

மன்னர் ஹுசேன் புலம்பித் தங்கள் மகளார் முகம் பார்த்து
என்ன செய்வோம் மகளே தலையினில் றப்பும் எழுதினானோ.

(பொ.ரை)

ஹுசேன் இந்நிலையில் தங்களுடைய மகளின் முகத்தைப் பார்த்து ஆறுதல் கூறுமுகமாக என்னருமை மகளே நாம் இனி என்ன செய்ய இயலும். இறைவன் இப்படிப்பட்ட விதியை உனக்கு முன்பே முடிவு செய் விட்டானே.

167. இத்தனை நாளிருந்து மகளே இன்று மணமுடித்தோம்-உன்
பத்தாவும் நீயுமிருக்க ஒருநாள் பார்த்து இருந்தமில்லை.

இத்தனை நாள் இருந்து மகளே இன்று மணம் முடித்தோம்-உன்
பத்தாவும் நீயும் இருக்க ஒரு நாள் பார்த்து இருந்தோம் இல்லை.

(பொ.ரை)

அன்பு மகளே! எத்தனையோ நாட்கள் வந்து கழிந்தன. அன்றெல்லாம் உனக்குத் திருமணம் செய்யவில்லையே. என்ன காரணத்தினாலோ இன்று திருமணம் செய்து வைத்தோம். நீயும் உன் கணவனும் சேர்ந்திருந்து மகிழ்வுடன் வாழ்வு நடத்துகிற ஒரு நாள் எங்களுக்குப் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லையே.

(சி.ரை)

பத்தா — கணவன்

168. இப்படி நீர் புலம்ப மகளே எப்படி நானிருப்பேன்.
தப்பாது என் மகளே இனிமேல் தரியாது என் சதுரம்
இப்படி நீர் புலம்ப மகளே எப்படி நானிருப்பேன்
தப்பாது என் மகளே இனிமேல் தரியாது என் சதுரம்.

(பொ.ரை)

அன்பு மகளே ! உயிர்க் கணவனைப் பிரிந்து புலம்பும் உன்னுடைய இந்த அவல நிலையைக் கண்ட பின்பு இனியும் நான் எப்படி உயிர் வாழ முடியும். உறுதியாக நான் மடிவேன். என்னுடைய உயிர் தடுத்தாலும் நல்லது மகளே

(சி.ரை)

சதுரம் — உடல்.

# காசிம் மனைவியின் புலம்பல்

169. இப்படியே புலம்ப மகளார் எழுந்து தலைவிரித்து
இப்படியென் தலையில் அந்த றப்பும் எழுதினானோ

இப்படியே புலம்ப மகளார் எழுந்து தலைவிரித்து
இப்படி என் தலையில் அந்த றப்பும் எழுதினானோ.

(பொ.ரை)

அன்புத் தந்தை ஹுசைனார் புலம்ப, மகள் எழுந்து கூந்தலை விரித்து இறைவன், என் விதியை இப்படி அமைத்து விட்டானே என்று புலம்பினார்.

170. கட்டின மாங்கலியம் இன்று கழற்றி எறிவேனோ
முட்டியே நொந்து தங்கள் முகத்தில் அறைந்தழுதார்.

கட்டின மாங்கலியம் இன்று கழற்றி எறிவேனோ
முட்டியே நொந்து தங்கள் முகத்தில் அறைந்தழுதார்.

(பொ.ரை)

நிலைத்த வாழ்விற்குக் கட்டிய என்னுடைய தாலியை நான் கழற்றி எறிய வேண்டிய நிலை ஆனதே. என்று எண்ணித்தன் தலையை அருகிலிருந்த சுவற்றில் முட்டி அழுதார். தங்கள் மென் கரங்களால் முகத்தில் அறைந்து அறைந்து அழுதார்.

171 எட்டு வயதெனக்கு என்னோட ஒத்த பெண்கள் கூட
இட்டமுடன் கூடித் திரியாமல் றப்பும் எழுதினானோ

எட்டு வயது எனக்கு என்னோட ஒத்த பெண்கள் கூட
இட்டமுடன் கூடித் திரியாமல் றப்பும் எழுதினானோ

(பொ. ரை)

இறைவனே ! எனக்கு எட்டு வயது தானே ஆனது. என் வயதை ஒத்த பெண்கள் விளையாடி ஓடித் திரிந்து மகிழும் போது நான் அவர்களுடன் சேர்ந்து விளையாடுவதற்கு இயலாமல் என் விதியை அமைத்து விட்டானே

172. வாழுகிற பெண்களுடன் நான் கூடி விளையாட
தாழுமோ யென் மனசு பார்த்துத் தரிக்குமோ என் சதுரம்

வாழுகிற பெண்களுடன் நான் கூடி விளையாட
தாழுமோ என் மனசு பார்த்துத் தரிக்குமோ என் சதுரம்.

(பொ.ரை)

என்னைப் போன்று திருமணம் ஆகிய பெண்களுடன் சேர்ந்து விளையாடுவதற்கும் மகிழ்ந்திருக்கவும் என் மனம் இடம் கொடுக்காதே. என்னை ஒத்தவர்கள் விளையாடும் போது அதனைப் பார்த்துக் கொண்டிருப்பதற்கும் என் உடல் பொறுத் திருக்காதே.

173. கொட்டுக் கலியாணம் பெண்கள் கூட்டத்திலே தயவாய்
இட்டமாய் என் மனது போக ஏங்குமே என்ன செய்வேன்.

கொட்டுக் கலியாணம் பெண்கள் கூட்டத்திலே தயவாய்
இட்டமாய் என் மனது போக ஏங்குமே என்ன செய்வேன்.

(பொ.ரை)

கணவனை இழந்த நிலையில், பிற பெண்களுக்கு நடைபெறும் திருமணங்களுக்குச் செல்ல என்னுள்ளம் தவிக்குமே. ஆனால் என்னால் செல்லவும் இயலாதே. நான் என்ன செய்வேன்.

174. என்னுடன் நீர்பேசி ஒருநாள் இருந்துண்ட றியாமல்
மன்னரே என்னரசே சொர்க்க மாளிகை சேர்ந்தீரோ.

என்னுடன் நீர்பேசி ஒருநாள் இருந்து உண்டு அறியாமல்
மன்னரே என் அரசே சொர்க்க மாளிகை சேர்ந்தீரோ.

(பொ.ரை)

அன்பு மன்னவரே! ஒரு நாள்! ஒரே ஒருநாள்! என்னோடு அருகிருந்துப் பேசி மகிழ்ந்து, நான் உணவைச் சமைத்து என் கைகளால் பரிமாறி என் மணங் குளிர உண்ணாமல், இறைவனின் சொர்க்க மாளிகைக்குப் போய் விட்டீரே!

# கணவனுடன் தானும் இறக்க இறைவனிடம் இறைஞ்சுதல்.

**175.** என்னை விட்டுப் போறீர் காசிமே எப்படி நானிருப்பேன் - அந்த
மன்னரசர் கூடப் போக வல்லோனுதவி செய்வாய்.

என்னை விட்டுப் போறீர் காசீமே எப்படி நானிருப்பேன் - அந்த மன்னரசர் கூடப்போக வல்லோன் உதவி செய்வாய்.

(பொ.ரை)

என் உயிரின் உயிரே! தங்களின் பரிவிற்குப்பின் எப்படி நானிருப்பேன். என் கணவருடனே செல்வதற்கு என் இறைவனே எனக்கு உதவி செய்வாய்.

**176.** ஆதி பெரியோனே என்னைப் படைத்தாளும் றகுமானே அந்த
நீதர் அப்துல் காசிம் கூடப்போக உதவி செய்வாய்.

ஆதி பெரியோனே என்னைப் படைத்து ஆளும் றகுமானே-அந்த நீதர் அப்துல் காசிம் கூடப் போக உதவி செய்வாய்

(பொ.ரை)

இவ்வுலகைப் படைத்துக் காக்கும் இறைவனே ! அருளாளனே ! என் அன்புத் கணவருடன் நானும் இறந்து போக எனக்கு உதவி புரிவாயாக.

(சி.ரை)

ரஹ்மான் — அருளாளன்

177. இன்னும் சில காலம் தனித்திருந்து சலியாமல் - அந்தக்
காரணர் அப்துல் காசிம் கூடப் போகக் கத்தன் உதவி செய்வாய்

இன்னும் சில காலம் தனித்து - இருந்து சலியாமல் அந்தக்
காரணர் அப்துல் காசிம் கூடப் போகக் கத்தன் உதவி செய்வாய்.

(பொ.ரை)

இறைவனே ! என் கணவர் இல்லாது இனியும் இவ்வுலகில் சில காலம் வாழ்ந்து வேதனை அடைந்து நான் நோகாமல் அவருடனே செல்வதற்கு எனக்குதவியருள்வாயாக.

# மருமகளை மாமியார் அணைத்துக் கொள்ளல்

178. சொன்ன மடமயிலாள் எழுந்து சுழன்று தரையில் விழ
- அந்த
மன்னர் உசன் மகளைத் தங்கள் மாமி எடுத்தணைத்தார்.

சொன்ன மடமயிலாள் எழுந்து சுழன்று தரையில் விழ - அந்த
மன்னர் உசன் மகளைத் தங்கள் மாமி எடுத்து அணைத்தார்.

(பொ.ரை)

பலவாறாகப் புலம்பி அழுது கண்ணீர் விட்டுத் தரையிலிருந்து எழுந்த நிலையில், தலை சுழன்று தரையிலே விழுந்தார்- விழுந்ததும் மாமியார் ஓடோடி வந்து மருமகளைத் தன் நெஞ்சோடு எடுத்து அணைத்துக் கொண்டார்.

**179.** மாமி எடுத்தணைத்துத் தங்கள் வயிற்றிலறைந்து கொண்டு
நான்
மாமியோ என் மகளே உனக்கு நல்ல மண முடித்தோம்.

மாமி எடுத்து அணைத்துத் தங்கள் வயிற்றில் அறைந்து கொண்டு
-நான்
மாமியோ என் மகளே உனக்கு நல்ல மணம் முடித்தோம்.

(பொ.ரை)

தரையில் விழுந்த மருமகளை எடுத்து அணைத்த மாமியார் தன் வயிற்றில் அறைந்து கொண்டு புலம்பினார்கள். என் அன்பு மகளே நான் உனக்கு மாமியோ! நாங்கள் உனக்கு நல்ல மணமுடித்தோம்

(சி.ரை)

நல்ல மணமுடித்தோம் — இத்தொடர் முக்காலத்தை உணர்த்தும் நயம் உடையது. நீ வாழவேண்டும் என்பதற்காக நல்லதொரு மணம் செய்தோம். ஆனால் இன்று நீ விதவையானாயே ... நல்ல மணம் முடித்தோம் என்று சலித்துக் கூறுவதாயும் அமைந்துள்ளது. எதிர்கால இருண்ட வாழ்வை எண்ணும் போது நல்ல மணமுடித்தோம் எனக் கூறும் போது வினாவாக அமைகிறது.

180. ஆசை மருமகளே எந்தன் அன்புள்ள நாயகியே
கூசி உடல் கருகி அலறிக் கொதிக்குதே என்ன செய்வேன்

ஆசை மருமகளே எந்தன் அன்புள்ள நாயகியே
கூசி உடல்கருகி அலறிக் கொதிக்குதே என்ன செய்வேன்.

(பொ.ரை)

என் ஆசை மருமகளே, என்னுடைய அன்புள்ள நாயகியே! உன்னுடைய நிலையை நான் பார்க்கும் போது என்னுள்ளம் கூசுகிறதே; என் உடல் கருகுகிறதே! வேதனையால் கொதிக்கிறதே! என்ன செய்வேன்.

(சி.ரை)

கூசி உடல் கருகி — வாழவேண்டிய பருவத்தில் எவ்வித சுகமும் காணாது திருமணம் ஆன அன்றே விதவையும் ஆன நிலையை எண்ணுந்தோறும் திருமணத்தில் அவசரப்பட்டு விட்டோமே என்று எண்ணி உள்ளம் கூசுகிறது. உள்ளத்தில் ஏற்படும் வேதனையை உடலில் வெப்பமாய் உருவாகிச் சுட்டுப் பொசுக்குகிறது.

(சி.ரை)

181. வாடி மயங்குதிப்போ சதுரம் மயங்கித் துடிக்குதிப்போ
ஆவி பறக்குதிப்போ உடல் அங்கம் பதறுதம்மா.

வாடி மயங்குது இப்போ சதுரம் மயங்கித் துடிக்குது இப்போ
ஆவி பறக்குது இப்போ உடல் அங்கம் பதறுது அம்மா.

(பொ.ரை)

உன்னுடைய நிலையைக் காணுகின்ற போதெல்லாம் என்னுடைய உள்ளம் வாட்டம் அடைகிறது. எனக்கு மயக்கம் ஏற்படுகிறதே, என்னுடைய உடல் சோர்த்து துவண்டு அனலில் இட்ட புழுப்போலத் துடிக்கிறதே. உன் உயிர் பிரிந்ததால் நீ படும் துயரங்கண்டு என்னுயிர் பறக்கிறதே. என்னுடைய உடலும் அங்கங்களும் பதறுகிறதே. என் தாயே ! என்ன செய்வேன்

(சி.ரை)

வாடி மயங்குதே — "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" எனும் வள்ளலார் வாக்குப் போல, வாடி நிற்கும் மருமகளைக் காணும் போதெல்லாம் தன்னுயிரும் உடலும் உள்ளமும் வாடி மயக்கம் அடைகிறது.

182, வாழ்ந்து உடனிருக்காமல் இப்படி உன்னை விட்டு மகனார்
தேய்ந்த மதி போல அவர் சொர்க்கமும் போய்ச் சேர்ந்தார்.

வாழ்ந்து உடன் இருக்காமல் இப்படி உன்னைவிட்டு மகனார்
தேய்ந்த மதிபோல அவர் சொர்க்கமும் போய்ச் சேர்ந்தார்.

(பொ.ரை)

மருமகளே ! உன்னோடு இணைந்து இவ்வுலகில் நீண்ட நாட்கள் வாழ்ந்து இருக்காமல், உன்னை மீளாத துயரத்தில் ஆழ்த்தி விட்டு, மகனார் சொர்க்கம் போய்ச் சேர்ந்தார்.

(சி.ரை)

சொர்க்கம் போய்ச் சேர்ந்தார் — இது இஸ்லாமியர் நம்பிக்கையை வெளிப்படுத்துவது. இறைவனுக்காக இனிய உயிரைப் போர்க்களத்தில் போக்குவோரை 'ஷஹீதானா' என்பார். இவர்களுக்குச் சுவர்க்கம் உறுதியாக்கப் பட்டதாகும். இவர்கள் மரித்தவர் பட்டியலில் இரார். இவர்கள் உயிருடனே இருப்பவராவர். 'இறைவன் பாதையில் வெட்டுண்டு இறப்போர் உயிருடன் இருக்கின்றனர். அவருக்கு உணவளிக்கப்படுகிறது" எனத் திருமறை குறிப்பிடுகிறது.

183. அய்யோ மருமகளே துனியாவில் ஆசையும் காணாமலே பொய்யாய் மணமுடித்து உன்னைவிட்டுப் போறாரே என்ன செய்வேன்.

அய்யோ! மருமகளே துனியாவில் ஆசையும் காணுமலே
பொய்யாய் மணமுடித்து உன்னைவிட்டுப் போறாரே என்ன
செய்வேன்

(பொ.ரை)

என் கண்மணியான மருமகளே! இவ்வுலகில் வாழ்ந்து பெற வேண்டிய இன்பங்களை எல்லாம் பெற்று நிறைவான வாழ்வு வாழ்ந்து பார்க்கவில்லையே திருமணம் நடைபெற்றது என்னும் சொல்லையே பொய்யாக்கி விட்டதுபோல் தொட்ட அன்றே பட்டுப்போன வாழ்வைத் தந்துவிட்டு உன்னைப் பிரிந்து தனித்துப் போனாரே என்ன செய்வேன்.

(சி.ரை)

பொய்யாய் மணமுடித்து — திருமணம் நடைபெற்றது மெய்யாய் இருப்பினும் அது ஒரு பொய்த் தோற்றத்தை வழங்கி விட்டதே. திருமணநாளே இறக்கும் நாளான தால் மணநாள் என்பது பிறர்க்குப் பொய்யாய்ப் போனது.

## மாமியார் மயங்கி விழுதல்

184. இப்படியே புலம்பி மயங்கி இளைத்துக் கிறுகிறுந்து
அப்படியே உசனாரகத்தில் அறைந்து விழுந்தழுதார்.

இப்படியே புலம்பி மயங்கி இளைத்துக் கிறுகிறுத்து
அப்படியே உசனார் அகத்தில் அறைந்து விழுந்தழுதார்.

(பொ.ரை)

ருமகளின் துயரத்தைப் பலவாறாகக் கூறி ஆற்றாமையால் புலம்பினார். துன்பம் தாங்காத நிலையில் உடல் சோர்ந்துபோய் தலை கிறுகிறுத்ததில் மயங்கினார். மயங்கிய நிலையிலே தன் அன்புக் கணவர் உசனார் மார்பிலே மோதி விழுந்தார்.

# உசனார் செய்தி கூறியது

185. இத்தனை பேர் புலம்ப சனங்கள் எல்லோருமே தளும்ப - அப்ப
சித்த மனம் தேத்தி உசனார் வாயைத் திறந்தொரு செய்தி சொல்வார்.

இத்தனை பேர் புலம்ப சனங்கள் எல்லோருமே தளும்ப - அப்ப
சித்த மனம் தேத்தி உசனார் வாயைத் திறந்து ஒரு செய்தி சொல்வார்.

(பொ.ரை)

காசிமின் மரணத்தால் தந்தை புலம்ப, தாய் புலம்ப, மனைவி புலம்ப இப்புலம்பல்களைக் கேட்டுக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்த மக்கள் எல்லோரும் செய்வதறியாது தவித்தனர். இந்த நேரத்தில் உசனார் சிறிது மனதைத் தேற்றித் தன்னுடைய வார்த்தையாக ஒரு செய்தியைச் சொல்லத் தொடங்கினார்.

(சி.ரை)

சித்த — சிறிது.
தேத்தி — தேற்றி
தளும்ப — ஒரு நிலையில் இல்லாத

186. ஆதி பெரியோனெழுத்தை அழிக்கவும் கூடாது - அந்த
ஜோதி நபியவர்க்கும் மௌத் உதிக்கவும் தப்பாது.

ஆதி பெரியோன் எழுத்தை அழிக்கவும் கூடாது - அந்த
ஜோதி நபியவர்க்கும் மௌத் உதிக்கவும் தப்பாது.

(பொ.ரை)

வல்லவனாம் இறைவன் மனிதனைப் படைக்கும் முன்பே அவனுடைய இறப்பு நாளையும், நேரத்தையும், இடத்தையும், முறையையும் எழுதி வைத்து விடுகிறான். அந்த எழுத்தின்படி அவன் விருப்பத்தின் படி மரணம் யார் தடுத்தாலும் நிற்காது இவ்வுலக மக்களுக்காக அருட்கொடையாக அனுப்பப்பட்ட முகம்மது நபியவர்களுக்கே மரணம் வந்து விட்டதே! இனி யாரை விடப் போகிறது என்று சொன்னார்.

(சி.ரை)

ஜோதி நபி — முகம்மது நபி — பெருமானாரை 'நூரே முஹம்மதியர்' என்று குறிப்பர் இறைவன் தன் பேரொளியிலிருந்து சிறுதுளியை எடுத்து நபிகளாரை முதன்முதலில் படைத்தான் என்று திருமறை குறிக்கிறது.

மௌத் — மரணம்

## காசிமை அடக்கம் செய்தல்

187. இந்தப்படியே சொல்லி காசிமை எடுத்துக் குளிப்பாட்டி
ஜனாசாத் தொழுது கபுறினில் வைத்துச் சடங்குஞ் செய்தார்.

இந்தப்படியே சொல்லிக் காசிமை எடுத்துக் குளிப்பாட்டி வந்து ஜனாசாத் தொழுது கபுறினில் வைத்துச் சடங்கும் செய்தார்.

(பொ.ரை)

இந்தச் செய்தியைக் கூறிய பின், உசனார் காசீமை எடுத்து வந்தார். காசீமின் உடலை நீரால் குளிப்பாட்டினார். தொழுகை நடத்தி அவருடைய உடலைப் புதைகுழியில் ல்லடக்கம் செய்தார்.

(சி.ரை)

குளிப்பாட்டி — இஸ்லாமியச் சடங்குகளில் இறந்து போனவருடைய உடலை வேதங்கள் கூறி நீரால் கழுவி விடுவர். முழுமை யாகவே குளிப்பாட்டுவர்.

ஜனசாத்தொழுது — இது இறந்த போனவரின் ஆன்ம நலனிற்காகத் தொழும் தொழுகை நின்ற நிலையிலேயே தொழுவர். மூன்று வரிசையில் நின்று தொழுக வேண்டும். இவ்வாறு நின்று தொழு தால் அம்மனிதனின் பாவங்கள் பொறுக்கப்படும் என்று நபிகளார் கூறியுள்ளார்.

கபுறு — இஸ்லாமியர்களைப் புதைக்கும் புதை குழியின் பெயர். இது 6 அடி ஆழம் உடையதாக இருக்க வேண்டும்.

188. வைத்துச்சடங்குஞ் செய்த உசனார் வார்த்தை கண்டவுடன் சிந்தை மனங் கலங்கிச் சனங்கள் சேரப் புலம்பலுற்றார்.

வைத்துச் சடங்கும் செய்த உசனார் வார்த்தை கண்டவுடன் சிந்தை மனம் கலங்கிச் சனங்கள் சேரப் புலம்பல் உற்றார்.

(பொ.ரை)

காசிமின் உடலை மண்ணறையில் வைத்த பின், இறைவனிடம் இறைஞ்சி ஆற்ற வேண்டிய சடங்குகள் முடித்தார் உசேனார். காசிமின் உடலை வைத்து விட்டு ஆற்றிய உரை கேட்ட மக்கள் உள்ளம் கலக்க முற்று அனைவரும் ஒன்று சேர்ந்து புலம்பினார்கள்.

## தொங்கல்

*189.* எங்கும் கருங்கடலிலிருந்த முத்தே
எண்ணி ஏழ்கடல் வாழ்ந்த முத்தே
தங்கக் கருங்கடலிலிருந்த முத்தே
எங்கள் குடிக்கெல்லாம் மாரணி முத்தே
இதுக்கோ இறக்கினான் என் மகனே
அங்கம் பறக்குதே சதுரயெல்லாம் — அல்லா
உனக்கிது பொருத்தம் தானோ

எங்கும் கருங்கடலில் இருந்த முத்தே
எண்ணி ஏழ்கடல் வாழ்ந்த முத்தே
தங்கக் கருங்கடல் இருந்த முத்தே
எங்கள் குடிக்கு எல்லாம் மாரணி முத்தே
இதுக்கோ இறக்கினான் என் மகனே
அங்கம் பறக்குதே சதுரமெல்லாம் — அல்லா
உனக்கிது பொருத்தம் தானோ.

(பொ.ரை)

எல்லாவிடங்களிலும் பரவியிருக்கிற கருங்கடலில் இருந்து வந்த முத்தே. இந்தக் கோலத்தை உனக்குச் செய்துவிடவோ இறைவன் உன்னைப் படைத்தான். என்மகனே என்னுடைய அங்கம் பறக்கிறதே ! இறைவா இந்தச் செயல் உனக்கு விருப்பம்தானோ.

190. தாயார் கருங்கடலுதித்த ரெத்தினம்
வீட்டுக் குடிக்கெல்லாம் புருஷ ரெத்தினம்
விளங்கி யிரங்கிய நான் என் மகனே
ஆடிப்பறக்குதே சரீரமெல்லாம் — அல்லா
உனக்கிது பொருத்தம் தானோ.
தாயார் கருங்கடல் உதித்த இரத்தினம்
வீட்டுக் குடிக்கெல்லாம் புருஷ இரத்தினம்
விளங்கி இறங்கிய நான் — என் மகனே
ஆடிப் பறக்குதே சரீரமெல்லாம் — அல்லா
உனக்கிது பொருத்தம் தானோ.

(பொ.ரை)

உன்னைப் பெற்ற தாயார் கருங்கடலில் உதித்த இரத்தினம் ஒவ்வொரு வீட்டிலும் வாழும் மக்களுக்கெல்லாம் புருஷ இரத்தினமாய் விளங்கிய என் மகனே என் உடம்பெல்லாம் ஆடிப் பறக்குதே இறைவா இந்த நிலை உனக்கு விருப்பம் தானோ !

191. தேடிப்பார்க்குதே சரீரமெல்லாம் சித்தம்
கலங்குதே என்ன செய்வேன்
ஓடித் திரிகின்ற இடங்களெல்லாம் ஒளிவு
மயங்கியே இருளாகுதே
நாடியிருந் தோர்கள் நாட்டமெல்லாம்
நாயன் பாதம் ஆச்சோ என் மகனே
ஆடிப் பறக்குதே சதுரம் எல்லாம்—அல்லா
தனக்கிது பொருத்தம் தானோ.

தேடிப் பார்க்குதே சரீரம் எல்லாம் சித்தம்
கலங்குதே என்ன செய்வேன்
ஓடித் திரிகின்ற இடங்கள் எல்லாம் ஒளிவு
மயங்கியே இருள் ஆகுதே
நாடி இருந்தோர்கள் நாட்டம் எல்லாம்
நாயன் பாதம் ஆச்சோ மகனே
ஆடிப் பறக்குதே சதுரம் எல்லாம்—அல்லா
தனக்கு இது பொருத்தம் தானோ.

(பொ.ரை)

மகனே! உன்னுடைய அழகான உடம்பை நான் தேடுகிறேனே பார்க்கவில்லையே. என்னுடைய உள்ளம் கலங்குகிறதே! என்ன செய்வேன். நீ ஓடித்திரிந்த இடங்கள் எல்லாம் அழகு இல்லாமல் இருட்டாக இருக்கிறதே. உன் நல்வாழ்வை விரும்பி இருந்தவர்களுடைய விருப்பம் எல்லாம் இறைவனுடைய பாதத்திற்குரியதாய் ஆனதோ. என்னுடைய உடம்பு ஆடிப் பறக்குதே. இறைவ இது உனக்கு விருப்பம் தானா.

192. ஆசை மருமகள் படும் துன்யா ஆராகிலும்
பார்க்கக் கூடாது காண்
வாச மகனாரை விட்டிருக்க மனது பொருந்
துமோ வையகத்தில்
பேதை மடந்தையாள் தனித்திருந்தாள் பொழுது
விடியுமோ விடியாது காண்
நேத்தைய தினங்கள் பொறுக்குதில்லை நெடியோன்
தனக்கிது பொருத்தம் தானோ.

ஆசை மருமகள் படும் துன்யா ஆராகிலும்
பார்க்கக் கூடாது காண்
வாச மகனாரை விட்டிருக்க மனது
பொருந்துமோ வையகத்தில்
பேதை மடந்தையாள் தனித்து இருந்தாள் பொழுது
விடியுமோ விடியாது காண்
நேத்தைய தினங்கள் பொறுக்குதில்லை - நெடியோன்
தனக்கு இது பொருத்தம் தானோ.

(பொ.ரை)

என்னுடைய அன்பு மருமகள் பட்டுத்துடிக்கும் இந்த சோக உலகத்தை வேறு யாரும் அனுபவிக்கக் கூடாது. அன்பு மகனை விட்டு நான் தனித்திருக்க என்னுடைய மனது பொருந்தாதே இவ்வுலகத்தில். என்னுடைய மகள் தனித்து இருந்தாள். அவளுக் கென்று விடிவு காலம் வருமோ வாராது. நேற்று நடந்த நிகழ்ச்சி களை இன்று எண்ணினால் என் நெஞ்சம் பொறுக்கவில்லையே இறைவா உனக்கிது பொருத்தம் தானா.